www.tamilarangam.net

# களத்தில்

நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு உறுதிகொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால், எந்த ஒரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

திருவள்ளுவர் ஆண்டு 2028 (26.03.1997) தாயகத்தின் உண்மை நிலவரங்களைத் தாங்கி வரும் செய்தித் தாள் (131) அன்பளிப்பு: 60 p

# சிறிலங்கா வான்படைக்கு இரண்டு பாரிய இழப்புக்கள்

சிறிலங்கா வான்படை, இவ்வாண்டு ஆரம்பம் முதல் தொடர்ச்சியான பாரிய இழப்புக்களைச் சந்தித்து வருகின்றது. இவ் வரிசையில் பங்குனி மாதம் 15ஆம் திகதி 19ஆம் திகதிக்கு இடைப்பட்ட நான்கு நாட்களுள் இரண்டு பாரிய இழப்புக்கள் சிறிலங்கா வான்படை ஏற்பட்டுள்ளது. சிறிலங்கா வான்படையில் உள்ள ஆர்ஜென்டினாத் தயாரிப்பான சக்திமிகு குண்டுவீச்சு விமானமான 'புக்காரா' விமானமொன்று அநுராதபுர விமானத் தளத்திலிருந்து புறப்பட்டு சில நிமிட நேரத்தில் ஆகாயத்தில் வெடித்துச் சிதறியது. இச் சம்பவம் 15ஆம் திகதி இரவு பத்து மணியளவில் நடந்துள்ளது. பத்தாயிரம் அடி உயரத்தில் பறக்கத் தொடங்கிய

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு முன் விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி

சுவிஸ் ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் (ஐ.நா.)



சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 53 வது கூட்டத்தொடர் 13.03.97 இல் ஆரம்பமானது. இக் கூட்டத் தொடரில், சர்வதேச கல்வி அபிவிருத்தி நிறுவனம் சார்பாக 8 அரச சார்பற்ற நிறுவனங்கள் அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தன. ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக, விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. ந. முரளிதரன் அவர்களால் அவ்வறிக்கை வாசிக்கப்பட்டது.

அவ்வறிக்கையானது, அந்நிய ஆதிக்கத்திற்கு அல்லது காலனித்துவ ஆக்கிரமிப்பிற்கு உட்பட்ட மக்களின் சுயநிர்ணய உரிமையும் அதன் பிரயோகமும் என்ற விடயத்தை உள்ளடக்கமாகக் கொண்டிருந்தது.

1. இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமானது, பல தசாப்தங்களாக இடம் பெற்றுவரும் அந்நிய சிங்கள அரசாங்கத்தின் அடக்கு முறைகளாலும் 1957 இன் பண்டாரநாயக்க – செல்வநாயகம் ஒப்பந்தம், 1965 ஆம் ஆண்டின் டட்லி சேனநாயக்க – செல்வநாயகம் ஒப்பந்தம் போன்ற தமிழ் பாராளுமன்ற கட்சிகளுடனான ஒப்பந்தங்களைச் சிங்கள

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## முல்லை மக்கள் மீது முப்படைகளும் தாக்குதல்

✳ முதியவர் இருவர் படுகொலை, நால்வர் படுகாயம்
✳ அன்னை வேளாங்கண்ணி ஆலயம் தரைமட்டம்

சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசின் முப்படைகளும் ஒருங்கிணைந்து கொடூரமான தாக்குதல் திட்டமொன்றை முல்லை மாவட்ட மக்கள் மேல் எட்டு மணி நேரத்துக்கும் மேலாக நடாத்தி முடித்துள்ளன.

இந்தக் குண்டுவீச்சு – பீரங்கித் தொடர் தாக்குதல்களினால் அன்னை வேளாங்கன்னி ஆலயம் முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் வீடுகள் உட்பட பொதுக் கட்டடங்கள் பலவும் இடிந்து போயுள்ளன. அலம்பிலிலிருந்து

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# சர்வதேச சமூகமே கண்ணைத் திற

❒ஐ.நா. முன்பாக கடலலையெனத் திரண்ட தமிழீழ மக்கள் வற்புறுத்தல்
❒சிறிலங்காவின் தமிழின அழிப்பை கண்டிக்குமாறும்
❒தமிழீழத்தில் உண்மையான அமைதி திரும்ப உதவுமாறும் கோரிக்கை

**17-03-97** திங்கட்கிழமை தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மற்றொரு முக்கிய நாளானது. 12,000 க்கும் மேலான புலம்பெயர் வாழ்

**பேரணிப் படங்கள் பிற்பக்கத்தில்......**

தமிழீழ மக்கள், தமிழீழ மக்களுக்கு சிறிலங்கா அரசு இழைக்கும் கொடுமைகளையும் இனஅழிப்புக்களையும் மனிதாயத்துக்கு எதிரான குற்றங்களையும் உடன் கண்டிக்குமாறும் தமிழீழத்தில் உண்மையான அமைதி திரும்ப தாமதிக்காது உதவுமாறும் கோரி, ஐ.நா. சபை முன்பாக அணி திரண்டெழுந்தனர்.

மாலை 3 மணிக்கு ஜெனிவா மாநகரம் தமிழீழ மக்களின் தேசப்பற்றையும் தேசியத்தையும் சர்வதேச உலகுக்கு உணர்த்தும் களமாக மாறியது. ஜெனிவா புகையிரத நிலையை முன்றலில் இருந்து ஐ.நா. நோக்கிப் பேரணி புறப்பட்டதும் ஜெனிவாவின் பேரணி சென்ற பாதைகள் அனைத்தும் தமிழீழத் தேசக் கொடிகளால் நிறைந்தன. "எங்கள் தலைவர் பிரபாகரன்"; "எங்களுக்கு

தொடர்ச்சி 4 ம் பக்கம்...




எமது சொந்தங்களின் அவலங்களை அனைத்துலகமும் அறிய ஐ.நா. வரை அணிதிரண்ட சுவிஸ் வாழ் தமிழீழ தேசபக்தர்கள்...

**உள்ளே...** ☞


❁ "புளுகுணாவி" அதிரடி ; கிழக்குப் போரரங்கின் சாதனை...
❁ வீரசுதந்திரம் வேண்டி நின்றார்....
❁ கனடா (நீதிமன்ற) வழக்கு....
❁ கவிதைக்களம் ...
❁ நியாயங்களும் மாறும்.... (சிறுகதை)
❁ தமிழீழச் செய்திகள்...
❁ மக்கள் பணியில் த.பு.க.(TRO)
❁ போரும் பொருண்மியமும் (TEEDOR)...


**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamilarangam.net



# முல்லைக் கடற்பரப்பில் மீண்டும் பெரும் கடற்சமர்

**24-03-97** திங்களன்று அதிகாலையில் முல்லைத்தீவை அண்டிய கடற்பரப்பில் பெரும் கடற்சமர் இடம் பெற்றுள்ளது. நீண்ட நாட்களுக்குப்பின் நடைபெற்ற பெரும் கடற்சமராக இதை ஆய்வாளர்கள் வர்ணித்துள்ளனர். திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிலங்காக் கடற்படை அணியொன்றின் மீதே, கடற்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். கடற்புலிகளின் இத்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் சிறிலங்காக் கடற்படையினர் மேலதிக படையினரின் உதவியை நாடியபோதே அது பெரும் கடற்சமராக மாறியது.

உதவிக்கு விரைந்த கடற்படைக் கப்பல்கள், கரையோரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகுகள் மீது வெறித்தனமான தாக்குதலை நடாத்தியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதல்கள் சம்பந்தமான சேதவிபரங்கள், இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை அறியப்படவில்லை. ✷

# மட்டக்களப்பில் இராணுவக் குண்டர்கள் பாலியல் வெறியாட்டம்

மட்டக்களப்பில், நான்கு சிங்கள இராணுவக் குண்டர்கள் கூட்டாக, இரண்டு தமிழ்ப்பெண்கள் மீது பாலியல் வெறியாட்டம் நடாத்திய கொடுமை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. சந்திரிகா படையினரின் இப்பாலியல் வெறித்தனத்தினால், கணவனை இழந்த 34 வயதுடைய பெண்ணும் 24 வயதுடைய அவரது சகோதரியும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

17-03-97 திங்கள் இரவு 11 மணியளவில், இச்சகோதரிகளின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த மட்டக்களப்பு மயிலம்பாவெளி இராணுவ முகாமைச் சேர்ந்த நான்கு இராணுவக் குண்டர்களே இவ்வெறியாட்டத்தை நடத்தியுள்ளனர். இக்குண்டர்கள் இவ்விரு பெண்களையும் மிகக் கோரமான முறையில் கடித்து சித்திரவதை செய்ததாகவும் அறியப்படுகின்றது. பாதிக்கப்பட்ட இரு சகோதரிகளும் ஏறாவூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ✷

# திருமலையில் தரைநகர முயன்ற இராணுவத்தின் மீது கடும் தாக்குதல்

**23-03-97** ஞாயிற்றுக் கிழமையன்று திருகோணமலையில் சிறிலங்கா இராணுவத்தின் தரைநகர்வு முயற்சி ஒன்று, விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலால் முறியடிக்கப்பட்டது. கல்லிரவிலில் இருந்து திரியாய் நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்துக்கு எதிராகவே விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டனர். இத்தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் மேலும் பல இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இராணுவ முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் தாக்குதலில், கப்டன் பிரதீபன் (அருமைராசா சசிதரன் -புத்தூர்),

லெப்டினன் நாதன் (செல்லத்தம்பி மகாதேவன்,திருகோணமலை),

வீரவேங்கை புயலவன் (குணலெட்சுமணன் அருட்செல்வன் - வவுனியா)

வீரவேங்கை நல்லதம்பி (கணேஸ் சசிதரன் - திருகோணமலை)

ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தனர். தாயக விடுதலையைத் தாகமாகக் கொண்டு எதிரிப் படையுடன் மோதி, விடுதலைக்காய் தம்மை உரமாக்கிச் சென்ற இம்மாவீரர்களுக்கு எமது வீரவணக்கம். ✷

# வவுனியாவில் பொலிசார் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

வவுனியாவில் பிறவுண் அன்கோ கட்டிடத்தில் நிலை கொண்டுள்ள சிறிலாங்கா பொலிசார் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். 23 . 03. 97 இல் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் ஒரு பொலிசார் கொல்லப்பட 3 பொலிசார் படுகாயமடைந்துள்ளனர். விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். நேசன் (சண்முகம் குணேஸ்வரன், முல்லைத்தீவு) வீரச்சாவு அடைந்துள்ளார். இத் தேசிய மாவீரனுக்கு எமது வீர வணக்கங்கள்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து வவுனியா நகரில் சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து 48 மணி நேரத்திற்கு மேலாக பெருந் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக அறியப்படுகின்றது. ✷

# வடமராட்சியில், புலிகள் தாக்குதல்

**19 . 03 . 97** இல் வடமராட்சி அல்வாயில் சிங்களப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு இராணுவத்தினன் கொல்லப்பட. ஏனையோர் ஓடித் தப்பித்துக் கொண்டனர்.பொதுமக்கள் போன்று உடை அணிந்து நாவலடியிலிருந்து சைக்கிளில் 4ம் சந்தி நோக்கிப் போய்க் கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை. ✷

# 49 வருட சுதந்திர வரலாறு

**ஆசிரிய தலையங்கம் , ஈழநாதம் (தமிழீழம்)**

சிறிலங்கா அரசு தனது 49 வது சுதந்திர தினத்தைக் கடந்த மாசி 4 ஆம் திகதி கொண்டாடியது. தலைநகர் கொழும்பு உட்பட பல பகுதிகளிலும் ஆயுதப்படையினர் உசார்ப்படுத்தப்பட்ட நிலையில், இச்சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. அதாவது சிறிலங்கா தனது 49 வருடகால சுதந்திர வரலாற்றிலேயே இவ்வாறான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. பிரிட்டிஸ்சார் 1948ல் இலங்கையை விட்டு வெளியேறியபோது, இலங்கை சுதந்திரம் பெற்றது என்று கூறப்பட்டதாயினும், அன்று இலங்கையில் பெரும்பான்மையினராகக் காணப்பட்ட சிங்களவர்களின் கைகளுக்கு ஆட்சி அதிகாரம் மாற்றப்பட்டது என்பதே சரியானதாக இருந்தது. ஏனெனில், ஐரோப்பியர் இலங்கைக்குள் பிரவேசித்தபோது, இங்கிருந்த ஆட்சிமுறைகள் அல்லது அமைப்புக்கள் யாவும் முற்றாக மாற்றப்பட்டு, பெரும்பான்மையினர் இலங்கை பூராவும் அதிகாரம் செலுத்தும் ஒரு நிலையைப் பிரிட்டிஸ்சார் உருவாக்கிவிட்டுச் சென்றனர். இந்த நிலையானது இலங்கையின் சுதந்திர தினம் என்பதைவிட, சிங்களவரின் சுதந்திர தினம் என்ற நிலையினையே உருவாக்கியது.

இதன் காரணமாக, இலங்கைத் தீவில் வடக்கு – கிழக்கு தமது தாயகமாகக் கொண்டிருந்த தமிழ் மக்களுக்குச் சுதந்திரம் மறுக்கப்பட்டது. பிரிட்டிஸ்சாரிடம் இருந்து ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட சிங்கள ஆட்சித் தலைவர்கள், இன ஒடுக்கல் அல்லது இன ஒழிப்பு என்ற ரீதியில் தமிழர் தாயகத்தைக் கபளீகரம் செய்ய முனைந்ததோடு, காலத்திற்குக் காலம் இனப்படுகொலையிலும் இறங்கிற்று. இந்த நிலையில், பிரிட்டிஸ்சாரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்றது எனக் கூறிக்கொண்டாலும், அங்கிருந்த ஒரு தொகுதி மக்கள் தமது சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். இதன் காரணமாக, தமிழர்கள் அடக்கு முறை அரசிற்கு எதிராகப் போரிட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இந்த வகையில் சுதந்திரம் பெற்று ஒரு தசாப்தம் நிறைவு செய்வதற்கிடையிலேயே ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் இலங்கையில் ஆரம்பமாகியிருந்தது. ஆனால், சாத்வீக ரீதியில் ஆரம்பமான இப்போராட்டம், காலப்போக்கில் ஒடுக்குமுறை அதிகரிக்கவே சாத்வீகப்போராட்டம் நன்மை எதையும் வழங்கமாட்டாது என்ற நிலையில் அது ஆயுதப் போராட்டமாக மாற்றம் பெற்றது. இவ்வாறு வளர்ச்சி கண்ட போராட்டம், இன்றைய உலகில் நடைபெறும் விடுதலைப் போராட்டங்களில் முனைப்புப் பெற்ற போராட்டமாகவும் முக்கியமான போராட்டமாகவும் மாறியுள்ளது. அத்தோடு, தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டமானது சிறிலங்காவின் சுதந்திரத்தையும் வரையறைக்குள் உட்படுத்தியதாக உள்ளது. இதன் வெளிப்பாடே அவசரகாலச் சட்டத்தின் கீழ், நீண்ட காலத்திற்கு நாட்டை வைத்துக்கொள்ள வேண்டிய தேவையும் பலத்த பாதுகாப்பின் மத்தியில் தலைநகர் உட்பட ஏனைய பல பகுதிகளிலும் சுதந்திரத்தைக் கொண்டாடும் நடவடிக்கைகளை நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்தையும் சிறிலங்கா அரசுக்கு உருவாக்கியுள்ளது.

மேலும் பிரிட்டிஸ்சாரிடம் இருந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டாலும், அது ஒரு முழுமை பெற்ற சுதந்திரமாக இருக்கவில்லை. ஓரளவு அரசியல் சுதந்திரத்தைப் பிரிட்டிஸ்சாரிடம் பெற முடிந்தால்கூட, பொருளாதாரச் சுதந்திரம் ஈட்டப்படவில்லை.

இந்த நிலையானது, சிறு மாற்றங்களுடன் தற்பொழுதும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. முன்னர் பிரிட்டிஸ்சார் மட்டுமே பொருளாதாரத்தைத் தீர்மானிப்பவர்களாக இருந்திருக்கலாம். ஆனால், சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றமானது, சர்வதேசியக் கம்பெனிகளும் சர்வதேசிய நாணய நிதியும் தீர்மானிக்கும் நிலையே உருவாகியுள்ளது. இவ்வாறான ஒரு நிலை உருவாகுவதற்கு வடக்கு – கிழக்கில் இடம் பெற்று வரும் தமிழ்மக்களின் விடுதலைப் போரே முக்கிய காரணமாகிறது.

இந்த வகையில் இலங்கையின் 49 வருட காலச் சுதந்திர வரலாறு, தனது ஒரு சிறுபான்மை இனத்தின் சுதந்திரத்தை ஒரு பெரும்பான்மையினர் நசுக்கமுனைந்ததால், அப்பெரும்பான்மையினர் அச்சுதந்திரத்தையே இழந்து போயுள்ள நிலையை உருவாக்கியுள்ளது. இவ் அரை நூற்றாண்டு வரலாற்றிலே இலங்கைப் பெரும்பான்மை இனம் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை. இந்த நிலையில் இவ் வருடத்தில் மட்டுமல்ல, எதிர் வரும் வருடங்களிலும் கூட இலங்கையில் சுதந்திர தினம் என்பது பெயரளவிலேயே உள்ளதாக மட்டுமே இருக்கமுடியும். ஆகையினால் இலங்கைத்தீவில் சரியான சுதந்திரம் என்பது, இரு இனங்களும் தமது சுதந்திரத்தைக் கொண்டாடும் இந்நாட்கள் உருவாகும் போதே சாத்தியமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## ஐ.நா. சபையின் கவனத்திற்கு இரசாயனப் போர்முறை ஆபத்து

சிறிலங்கா அரசு தமிழீழ மக்களை பகிரங்கமாக இனஅழிப்புச் செய்து வருகிறது என்பது உலகறிந்த உண்மை. இருந்தபோதிலும், இனஅழிப்பு நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு பொறுப்பும் கடமைப்பாடும் உடைய ஐக்கிய நாடுகள் சபை இது குறித்துக் காட்டிவரும் அலட்சியப் போக்கு ஒவ்வொரு நாளும் தமிழீழ மக்களின் உயிரையும் உடமைகளையும் மேலும் மேலும் சிறிலங்கா ஆக்கிரமிப்பாளர்கள் அழித்தொழிப்பதற்கு பச்சைக் கொடியாக உள்ளது என்பது வேதனையான உண்மை.

தற்பொழுது சிறிலங்கா அரசின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாகிய வடக்கு - கிழக்கு ஆளுநர் காமினி பொன்சேகா, சிறிலங்கா அரசிடம் தமிழீழ மக்கள் மேல் இரசாயனப் போர் முறைகளைக் கையாள்வதற்கான திட்டம் ஒன்று உண்டு என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

"நான் அண்மையில் சந்தித்த ஒருவர் எவ்வாறாயினும் இப் போரில் வெற்றி கண்டே ஆகவேண்டும் எனக் கூறினார். எவ்வாறு வெற்றி காண்பது என்று நான் கேட்டபொழுது, இரசாயனப் போர் முறை மூலம் வெற்றி காணலாம் என்பது அவர் கருத்து" என காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பொறுப்பு வாய்ந்த சிங்கள அதிகாரி ஒருவரின் இக்கூற்று தமிழ்மக்கள் மீது சிறிலங்கா அரசு நடாத்தத் திட்டமிட்டுள்ள மிகக் கொடிய இனஅழிப்பு ஒன்றுக்கான முன்னறிவிப்பாக காட்சி அளிக்கிறது.

சிறிலங்கா அரசு, தமிழீழ மக்களைத் தனது பிரசைகளாக நடாத்துவதற்கான உளவியல் ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதே, சிறிலங்கா அரசின் ஒவ்வொரு செயற்பாட்டினாலும் வெளிப்படுத்தப்படும் உண்மையாக உள்ளது. உளவியல் ஒப்பந்தம் இல்லாதநிலையில் தமிழீழ மக்களோ தமிழீழப் பிரதேசங்களோ சிறிலங்கா என்ற அரசின் ஜனநாயக ஆட்சியில் இல்லை என்ற உண்மையை ஐக்கிய நாடுகள் சபை ஏற்றேயாக வேண்டும். மக்களுக்குப் பாதுகாப்பையும் அமைதியையும் ஏற்படுத்த முயற்சிக்காத அரசு ஒன்று, செயலளவில் தானாகவே சட்டவிரோத அரசாக மாறிவிடுகிறது என்பது ஐக்கிய நாடுகள் சர்வதேசச் சட்ட நிபுணர்களின் கருத்து.

இந்நிலையில் சிறிலங்கா அரசினால் சர்வதேசச் சட்டங்களுக்கு மாறான வகையில் உணவு ஆயுதமாக்கப்பட்டு தொழில் செய் உரிமை மறுக்கப்பட்டு, மருந்து என்பன தடைசெய்யப்பட்டு அடிப்படைக் கல்வி வசதிகள் சுகாதார வசதிகள் அற்றநிலையில் தாம் உயிர்வாழ்வதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட இனமாக உள்ள தமிழீழ மக்களுக்கு மனித நேய உதவிகளை நேரடியாக வழங்க வேண்டிய கடமையும் உரிமையும் ஐ.நா. சபைக்கு உண்டு. இவ் விநியோகம் சிறிலங்கா அரசால் முறைமையாக மேற்கொள்ளபடவில்லை என்பது உணரப்பட்டு வருவதினால் நேரடியாக பாதிப்புற்ற மக்களுக்கு அவர்களது புனர்வாழ்வு புனர்நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபடும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் போன்ற பாதிக்கப்படும் மக்களாலேயே நிர்வகிக்கப்படும் ஒழுங்கும் கட்டமைப்பும் உள்ள அமைப்புகளூடாக நேரடியாக வழங்க வேண்டும் என்பதே புலம்பெயர் தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கை.

மேலும் சிறிலங்காவின் இனஅழிப்பு, இனத்துன்புறுத்தல்களை நேரடியாகக் கண்டிக்காமலும் - நிதி வழங்கல்களை - உதவி வழங்கல்களை மட்டுப்படுத்தாமலும் உள்ளவரை, சிறிலங்கா மேலும் மேலும் உற்சாகத்துடன் இனஅழிப்புத் திட்டங்களை வேகப்படுத்தியும் அகலப்படுத்தியும் வரும். எனவே, தமிழீழ மக்கள் பகிரங்க இனஅழிப்புக்கு உள்ளாகும் நிலைக்கு சர்வதேச அமைப்புகளின் அலட்சியமும் ஒரு காரணமாக உள்ளது என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகி வருகிறது.

மக்களது உண்மைப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாத எந்தவொரு முயற்சியும் உரிய பலனை எய்தமாட்டாது. இதனை நன்குணர்ந்த பொதுநலவாய பாராளுமன்றச் அமைப்பைச் சேர்ந்த 19 நாடுகளைக் கொண்ட 80 பேர் கலந்து கொண்ட மாநாடு ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையினை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. பல சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வருகின்றன.

ஆயினும், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தையோ அல்லது தமிழிழ விடுதலைப் புலிகளையோ யதார்த்த ரீதியான அணுகுமுறைகளுடன் நோக்குவதற்குச் சிங்கள பௌத்த பேரினவாத சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசு, ஒருபொழுதும் உண்மை முயற்சிகளை மேற்கொள்ளமாட்டாதென்பதே கடந்தகால வரலாறும் நிகழ்கால வரலாறும் எடுத்துக்காட்டும் உண்மை.

எனவே, சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அங்கீகரிப்பதன் மூலமே சிறிலங்கா அரசின் மேல் உண்மை அழுத்தங்களை ஏற்படுத்தி பாதுகாப்பான அமைதி தமிழீழ மக்களுக்கு கிடைக்க வழி சமைக்க முடியும். இதனைச் செய்ய தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் தமிழீழ மக்களின் உயிருக்கும் உடமைக்கும் உட்கட்டுமானங்களுக்குமான சிறிலங்காவின் அச்சுறுத்தல்களும் அழிப்பு நடவடிக்கைகளும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். இதுவே இரசாயன போர்முறையை கையாளக்கூட சிறிலங்காவைச் சிந்திக்க வைத்துள்ளது. இந்த யதார்த்தங்களை உணர்ந்து தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை உடனே அங்கீகரிக்க வேண்டிய கடப்பாடு ஐக்கிய நாடுகளுடையதாக உள்ளதென்பதையே புலம்பெயர் தமிழீழ மக்கள் ஜெனிவாவில் 12,000க்கும் மேல் அணிதிரண்ட காட்சி சான்று பகர்கின்றது. ✷

## தவிர்க்க முடியாத இழப்பு?

ஆசிரிய தலையங்கம் , ஈழநாதம் - தமிழீழம்

"யுத்தத்தின் போது பொருட்சேதம் ஏற்படுவது இயற்கையானதே. முன்னைய அரசால் 13 ஆண்டுகள் நீடித்த யுத்தத்தை தற்போதைய அரசு விரைவில் முடிவுக்குக் கொண்டுவரும்" இவ்வாறு, புக்காரா விமானம் பொலனறுவையில் வீழ்ந்து நொறுங்கியதைக் குறித்து பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கண்டனத்தின்போது பிரதிப்பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார். சேவையில் ஈடுபட்டுள்ள விமானம் ஒன்று வீழ்வதும் அதற்குப் பல்வேறு காரணிகள் இருப்பதும் நடைமுறையில் உள்ள ஒரு விவகாரம்தான். ஆனால், புக்காரா விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டுவீழ்த்தப்படாத பட்சத்தில் அமைச்சர் அனுருத்த ரத்வத்த விமானம் வீழ்ந்தது குறித்து அளித்துள்ள பதிலானது சரியானதா என்பது கேள்வியே. ஏனெனில், யுத்தத்தில் ஈடுபட்டுள்ள விமானம் சுட்டுவீழ்த்தப்படும் போதிலே மட்டும் அவர் கூறிய பதில் பொருத்தப்பாடானதாக அமையும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் விமானம் வீழ்ந்ததற்கான காரணத்தை அதாவது தொழில்நுட்பக் கோளாறா? காலநிலை பாதிப்பா? விபத்தா? அன்றி விமானியின் தவறா? என்று அரசு குறிப்பிட்டிருக்கவேண்டும். அதுவே பொருத்தமான பதிலாக அமைந்திருக்கும். ஆனால், அமைச்சரின் பதில் பெருவெட்டாகப் பொறுப்பற்ற ரீதியில் கூறப்பட்டதாகவே உள்ளது. ஆனால், இது தனியாக அமைச்சர் ரத்வத்தை வழி முறை என்று கூறிவிடமுடியாது. ஜனாதிபதி சந்திரிகாவும் பொதுவாக இவ்வாறு பேசும் தன்மைகொண்டவராகவே உள்ளார். "யுத்தம் என்றால் போர்ச் செலவீனம் அதிகரிக்கும். விலைவாசி அதிகரிக்கும். இது தவிர்க்கமுடியாதது. இதனை மக்கள் தாங்கிக்கொண்டே ஆக வேண்டும்" எனப் பலதடவை அவர் கூறியுள்ளார். ஒரு வகையில் யுத்தம் என்பது இடம்பெற்றால் பொருட்செலவும், உயிரிழப்பும் ஏற்படும் என்பது சரியான வாதமே. ஆனால், நடைபெறும் போரானது தேசிய நலனைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டியதோடு, போரில் வெற்றி பெற்றால் கூட அதனால் ஏற்படும் இலாபம் யுத்தத்தைவிட அதிகமானதாக இருக்கவேண்டும் என்பதே அவசியமானதாகும். ஆனால், சந்திரிகா தலைமையிலான அரசு நடத்தும் போரானது சிறிலங்காவின் தேசிய செல்வங்களை அழிப்பது மட்டுமல்ல, போரில் வெற்றிபெற முடியாது என்பதும், அவ்வாறு இயற்கைக்கும் மீறியதாக வெற்றி பெற்றுவிடினும் கூட அதன் இழப்பிற்கு அதிகமான இலாபத்தைப் பெற்றுவிடமுடியாது. ஏனெனில், சிறிலங்கா மேற்கொள்ளும் போரானது சிறிலங்காவை மீட்கமுடியாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கவைத்துள்ளதோடு, தேசிய செல்வத்தை முற்றாக நிர்மூலம் செய்வதாகவே உள்ளது. ஆகையினால், யுத்தம் சிறிலங்காவை மீளமுடியாத ஒரு அழிவிற்கு இட்டுச்செல்கின்றது என்று துணிந்து கூறமுடியும். அடுத்த அம்சத்தை நோக்கின், அரசு கூறிக்கொள்வது போன்று விடுதலைப் புலிகள் போரில் பலவீனப்பட்டுப் போய்க்கொண்டிருப்பதாக ஒன்றும் இல்லை. இதனை அண்மையில் சிறிலங்கா இராணுவம் எதிர்கொள்ளும் பாரிய இழப்பிற்குள் இருந்து புரிந்து கொள்ள முடியும். அதாவது, விடுதலைப் புலிகள் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளும் ஒவ்வொரு தாக்குதலும் ஆயுதப்படையினருக்குப் பெரும் உயிரிழப்பையும், உடமை இழப்பையும் ஏற்படுத்துபவனவாக இருப்பதில் இருந்தே புலிகள் பலம் பற்றிப் புரிந்துகொள்ள முடியும். இந்த நிலையில் போர் விரைவில் முடிவுக்கு வரும் என ஜனாதிபதி, பிரதிப்பாதுகாப்பமைச்சர் உட்பட ஆளும் கட்சியினர் கூற முனைவதானது, இவர்கள் யுத்தகள நிலைக்கு மாறான தகவல்களை வெளியிடுவது மட்டுமல்ல, முரண்பாடாகப் பேசுபவர்களாகவும் உள்ளனர் என்பதையும் வெளிக்காட்டுகின்றது. அதாவது இவர்கள் கூறுவது போன்று, இறுதிக்கட்டத்தை அடைந்து கொண்டிருக்கும் ஒரு போரில் என்றுமில்லாத அளவில் ஆயுதப்படையினர் எவ்வாறு உயிர் மற்றும் ஆயுத, தளபாட இழப்புகளைச் சந்திக்கமுடியும்? இந்த ரீதியில் யுத்தகள நிலைக்கு மாறாகத் தகவல்களை வெளியிடும் அரசு, தொடரும் யுத்தம் குறித்து சரியானதும் பொறுப்புணர்வு ரீதியானதுமான தகவல்களை வெளியிட வேண்டும். போரில் உயிரிழப்புக்கள் ஏற்படுவதும் பொருள் அழிவுகள் ஏற்படுவதும் சகஜம் தான். எனினும், வெற்றிபெற முடியாது எனத் தெரிந்த பின்னும் யுத்தத்தில் பலரைப் பலியிட முனைவதும் பெரும் பொருட்செலவைச் செய்வதும் வரட்டுத்தனமானதே ஆகும். ஏனெனில், புத்திசாலிகள் எவரும் இவ்வாறான காரியங்களில் ஈடுபடமாட்டார்கள். ✷

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள்.

உங்கள் ஆக்கங்களை 25 - 04 - 1997 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**'Kalathil',Eelam House,202Long Lane,LondonSE1 4QB.**

களத்தில் ஆசிரியர் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நாட்டின் வளங்கள் தமிழர்களை கொல்ல பயன்படுகிறது

# வவுனியா அகதிகள் தடைமுகாம் 2ஆம் உலகப்போர் வதைமுகாமே!

### -கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின

"நாட்டின் வளங்கள் அந்நிய நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு, அதன் மூலம் ஈட்டப்படும் பணத்தைக் கொண்டு பல நவீன ஆயுதங்கள் வாங்கப்பட்டு வருகின்றன.

இவ் ஆயுதங்கள் வடக்கு - கிழக்கு மக்களைக் கொல்வதற்கே பயன்படுத்தப்படுகின்றன. இன்று வடக்கு - கிழக்கை மீட்பதாகக் கூறிக்கொண்டு அம் மக்களை கால்நடைகளைப் போல் வேறுபகுதிக்கு இவ் அரசு விரட்டியடித்துக் கொண்டிருக்கிறது. வவுனியா அகதிகள் தடைமுகாம்கள் 2வது உலகப் போர் காலத்தில் நாசிகளால் அமைக்கப்பட்ட வதைமுகாமாகவே காட்சி அளிக்கின்றன"

இவ்வாறு சிறிலங்காவின் நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். ✷

## சர்வதேச சமூகமே கண்ணைத் .....

வேண்டும் தமிழீழம்", "சர்வதேச சமூகமே கண்ணைத் திற" போன்ற உணர்வுபூர்வமான கோசங்களால் ஜெனிவா நகரமே அதிர்ந்ததாகச் செய்தியாளர்கள் வர்ணித் துள்ளனர். தமிழீழ மக்களின் அவலங்கள் எடுத்துரைக்கப்பட்டன. சொந்தங்கள், உறவினர்கள், உற்ற நெஞ்சங்கள் உணவின்றித் தமிழீழத்தில் சிறிலங்காவால் தவிக்க வைக்கப்படுவதினால் வேதனை கொண்டு வீறுகொண்டெழுந்த புலம்பெயர் தமிழீழ மக்கள், "எங்கள் மக்களுக்கு உணவு கிடைக்கச் செய்யுங்கள், மருத்துவ வசதி கிடைக்கச் செய்யுங்கள்", "பிஞ்சுத் தமிழ்க் குழந்தைகளையும் கொல்லும் நச்சுக் குணச் சந்திரிகா அரசை கண்டியுங்கள்" என தமிழ், பிரெஞ்சு, ஆங்கில மொழிகளில் மக்கள் இட்ட கோசங்கள், மனித உணர்வுள்ள மக்களை எல்லாம் கவலை கொள்ளச் செய்தது எனச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். யாழ். குடாநாட்டுக்குள் தமிழ் மக்கள் நூற்றுக்கணக்கில் காணாமல் போவது குறித்தும், சிறிலங்கா இராணுவத்தினரால் இனத்துன்புறுத்தல்கள், பாலியல் வன்முறைகள், இனப்படுகொலைகள், பாலர் முதல் பள்ளி மாணவர் ஈறாக முதியவர் வரை சிங்கள இராணுவத்தினரால் ஒடுக்கப்படுவதைக் கண்டித்தும், தென் தமிழீழம் முதல் வன்னி, முல்லைத்தீவு, மன்னார் ஈறாக தமிழீழத் தேசமெங்கும் சிறிலங்கா நடாத்தும் இராணுவ அராஜகங்கள் குறித்து ஆத்திரக் குரல் எழுப்பியும் தமிழீழப் புலம்பெயர் மக்கள், தமது மக்களின் அவலங்களை சர்வதேச உலகுக்கு எடுத்துக் கூறும் களமாக பேரணியைப் பயன்படுத்தியதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பிரதிநிதி நடராஜா முரளிதரன், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், பிரித்தானிய மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த டியற்றி ஆகியோர் முன்னணியில் வர ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் ஐ.நா. சபை வளாகத்தை நோக்கி முன்னேறிய இத் தமிழீழ மக்கள் பேரணி, மாலை 4.30 மணிக்கு ஐ.நா. சபை வளாக முன்றலைச் சென்றடைந்தது.

### தேசவணக்கத்துடன் பொதுக்கூட்டம்

ஐ.நா.வின் வளாக முன்றலில் தமிழீழத் தேசக் கொடியினை ஏற்றிவைத்து, தேச வணக்கம் செய்து தமிழீழத் தேசிய மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி "நம்புங்கள் தமிழீழம், நாளை பிறக்கும்" என்ற தேச விடுதலைப் பாடலுடன் பொதுக்கூட்டத்தை ஆரம்பித்தனர் தமிழீழப் புலம்பெயர் மக்கள்.

இப் பொதுக்கூட்டத்தில் மனித உரிமைக்காகக் குரல் கொடுத்துவரும் ஆங்கிலப் பெண்மணி டியற்றி, டென்மார்க் அகதிகள் அமைப்பின் பிரதிநிதி டோரிட், குர்திஸ்தான் விடுதலை முன்னணியைச் சேர்ந்த ரோஸ், தமிழீழ ஒருமைப்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திருமதி மட்லீன் மைக்கல், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம், தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பிரதிநிதி நடராஜா முரளிதரன் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினர்.

### எமது மக்கள் செத்து மடிகையில் சர்வதேச சமூகம் மௌனம் காப்பதேன்?

"தமிழீழத்தில் சிறிலங்காவின் பேரினவாத ஆக்கிரமிப்புக் கரங்களின் கொடூரத் தன்மைகளில் சிக்குண்டு எம் மக்கள் நாளாந்தம் செத்து மடியும் நிலை கண்டும், சந்திக்கும் அவலங்களின் கொடுமை கண்டும் சர்வதேச சமூகம் அலட்சியமாக மௌனமாக இருப்பதேன்?" என உணர்வுபூர்வமாகப் பேசிய திரு. நடராஜா முரளிதரன் அவர்களின் பேச்சு ஐ.நா.வின் முன்றலில் நீதியின் குரலாக ஒலித்தது.

மேலும் அவர் உரையாற்றுகையில், "அங்கு எமது தாயக அவலங்களில் மெத்தனமாக இருக்கும் மேற்குலகம் இங்கு அகதிகளுக்கு பலவகையிலும் நெருக்கடிகளைக் கொடுத்து வருவதுடன், உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையிலும் தமிழீழ மக்களுக்கு இனங் காணக்கூடிய அச்சம் நிலவும் சிறிலங்காவுக்குத் தமிழீழ அகதிகளை திருப்பி அனுப்ப முயற்சிப்பது வேதனைக்குரிய விடயம்" எனவும் குறிப்பிட்டார். "இந்த நாடுகள் எமது தார்மீக உரிமையினைப் புரிந்து கொண்டு எமது நியாயமானதும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவானதும் அத்தியாவசியமானதுமான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும்" எனப் பகிரங்கக் கோரிக்கையும் விடுத்தார். "ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்புக்கள், எமது மக்களின் அவலங்களைத் துடைக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனவும் புலம்பெயர் தமிழீழ மக்கள் தமது தாயகத்தின் தேசிய விடுதலைக்காக மேலும் மேலும் உற்சாகத்துடனும் உத்வேகத்துடனும் உழைக்க வேண்டும்" எனவும் கேட்டுக் கொண்டார்.

### நாமே எம்மக்கள் துன்பங்களை எடுத்துரைக்க வேண்டும்

#### - குமார் பொன்னம்பலம்

இக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய குமார் பொன்னம்பலம் அவர்கள், "தமிழீழ விடுதலைப் புலிகளின் இலச்சினை பொறித்த மேடையில் இன்று நான் உரையாற்றுவது எனக்குக் கிடைத்த பெருமையே. இதற்காக நான் பயப்படவில்லை. கொழும்புப் பத்திரிகைகள் எனது உரையை திரிபுபடுத்தி வெளியிட்டாலும் நான் அஞ்சப் போவதில்லை. எமது மக்களின் அவலங்களை சர்வதேச சமூகத்தின் முன்பாக நாமே எடுத்துரைக்க வேண்டும். சிறிலங்காவின் ஒற்றையாட்சித் திட்டத்தின்கீழ் நின்று எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. எனது தந்தையும் அதனையே வலியுறுத்தினார். இன்று தமிழர்களின் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொண்டு வலம்வந்து கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்கள் நிராகரிக்கப்பட வேண்டும். விடுதலைப் புலிகளே தமிழீழ மக்களின் உண்மையான பாதுகாவலர்கள்" எனத் தெளிவாக எடுத்துக் கூறினார். ✷

## சிறிலங்கா வான்படைக்கு...

விமானம் வெடித்துச் சிதறிய தாகவும் விமானமோட்டி ராஜபக்ஸா, பரசுட்டின் உதவியால் தரை இறங்கி தப்பித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு இடையில் சிறிலங்கா அரசிற்கு மற்றொரு பாரிய இழப்பு முல்லைத்தீவு அலம்பில் ஆகாயப் பரப்பில் ஏற்பட்டது. முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் சிறிலங்காவின் முப்படைகளும் இணைந்து மக்கள் மீதும் மக்கள் குடியிருப்புக்கள் மீதும் மிகமோசமான தாக்குதலை நடாத்திய மறுநாள் 19ஆம் திகதி தாக்குதல் நடாத்த இப் பகுதிக்கு விரைந்த ரஸ்யத் தயாரிப்பான எம்.ஐ-24 தயாரிப்பு உலங்கு வானூர்தியைச் சிறிலங்கா இழந்துள்ளது. பலாலி விமானத் தளத்தில் இருந்து காலை 10.45 மணியளவில் தாக்குதலுக்கு இரு உலங்கு வானூர்திகள் புறப்பட்டன எனவும் அதில் ஒன்றையே சிறிலங்கா இழந்ததாகவும் தெரிய வருகிறது. இவ் உலங்கு வானூர்தியில் ஒரு ரஸ்ய விமானியுடன் மற்றும் ஏழு சிங்கள வான்படையினர் உடன் சென்றனர் எனவும் இவர்கள் அனைவருமே இழக்கப்பட்டு விட்டனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இது வானில் வெடித்துச் சிதறிக் கடலில் வீழ்ந்ததை அப் பகுதி மக்கள் கண்டுள்ளனர் எனத் தெரிவித்து ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த தை மாதம் 'கிபீர்' விமானம் கட்டுநாயக்கா விமானத் தளத்திலிருந்து புறப்பட்டு சொற்ப நேரத்தில் வீழ்ந்து நொருங்கியது. இதே மாதத்தில் வை-12 விமானம் காணாமல் போனது. தன்னியக்க வேவு விமானம் தொழில்நுட்பக் கோளாறால் கடலில் வீழ்ந்து மூழ்கியது. மாசி மாதத்தில் அன்ரனோவ் விமானம் இரத்மலானையில் மேலெழுந்து சில நிமிடத்தில் நிலத்தில் வீழ்ந்து இரண்டாகப் பிளந்தது. பங்குனி மாத ஆரம்பத்தில் சீனன்குடாவில் கரும்புலித் தாக்குதலில் வை-12 போக்குவரத்து விமானம் அழிக்கப்பட்டது. தற்போது புக்காரா விமானம். தொடர்ந்து எம்.ஐ.-24. இவ் எம்.ஐ.-24 சிறிலங்கா வான்படையால் வடக்கு - கிழக்குத் தாக்குதல்களுக்கு மிகவும் நம்பிக்கையுடன் பாவிக்கப்பட்டு வந்தது. சிறிலங்கா வான்படை பாவித்து வந்த இவ் வகையான நான்கு எம்.ஐ.-24இல் மூன்று ரஸ்ய நிறுவனம் ஒன்றிலிருந்து வாடகைக்கு அமர்த் தப்பட்டவை, ஒன்று மாத்திரமே சிறிலங்காவிற்குச் சொந்தமானது எனத் தெரிவிக்கும் சர்வதேச செய்தி நிறுவனங்கள் அதில் எதை சிறிலங்கா இழந்தது எனத் தெரியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளன. ✷

## முல்லை மாவட்ட மக்கள் ...

சாலை வரையிலான மீனவக் கிராமங்கள் கடும் பாதிப்பை அடைந்துள்ளன. அகதிகளாக்கப்பட்ட மக்கள் உடுப்புக்குளம், குமுழமுனை, தண்ணீரூற்று, முள்ளியவளை போன்ற பகுதிகளில் தஞ்ச மடைந்துள்ளனர்.

முதியவரான இரத்தினம் (70), சின்னத்தம்பி தங்கவேலாயுதம் (56) எனும் பொதுமக்கள் சிறிலங்காப் படைகளின் கொடூரத்தால் படுகொலைக்குள்ளாகினர். இவர்கள் இருவரும் ஒட்டிசுட்டானைச் சேர்ந்தவர்கள் என அறியப்படுகிறது.

மேலும் ஒட்டிசுட்டானைச் சேர்ந்த பொன்னர் மகேந்திரன் (45), அவரது மனைவி கமலநாயகி, மகன் கமலவேல் (2), மற்றும் நெடுங்கேணியைச் சேர்ந்த சந்திரமோகன் (19) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விதம் பொதுமக்களைப் படுகொலை செய்யும் சிறிலங்காவின் சந்திரிகா அரசு, தாம் விடுதலைப் புலிகளின் தளங்களைத் தாக்கியதாக உண்மைக்கு மாறான செய்திகளைப் பரப்பி உள்ளூராட்சித் தேர்தல்களில் பேரினவாத வாக்குகளை தமதாக்க முயற்சித்தது என அவதானிகள் கருதுகின்றனர். ✷

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணை....

அரசுகள் அவமதித்து, தமிழர் மேல் ஆதிக்கத்தைத் தொடர்ச்சியாக நிலைநாட்ட முயன்றமையினாலும் எழுந்த ஒன்றாகும்.

2. இனப் பாகுபாடுகளைத் தடுப்பதற்கும் சிறு பான்மையினரைப் பாதுகாப்பதற்குமான ஐக்கிய நாடுகள் உபகுழுவின் 47 வது அமர்வில் 19 அரசசார்பற்ற நிறுவனங்கள் சமர்ப்பித்த கூட்டறிக்கை வருமாறு:-

"இலங்கைத் தீவில் நிலவும் மிக மோசமான நிலைமைகள் குறித்து, ஐ.நா மனித உரிமைகள் குழுவும் அதன் உபகுழுவும் நூற்றுக்கணக்கான வாக்குமூலங்களைக் கேட்டு விட்டது. 1956 களின் ஆரம்பத்திலும் பின்னர் 1958, 1961 லும் பின்னர் 1972 முதல் 1977 வரை அதிகரித்த வேகத்திலும் 1983 இல் திட்டமிட்ட முறையில் பாரிய அளவிலும் தொடர்ச்சியாக, சிங்கள அரசாங்கங்கள் மேற்கொண்ட அடக்குமுறை

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலை ஆதரவாளர் உண்ணாவிரதப் போராட்டம்

மதுரையில் 'தமிழர் எச்சரிக்கை மாநாடு' நடைபெறவிடாமல் தடைசெய்ததைக் கண்டித்தும், விடுதலைப் புலிகளுக்கு மருந்து கடத்த முயன்றதாக மாலினி, ஈழவேந்தன், சச்சிதானந்தம், ஸ்ரீதர், பாண்டியன், நெற்றிக்கண் ஆசிரியர் ஏ.எஸ். மணி ஆகியோர் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்கை கண்டித்தும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசுவோர் மீது ஏவிவிடப்படும் அடக்குமுறையைக் கண்டித்தும் சென்னை, குறளகம் முன்பாக ஆயிரம் பேருக்கு மேல் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில் நடைபெற்ற இந்த உண்ணாவிரதத்திற்கு பழ. நெடுமாறன் தலைமை தாங்கினார். தமிழ்த் தேச பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளர் பெ. மணியரசன், தமிழ்–தமிழர் இயக்கத்தின் தலைவர்கள் சுபவீரபாண்டியன், தியாகு உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத் தலைவர் ச. மெல்கியோர், தமிழ்நாடு தேசிய பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் மறவன், தமிழர் குடியரசுக் கட்சியின் தலைவர் தீனன், மார்க்சிய–லெனினிய கட்சியின் தலைவர் பன்னீர்ச் செல்வம், புதுவை ஈழ– மக்கள் ஆதரவு கழகத் தலைவர் அழகிரி, பேராசிரியர்கள் கல்யாணி, முனுசாமி, கவிஞர் இன்குலாப், தேனிசை செல்லப்பா, தமிழ்த் தேசிய மகளிர் எழுச்சி இயக்கத் தலைவர் தேன்மொழி மற்றும் 30க்கும் மேற்பட்ட பல்வேறு தமிழர் அமைப்புக்களின் தலைவர்களும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்களும் இந்த உண்ணாநோன்புப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.நெல்லிக்குப்பம் வி.கிருஷ்ணமூர்த்தி உண்ணா நோன்பினைத் தொடக்கி வைத்தார். மக்கள் உரிமை கழகத் தலைவர் பி.வி. பக்தவச்சலம் உண்ணா நோன்பினை முடித்துவைத்தார். காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெற்ற இந்த உண்ணா நோன்புப் போராட்டத்தைக் காண, திரளான மக்களும் மாணவர்களும் குழுமியிருந்து ஆதரவு முழக்கங்களை எழுப்பினார்கள். ✷

தகவல் : பழ. நெடுமாறன், எம்.ஏ., தலைவர் , தமிழர் தேசிய இயக்கம்





## விடுதலைப் புலிகளுடனான அரசியல் தீர்வே விரும்பத்தக்கது அதுவே நிலைத்தும் நிற்கும்

பிரித்தானியாவில் மேற்கு சசெக்ஸ் வில்டன் இல்லத்தில் நடைபெற்ற 19 நாடுகளைச் சேர்ந்த 80 பேர் கலந்து கொண்ட சர்வதேச மாநாடு ஒன்றின் இறுதியில், "விடுதலைப் புலிகளை உள்ளடக்கிய பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வே விரும்பத்தக்கது. அது மட்டுமல்ல, நிலைத்து நிற்கவும் கூடியது" என்ற தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒன்றாகப் பேச்சுவார்த்தை . நடாத்துவதற்கான சர்வதேச சமூகத்தின் ஆதரவு தேவை எனவும் அந்த மாநாட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது. ✷

## அன்னை பூபதி நினைவெழுச்சி

தமிழீழத்தின் பல பகுதிகளிலும் அன்னை பூபதியின் நினைவெழுச்சி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. விடுவிக்கப்பட்ட கிழக்குப் பகுதிகளில் இம்முறை அன்னையின் நினைவெழுச்சியை முன்னிட்டு சிறப்பான ஏற்பாடுகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. வீதிகள் எங்கும் சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள், அலுவலகங்கள், பொது இடங்களில் அன்னையின் திருவுருவப் படம் வைத்து அலங்கரித்து மக்கள் அஞ்சலி செலுத்துகின்றனர். விசேட பூசைகள் வழிபாடுகள் உட்பட சிரமதானப் பணிகள் என்பனவும் அந் நினைவையொட்டி நடைபெறுகின்றன.

தமிழீழத்தின் மீதான இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை கண்டித்து, அவர்கள் உடன் தமிழீழத்தை விட்டு வெளியேற வேண்டுமெனக் கோரி மட்டுநகர் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த அன்னை பூபதி அவர்கள், தனது உண்ணாவிரதத்தை பங்குனி மாதம் 19ஆம் ஆரம்பித்து, சித்திரை மாதம் 19 ஆம் தியாகச் சுடரானார்.

அன்னையின் நினைவைச் சுமந்து புலம்பெயர் வாழ் தமிழ் மக்களும் பல நிகழ்வுகளையும், கவிதைப் போட்டிகளையும் ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றனர். ✷

## மட்டக்களப்பில் நெற்செய்கைக்கு தடை 370,000 தமிழீழ மக்கள் பட்டினி நிலையில்

மட்டக்களப்பில், தமிழ் மக்களின் நெல் உற்பத்தியை முழுமையாக முடக்கும் வகையில் சிங்களப் படையினர் விவசாயிகள் மீது தடைகளையும், நெருக்குதல்களையும் ஏற்படுத்தி வருகின்றனர். மட்டக்களப்பில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர், அதிகளவு நெல் பயிரிடப்படும் படுவான்கரை பகுதியில் நெல் வேளாண்மை செய்யும் விவசாயிகள் அங்கு செல்லக்கூடாது எனப் புதிய தடையை விதித்துள்ளனர். இதனால் பெரும் நெற்செய்கை பாதிப்படைவதுடன், தமிழ் மக்கள் உணவின்றி பட்டினி வாழ்வுக்குத் தள்ளப்படுவர் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. இதனால் இப் பகுதிகளில் வாழும் 370,000 மேற்பட்ட தமிழ் மக்கள் பட்டினி நிலையை எதிர்நோக்கத் தொடங்கியுள்ளனர்.

சிங்கள இராணுவம், படுவான் கரை நோக்கிய தமது இராணுவ நகர்வின்போது நெல்வயல்களை எரித்து நாசப்படுத்தியதும், வவுனியா – மன்னார் வீதியில் மேற்கொள்ளப்பட்ட "எடிபல" ஆக்கிரமிப்பு நடவடிக்கையினால் 12,500 ஏக்கர் நெல்வயல் அழிக்கப்பட்டு நெற்செய்கையை மேற்கொள்ள முடியாதபடி இராணுவம் ஆக்கிரமித்துள்ளதென்பதும் அறிந்ததே. தமிழ் மக்களிற்கு உணவு அனுப்புவதை மறுத்து, தமிழ் மக்களை கொடுமைப்படுத்திவரும் சிறிலங்கா அரசு, தமிழ் மக்கள் மேற்கொள்ளும் உணவு உற்பத்தியைக்கூட அழித்து நாசப்படுத்தி வருகின்றது. ✷

## சாத்தான் வேதம் ஓதுகிறது
## ஐ.சி.ஆர்.சி.யின் ஒத்துழைப்புடன் இராணுவத்தினருக்கு போர்ச்சட்ட போதனை

சர்வதேச உலகை ஏமாற்றுவதற்கான புதிய உத்தியாக சிறிலங்கா அரசு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இராணுவத்தினருக்கு "போர்ச் சட்டம்" குறித்து கருத்தரங்கு ஒன்றை நடாத்தியுள்ளது. சிறிலங்கா இராணுவத்தின் போர்க் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதை சர்வதேச சமூகத்தின் கவனத்திலிருந்து திசை திருப்புவதற்கான ஒரு உத்தியாகவே இந்தப் பயிற்சிக் கருத்தரங்கு இடம்பெற்றுள்ளது.

தமிழ் மக்களை இனத் துன்புறுத்தல், இனக்கொலை, இனஅழிப்பு என்பவற்றுக்கு உள்ளாக்கி இனங்காணக்கூடிய அச்சத்தை அவர்களுக்கு ஏற்படுத்தி, அதன் அடிப்படையில் தாம் விரும்பிய அரசியல் தீர்வை அவர்கள் மேல் திணிக்க வேண்டுமெனும் உணர்வுடன் செயற்படும் சிறிலங்கா, தனது இராணுவத்தினரை மட்டுமல்ல, சிங்களக் காடையரையும் இதற்காகவே பயிற்றுவிக்கின்றது. ஆனால், வெளித்தோற்றத்துக்கு போர் விதிகளைக் கடைப்பிடிக்க விரும்புவோர் போல் நாடகமாடுகின்றது. ✷

## மத்தியஸ்தம் வகிக்க யசர் அரபாத் விருப்பம்

பாலஸ்தீனிய தலைவர் யசர் அரபாத் இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில், தான் மத்தியஸ்தம் வகிக்கத் தயாராக உள்ளதாகத் தமது விருப்பைத் வெளிப்படுத்தியுள்ளார். இலங்கைத் தீவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு வந்த யசர் அரபாத் பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே தமது இவ்விருப்பத்தை பகிரங்கப் படுத்தி உள்ளார். ✷

www.tamilarangam.net



## வவுனியா இராணுவ முகாமருகே இளம் பெண்களின் சடலங்கள்

நீர்வேலியைச் சேர்ந்த குமாரசாமி சுஜிதா, இரம்பைக்குளத்தைச் சேர்ந்த மேகநாதன் ஜெயசுதா ஆகிய இரு இளம் தமிழ்ப் பெண்களின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வவுனியா இராணுவ முகாமுக்கு அருகில் காணப்பட்டுள்ளது.

இவர்கள் சிறிலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் பொழுது தமது சொந்த ஊர்களை விட்டு தமது பெற்றோருடன் இடம்பெயர்ந்து வந்தனர் எனவும், இவர்கள் கொழும்புக்குச் செல்ல வென வவுனியா வந்தபொழுது சிறிலங்காப் படையினரால் தடுக்கப்பட்டு கட்டாய அகதிகளாக முகாமில் அடைக்கப்பட்டனர் எனவும் கூறப்படுகிறது. பின்னர் முகாமில் பெற்றோருடன் இருந்த இப் பெண்கள், இராணுவத்தினரின் கட்டாயப்படுத்தலின் பேரில் வீட்டுக்காரர்களை விட்டு வேறு முகாமுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். அதன் பின்னர் தற்பொழுது அவர்களது சடலங்களையே அவர்களது பெற்றோரால் காண முடிந்துள்ளது. ●

## பணயக் கைதிகளாக பள்ளி மாணவர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களை, அவர்கள் பாடசாலை செல்லும் வழிகளில் தடுத்து நிறுத்தும் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பாளர்கள், அவர்களை தமது சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றனர். வீதியால் போவோர் வருவோரை சோதிக்கவும் வீதியில் சந்தேகத்துக்கிடமாக ஏதாவது காணப்பட்டால் அதனைப் பரிசோதிக்கவும் மாணவர்களை ஆயுதமுனையில் கட்டாயப்படுத்துகின்றனர்.

விடுதலைப் புலிகளின் "ஆக்கிரமிப்பு அகற்றல்" இராணுவ நடவடிக்கைகளை சமாளிக்கும் இராணுவ உத்தியாகவே மாணவர்களை பணயக் கைதியாக்கும் இந்தக் கொடூரச் செயலினை சிறிலங்கா செய்து வருகின்றது. மனித நேயத்துக்கும் உரிமைக்கும் எதிரான இந்தக் கொடிய சர்வதேசக் குற்றச் செயலினால் மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ மக்கள் தமது பிள்ளைகளுக்குப் பாடசாலைக் கல்வியை வழங்கும் அடிப்படை மனித உரிமை கூட மறுக்கப்பட்ட நிலையில் தவிப்பதும் அல்லாமல், தமது பிள்ளைகளின் உயிருக்கும் எவ்வித உத்தரவாதமும் இன்றி அங்கலாய்த்து அச்சமுடன் வாழ்ந்து வருகின்றனர்.

அண்மையில் மட்டக்களப்பிலுள்ள சென் வின்சன்ட் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினர் சிறிலங்கா இராணுவத்தின் கொடுஞ் செயல்கள் குறித்து பலத்த கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி சிறிலங்கா அரசிற்கு அனுப்பியுள்ளனர். ❑

## மார்க்சிய லெனினிய கட்சி நடாத்திய ஈழத்தமிழின பாதுகாப்பு கருத்தரங்கு

ஈழத் தமிழினப் பாதுகாப்புக் கருத்தரங்கு ஒன்று தமிழகத்தின் பெரியார் மாவட்டம் சென்னிமலையில் நடாத்தப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான தமிழக மக்களும் பல முக்கிய அமைப்புக்களும் கலந்து கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக மார்க்சிய – லெனினிய கட்சியினர் நடாத்திய இக் கருத்தரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது. ❑

## விடுதலைப்புலிகளுக்கு எனது ஆதரவு என்றும் உண்டு

-சிவசேனா தலைவர்

"தமிழீழ விடுதலைப் புலிகள் தம் மக்களின் உரிமைகளுக்காகவே போராடுகின்றனர். அவர்கள் இந்தியாவுக்கு எதிரிகளல்ல. எனது ஆதரவு என்றும் அவர்களுக்கு "உண்டு" இவ்வாறு கூறியிருக்கிறார் இந்தியாவின் மகாராஸ்டிர மாநிலத்தைச் சேர்ந்த சிவசேனா கட்சித் தலைவர் பால் தக்கரே. மும்பாயில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பகிரங்கமாகவே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த இந்தியப் பொதுத் தேர்தலில் சிவசேனாக் கட்சி, லோகசபையில் (இந்திய பாராளுமன்றம்) 15 ஆசனங்களைப் பெற்றிருந்தது. இக் கட்சிக் கூட்டணியுடனேயே, தற்போதைய இந்திய அரசு பிரதமர் தேவகவுடாவினால் வழி நடாத்தப்படுகிறது.

இவ்வாறு, இந்தியாவின் முக்கிய தலைவர்களில் ஒருவராக உள்ள பால் தக்கரே அவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றிய ஓர் நேர்மையான கருத்தை வெளியிட்டிருப்பது – இந்திய அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. ◆

## தமிழீழ சகோதரர்களுக்கு தமிழக மக்களின் அஞ்சலி

மன்னார்க் கடலில் மூழ்கி இறந்த தமிழீழச் சகோதரர்களுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தும் கூட்டங்கள் தமிழக பொது மக்களாலும் அமைப்புக்களாலும் பல இடங்களில் நடாத்தப்பட்டுள்ளன. இரங்கற் கூட்டங்களின் ஆரம்பத்தில் அமைதி ஊர்வலங்கள் பலவற்றையும் நடாத்தியுள்ளனர். தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, சென்னை, மதுரை, தஞ்சை, விருதுநகர், நெல்லை போன்ற பல்வேறு நகரங்களிலும் புதுவையிலும் கடந்த 7ஆம் திகதி கறுப்புக் கொடி ஊர்வலங்கள் நடாத்தப்பட்டுள்ளது. திண்டுக்கல்லில் அமைதி ஊர்வலத்திற்கான அனுமதி பொலிசாரால் மறுக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ●

## திருகோணமலை அகதி முகாமில் ஐவர் கைது

திருகோணமலை 4ஆம் கட்டை அகதி முகாமில் தங்கியிருந்த தமிழ்ப் பொதுமக்களில் ஐவர் சிறிலங்காப் படையினரால் திடீரென கைதாக்கப்பட்டனர். விசாரணைக்கென கொண்டு செல்லப்பட்ட இவர்கள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. இவர்களில் ஒருவர் பெண் ஆவார்.

1992இல் இருந்து 1996 வரைப்பட்ட காலங்களில் இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட 460 குடும்பங்களைச் சேர்ந்த 1770 பேர் மேற்படி முகாம்களில் வாழ்ந்து வந்தனர். சிறிலங்காப் படையினர் அகதிகள் முகாமில் கைது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதை அடுத்து, அவ் அகதிகள் முகாமில் உள்ள மக்களிடையே பலத்த அச்சமும் பதற்றமும் நிலவி வருவதாகத் தெரிகிறது. ●

## சீனன்குடா - வவுணதீவு மாவீரர்களுக்கு மகத்தான வீரவணக்க மரியாதை

சீனன்குடாவின் பாதுகாப்பு மிகு வலயத்தை உடைத்து உள் நுழைந்து சாதனை படைத்த கரும்புலிகள் மேஜர் சிற்றம்பலம், கப்டன் நிவேதன், கப்டன் விஜயரூபன் ஆகியோரின் திருவுருவப் படங்கள் அவர்களால் தகர்க்கப்பட்ட வை–12 விமானத்தைப் போன்று அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வைக்கப்பட்டு வன்னியில் ஊர்வலமாக சிவ நகரில் இருந்து புதுக் குடியிருப்பு சிறிசுப்பிரமணியம் வித்தியாலயம் வரை கொண்டு செல்லப்பட்டன. மக்களும் போராளிகளும் கலந்து கொண்ட இவ் ஒரு மைல் நீள ஊர்வலம் சென்ற பாதையெங்கும் மக்கள், குத்து விளக்கேற்றி நிறைகுடம் வைத்து தங்கள் வீரவணக்க மரியாதையைச் செலுத்தினர். சுப்பிரமணிய வித்தியாலய மண்டபத்தில் இரங்கல் கூட்டமொன்றும் இடம்பெற்றது.

வவுணதீவு முகாம் தகர்த்தழிப்பின்போது, வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு மரியாதை செலுத்தும்முகமாக 14–03–97 அன்று மட்டக்களப்பில் வர்த்தகர்கள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தனர். அன்றைய தினம் வாகரை, கரடியனாறு, வவுணதீவு, கொக்கட்டிச்சோலை போன்ற பகுதிகளில் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் வேலைத் தளங்கள் என்பன முழுமையாகத் எமது தேச வீரர்களுக்கு வணக்கம் செலுத்தி நின்றன. மண்முனை, அம்பலாந்துறை படகுச் சேவை அன்றைய தினம் நடைபெறவில்லை. கோவில்களில் சமய வழிபாடுகளும் பூசைகளும் நடைபெற்றன. ●

## வாழைச்சேனை பொலிசார் மோட்டார் தாக்குதல் தமிழ் பொதுமகன் பலி

வாழைச்சேனைப் பொலிசார், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை நோக்கி நடாத்திய மோட்டார் தாக்குதலினால் கருவங்கேணியைச் சேர்ந்த 56 வயதான எஸ். பண்டாரம் எனும் தமிழ்ப் பொதுமகன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 36 வயதான எஸ். ரஞ்சிதமலர் படுகாயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ✲

## மாவீரர்களுக்கான நினைவு நடுகல்

கடந்த ஆண்டு 11ஆம் மாதம் 4ஆம் திகதி, யாழ். குடாநாடு கந்தரோடையில் சிங்களப் படையுடன் நடந்த நேரடிச் சண்டையில் வீரச்சாவடைந்த,

கப்டன் கரன் (செபஸ்ரியன் முத்து, யாழ்ப்பாணம்) இவ்வாண்டு முதலாம் மாதம் 9ஆம் திகதி, பரந்தன் – ஆனையிறவு இராணுவ முகாம்கள் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த,

லெப். கண்ணியன் (கப்ரியல் இருதயநாதன், யாழ்ப்பாணம்)

லெப். மேகலா (நடராஜா விஜயகுமாரி, யாழ்ப்பாணம்),

2ஆம் லெப். சதாசிவம் (லட்சுமணராசா சந்திரசேகரன், யாழ்),

2ஆம் லெப். தேவன் (வைத்திலிங்கம் பிரியந்தன், யாழ்ப்பாணம்),

கடந்த 15ஆம் திகதி இராணுவம் வழிமறித்துத் தாக்குதல் நடாத்தியதில் வீரச்சாவடைந்த,

மேஜர் துளசி (ஆள்வாப்பிள்ளை லம்போதரன், துணுக்காய்)

ஆகிய ஆறு மாவீரர்களுக்கு 22–03–97 அன்று வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் பெருமளவிலான பொதுமக்கள் திரண்டிருக்க நினைவு நடுகற்கள் நாட்டப்பட்டன. ✷

## ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் தமிழீழ மக்கள் நிலை குறித்து அறிக்கை

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 52வது அமர்வு கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது.

இக் கூட்டத் தொடரில் சிறிலங்கா அரச படைகளினால் மேற் கொள்ளப்பட்டு வரும் பாலியல் வன்முறைத் துன்புறுத்தல்கள், மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை ஒன்று, எட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் கையொப்பத்துடன் சர்வதேசக் கல்வி அபிவிருத்தி நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது

சிறிலங்கா அரச படைகளினால் மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமைகள் மீறல்களை வெளிப்படுத்திய அவ் அறிக்கை, சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. ●

## மேலும் நான்கு தமிழ் இளைஞர்கள் காணாமல் போயினர்

சிங்களப் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள வடமராட்சி பொலிகண்டியில் தேடியழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினர் நான்கு தமிழ் இளைஞர்களைக் கைது செய்து கொண்டு போயுள்ளனர். இவர்களது நிலைகுறித்து விசாரிக்கச் சென்ற, கைது செய்யப்பட்ட இளைஞர்களின் உறவினர்களுக்கு, தமக்கு அவர்கள் பற்றி எதுவுமே தெரியாது என இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

பொலிகண்டியைச் சேர்ந்த பொன்னையா சிவமூர்த்தி (28), தம்பித்துரை குபேந்திரராசா (30), பகபதி (22), தேவமனோகரன், கொத்தாவத்தையினைச் சேர்ந்த வீரப்பதிவன் தீபன் (19) ஆகிய இளைஞர்களே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போயுள்ளவர்கள் எனத் தெரியவருகிறது.

www.tamilarangam.net



# வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்றும் கொள்வரோ- என்றும் ஆரமு துண்ணுதற்கு ஆசை கொண்டார் கள்ளில் அறிவைச் செலுத்துவரோ ?

இந்த உலகில் அழகைவிட, அழகான வார்த்தை சுதந்திரம் ஆகும். இதனால்தான் மகாகவி பாரதியார்—

***விண்ணிலிரவிதனை விற்றுவிட்டெவரும் போய்***
***மின்மினி கொள்வாரோ?***
***கண்ணிலும் இனிய சுதந்திரம் போனபின்***
***கைகட்டிப் பிழைப்பாரோ?***
***மண்ணில் இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்***
***மாண்பினையிழப்பாரோ?***
***கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்***
***கைகொட்டிச் சிரியாரோ!***

என்று சுதந்திரத்தின் பெருமையைக் கூறுவார். இதேபோல, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் சுதந்திரத்தின் அருமை பெருமை பற்றிப் பாடுகிறார்.

***தித்திக்கும் பழம் தின்னக் கொடுப்பார்***
***மதுரப் பருப்பு வழங்குவார் உனக்குப்***
***பொன்னே! மணியே! என்றுனைப் புகழ்வார்***
***ஆயினும் பச்சைக் கிளியே அதோ பார்!***
***உன்னுடன் பிறந்த சின்ன அக்கா!***
***வானவீதியில் வந்து திரிந்து***
***தென்னங் கீற்றில் பொன்னூசல் ஆடிச்***
***சோலை பயின்று சாலையில் மேய்ந்து***
***வாழும் மண்ணுந்தன் வசத்திற் கொண்டான்!***
***தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?***
***அக்கா அக்கா என்று நீ அழைத்தாய்***
***அக்கா வந்து கொடுக்கச் சுக்கா மிளகா***
***சுதந்திரம் கிளியே?***

ஆம். சுதந்திரம் என்பது சுக்கும் இல்லை, மிளகும் இல்லை சும்மா பெறுவதற்கு. அதற்கு என்று ஒரு விலை இருக்கிறது. சுதந்திரக் காற்றை சுவாசிக்க விரும்புபவர்கள் அதற்கான விலை கொடுத்தே ஆகவேண்டும். இதற்கு விதிவிலக்கே இல்லை. இதனை உலகில் விடுதலைபெற்ற எல்லா நாட்டு மக்களும் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். அண்மைக் காலத்தில் செச்சினிய மக்கள் ஐயம் திரிபற நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

செச்சினியா கையளவு நாடு. ஆனால், அந்த நாட்டு மக்களது வீரம் கடலளவு. ஒரு காலத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாது, உலகில் வலம் வந்து கொண்டிருந்த இரண்டு வல்லரசுகளில் ஒன்றான உருசியாவோடு முழுதாக இரண்டு ஆண்டுகாலம் (1995–1996) நீடித்த போரில் உருசியாவை செச்சினியா புறங்கண்டுள்ளது. நாற்பதினாயிரம் எண்ணிக்கை பலம் கொண்ட உருசிய படையை தங்கள் மண்ணிலிருந்து செச்சினிய போராளிகள் வாழ்க்கையில் மறக்க முடியாதளவு நல்ல பாடம் படிப்பித்து, ஓடோட விரட்டியடித்துள்ளார்கள். உருசியப் படை தங்கள் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று சொல்லிக் கொண்டு, வீரத்தை களத்தில் போட்டு வெறுங்கையோடு தங்கள் நாடு திரும்பியுள்ளது.

கடந்த மாதத் தொடக்கத்தில், செச்சினியாவில் நடந்த சனாதிபதி தேர்தலில் உருசியப் படையைப் புறங்கண்ட புகழ்மிக்க இராணுவத் தளபதிகளில் ஒருவரான மசடவ் (Maskhadov) வெற்றி வாகை சூடியுள்ளார்.

மசடவ்வின் வெற்றி செச்சினியா உருசியாவோடு ஏதாவது ஒரு வகையில் உறவுவைத்துக்கொள்ளும் என்ற நப்பாசைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. தனது வெற்றியின் பின் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும்போது, "செச்சினியாவின் சுதந்திரம் பேரத்திற்கு அப்பாற்பட்டது" என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக மசடவ் சொல்லியிருக்கிறார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:

"In 1991, Chechnya's independence was settled. Now the only think that remains is recognition of our status by othe countries, including Russia. We want settle for less."

Maskhadov's spokesperson, Meyerbek Vachagavev, went further.

"They are deeply mistaken if they think Maskhadov will give up independence."

"1991 ஆம் ஆண்டு செச்சினியாவில் சுதந்திரம் முடிவாக்கப்பட்டு விட்டது.

இப்போது எஞ்சியிருப்பது எங்களுடைய அந்தஸ்தை, உருசியா உட்பட, மற்ற நாடுகள் அங்கீகரிப்பதே.

**- நக்கீரன் -**

இதைவிட எந்தக்குறைவான தீர்வையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்."

Maskhadov வின் பேச்சாளர் கூறியதாவது, "அவர்கள் (உருசியர்கள்) மசடவ் சுதந்திரத்தை விட்டுக்கொடுப்பார் என நினைத்தால் அது பெரிய தவறாக இருக்கும்.

நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனும் எதற்கும் வளைந்து கொடுக்காத மனமும் இருந்தால் சிறுத்தையும் பெரிய சிங்கத்தை வீழ்த்திவிடும் என்பதற்கு செச்சினிய மக்களின் வீரசுதந்திரப் போராட்டம் அருமையான எடுத்துக்காட்டு.

உருசியப்படை செச்சினியாவின் நகரங்களைக் குண்டுபோட்டுத் தரை மட்டமாக்கினாலும், ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தாலும், சொத்துக்களை நாசமாக்கினாலும் செச்சினியப்படை எதிரியின் எண்ணிக்கைப் பலத்தையோ, ஆயுத பலத்தையோ கண்டு துவண்டு விடாது, கடைசிவரை போரிட்டு வென்றது. பன்னிரண்டு லட்சம் மக்களைக் கொண்ட செச்சினியா இருபத்தியைந்து கோடி மக்கள் கொண்ட உருசியாவைப் போர்க்களத்தில் வெற்றிவாகை சூடியது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முறியடித்துவிட, சிங்களப் பேரினவாதம் கங்கணம் கட்டி நிற்கிறது.

**செச்சினியா மக்கள் உருசிய மேலாண்மையை வெட்டிக்கொண்டது போல, செச்சினியப் போராளிகள் உருசிய இராணுவத்தை செச்சினிய மண்ணில் இருந்து வெளியேற்றியதைப்போல, சிறிலங்கா பௌத்த-சிங்கள ஏகாதிபத்திய அரச இயந்திரத்தை தமிழீழமக்களும், சிறிலங்கா இனவாத அரசின் சிங்கள இராணுவத்தை தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழீழ மண்ணிலிருந்து விரட்டியடிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.**

சிங்களப் பேரினவாதத்திற்கு மஞ்சள் அங்கி அணிந்த பௌத்த தேரர்கள் பிரித் ஓதுகிறார்கள். சிங்கள அரசியல்வாதிகள் சாமரம் வீசுகிறார்கள். சிங்களப் பத்திரிகையாளர்கள் ஆலவட்டம் பிடிக்கிறார்கள்.

"இலங்கைத்தீவு ஒரு நாடு. அது பௌத்த சிங்களவர்களுக்கே உரிய நாடு. எண்ணிக்கையில் சிறுபான்மையரான தமிழர்கள் எமக்கு இருக்கும் 25,000 சதுர மைல் பரப்பு நிலத்தில், அதிலும் கொஞ்சம் கடலில், எஞ்சியிருக்கும் கொஞ்சத்தையும் பிரிக்கப் பார்க்கிறார்கள். நாடு பிரிந்தால் பௌத்தமதம் அழிந்துவிடும். பௌத்த–சிங்களவர் பூண்டோடு ஒழிந்து போவார்கள். எனவே பௌத்த–சிங்களவர் ஒன்றுதிரண்டு ஒரு குடையின்கீழ் போராட வேண்டும்."

இதுவே பௌத்த – சிங்களவர்களின் கடைந்தெடுத்த இனவாதப் போர்ப்பரணியாக இருக்கிறது.

கடந்த டிசம்பர் மாதம் 18ம் திகதியன்று, அகில இலங்கைப் பௌத்த சம்மேளனத்தில் வைத்து 48 சிங்கள அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து "சிங்கள ஆணைக்குழுவை" அமைத்துள்ளது.

காலனித்துவத்திற்குப் பின்னர், சிங்களவர்களுக்கு நடந்த அல்லது நடத்தப்பட்ட சகல அநீதிகளையும் இந்தக்குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறது.

தனது பங்கிற்கு சனாதிபதி சந்திரிகா, இந்த ஆண்டு முடிவிற்குள் விடுதலைப் புலிகளைத் தீர்த்துக்கட்டி விட்டுத்தான் மறுவேலை என்று சபதம் செய்திருக்கிறார். எத்தனை விமானங்கள் வீழ்ந்து நொருங்கினாலும் அத்தனை விமானங்களையும் கோடிக்கணக்கில் பணம் செலவழித்து வாங்கிக் குவிக்கிறார்.

முல்லைத்தீவில், பரந்தனில், ஆனையிறவில் விடுதலைப்புலிகளிடம் இழந்த பலகோடிரூபா பெறுமதியான ஆயுத ங்களை ஈடுசெய்ய சீனாவிடமிருந்து அவசரஅவசரமாக குண்டுகள், பலரக துப்பாக்கித் தோட்டாக்கள், யுத்த டாங்கிகள், கனரகபீரங்கிகள், மோட்டார்கள் இறக்குமதி செய்யப்ப ட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் திடீர் அதிரடித் தாக்குதல்களை முறியடிக்க, 30 தும்பிகளையும் 1,000 கொமா ண்டோக்களையும் கொண்ட விசேட படையணி அமைக்க வேகவேகமாக ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

இந்த இலட்சணத்தில் கொழும்புத் தமிழ்க்குழுக்கள், சந்திரிகா தருவதாகச் சொல்லும் எலும்புத்துண்டுகளுக்காக நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டு அலையோ, அலையோ என்று அலைகிறார்கள்.

ஆனால், செச்சினியா மக்கள் தமிழீழ மக்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறார்கள். சுதந்திரத்தின் அழகையும் அதன் அருமையையும் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துள்ளார்கள். அதற்குக் கொடுக்க வேண்டிய விலைக்கு இலக்கணம் வகுத்துள்ளார்கள். செச்சினியா மக்கள் உருசிய மேலாண்மையை வெட்டிக் கொண்டது போல, செச்சினியப் போராளிகள் உருசிய இராணுவத்தை செச்சினிய மண்ணில் இருந்து வெளியேற்றியதைப்போல, சிறிலங்கா பௌத்த–சிங்கள ஏகாதிபத்திய அரச இயந்திரத்தை தமிழீழமக்களும், சிறிலங்கா இனவாத அரசின் சிங்கள இராணுவத்தை தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழீழ மண்ணிலிருந்து விரட்டியடிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. சிங்கள மக்கள் தங்கள் சுதந்திரத்தைக் கொண்டாடும் பெப்ரவரி 4இல் தமிழ் மக்களாகிய நாங்கள் அந்நியரிடம் இழந்த எங்கள் சுதந்திரத்தை முழுமையாக வென்றெடுக்க சூழுரை செய்து கொள்ள வேண்டும்.

**வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்**
**வேறொன்றும் கொள்வரோ –என்றும்**
**ஆரமு துண்ணுதற்கு**
**ஆசை கொண்டார் கள்ளில்**
**அறிவைச் செலுத்துவரோ?**

www.tamilarangam.net



# சிறிலங்கா தேசிய வருமானத்தில் 32 வீதத்தை போர்க்காகச் செலவிடுகிறது. இந்தியாவின் செலவோ 24.4 வீதமே!

சிறிலங்கா அரசு 1982ஆம் ஆண்டின் செலவைவிட 100 வீதத்தால் 1983இல் தனது பாதுகாப்புச் செலவீனத்தை அதிகரித்தது. 1985ஆம் ஆண்டில் 619.5 கோடி ரூபாவாக இருந்த பாதுகாப்புச் செலவு – 1996இல் 5000 கோடி ரூபாவை எட்டிப் பிடித்து, 1997இல் 6000 கோடி ரூபாவைத் தாண்டியுள்ளது. தேசிய வருமானத்தில் 32 வீதம் பாதுகாப்புச் செலவாக மாற்றப்படுகின்றது.

உலகின் 4வது பெரிய படையைக் கொண்டிருக்கும் இந்தியா கூட, பாதுகாப்புச் செலவாக தனது தேசிய வருமானத்தில் 24.4 வீதத்தையே ஒதுக்கியுள்ளது.

சிறிலங்காவின் பணவீக்கம் ஆகக்கூடிய உச்சவீதமாக 20 – 25க்கு இடையே உள்ளது. ஒவ்வொருமுறையும் சிறிலங்கா இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தூண்டப்படும் பொழுதும் கேள்வித் தூண்டல், பணவீக்கம் ஏற்பட வாய்ப்புப் பிறக்கின்றது. அதேபோல் வரவு–செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையினை ஈடுசெய்வதற்கு பண வெளியீடு மேற்கொள்ளப்படும் பொழுதும் பணவீக்கம் அதிகரித்து பொருளாதார வளர்ச்சி மேலும் மந்தநிலையைக் காட்டுகிறது.

சிறிலங்காவில் மொத்த ஊழியர்கள் அடிப்படையில் 1994ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி 14 வீதமானோர் வேலையற்றோர் எனக் காட்டப்பட்டுள்ளது. போர் நடைபெறும் பிரதேசங்களில் இருந்து சரியான புள்ளிவிபரங்கள் காட்டப்படுவதில்லை. அது மட்டுமல்ல, திட்டமிட்ட முறையில் சிறிலங்காவால் வேலை செய்யும் உரிமை மறுக்கப்பட்டு இன்னலுறும் தமிழ் மக்களின் எண்ணிக்கை கணக்கில் சேர்க்கப்படுவதில்லை.

அவ்வாறே 60,000க்கு மேற்பட்ட தமிழ் மக்களைப் பலிகொண்டும் இன்னும் தொடரும் சிறிலங்காவின் ஆக்கிரமிப்புப் போரின் உட்கட்டுமான அழிவுகளும் புள்ளிவிபரங்களில் இருந்து மறைக்கப்படுகின்றன. அல்லது தன்னிச்சையான முறையில் சேர்க்கப்படுகின்றன.

சிறிலங்காவின் புள்ளிவிபரங்களின் நம்பகத்தன்மையை சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் ஆராயவேண்டிய தேவை உண்டு. அப்படிச் செய்தால் மட்டுமே சிறிலங்காவுக்கு அவை வழங்கும் சர்வதேச உதவிகளின் உண்மை நிலைகளைக் கண்டு கொள்ளலாம். ✷

# யாழ். குடாநாட்டிலேயே மிக அதிகமானோரைக் காணவில்லை

## - மனித உரிமைகள் நிலைய நலிந்த இந்ததிஸ்ஸா

"சிறிலங்காவின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ். குடாநாட்டிலேயே மிக அதிகமானோர் காணாமல் போயுள்ளனர். யாழ். குடாநாட்டில் பதிவாகிய தொகை மின்படி 650க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். ஆயினும் உண்மையில் இத் தொகை இன்னும் அதிகம். முன்னால் பா. உ நந்தா எல்லாவலவின் மரணத்துக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் கூட இப்படிக் காணாமல் போயுள்ளவர்களின் விசாரணைக்குக் கொடுக்கப்படவில்லை." என மனித உரிமைகள் நிலையத்தின் சார்பாக வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், நலிந்த இந்ததிஸ்ஸா பகிரங்கப்படுத்தியுள்ளார். இது தமிழீழ மக்களுக்கு சிறிலங்கா அந்நிய அரசாகவே உள்ளது என்பதை மேலும் தெளிவாக்கியுள்ளது. ✷

# ஐ.நா. மனித உரிமைகள் ஆணை....

நடவடிக்கைகளின் விளைவுகள் என்பதை அவ்வாக்கு மூலங்கள் எடுத்து விளக்கின. இதுவே சட்டபூர்வமான ஆயுத எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் தமிழர் தமது சுயநிர்ணய உரிமையை நிர்ணயிக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது.

3. தமிழீழ மக்கள் ஆதிகாலம் முதலாக இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வரையறுக்கப்பட்ட புவியியல் எல்லைகளில் வாழ்ந்து வருகின்றனர்.

பழமை பொருந்திய பாரம்பரியம், உயிர்த்துடிப்புள்ள கலாச்சாரம், 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை பொருந்திய மொழி என்பவற்றைக் கொண்டவர்களாக தமது பாரம்பரிய தாயகத்தில் ஒன்றாக தாம் ஒருவர் என்ற மன விருப்புடன் வாழ்ந்து வருவதுடன் அந்நிய சிங்கள அரசாங்கத்தின் அடக்கு முறைகள், ஒடுக்கு முறைகளுக்கு எதிராகப் போராடுவதன் மூலம் தமது சுயநிர்ணய உரிமையினைப் பயன்படுத்தி தம்மை 'மக்கள்' எனும் தகுதியுடைவர்களாகக் கட்டியெழுப்பி வாழ்ந்து வருகின்றனர்.

4. தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தமிழ் மக்களுக்கு எதிராகச் சிறிலங்கா தொடுத்துள்ள யுத்தம் சட்டவிரோதமானது என்பது மட்டுமல்ல, நீதியற்றதுமாக உள்ளது.

மேலும் செச்சென்யா (CHECHENYA) பகுதிகளிலிருந்து அண்மைக் காலங்களில் ரஷ்யத் துருப்புக்கள் வாபஸ் பெறப்பட்டதைப் போல் சிறிலங்காவும் தமிழர் தாயகத்திலிருந்து தமது படைகளை வாபஸ் பெற்று, அரசியல் பேச்சுவார்த்தை மூலம் அர்த்தமுள்ள அமைதியான செயற்திட்டத்தினை நோக்கி முன்னேற முயல வேண்டும்.

5. கடந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுக்குப் பின்னர் இதுவரை யுத்தம், ஆயிரக்கணக்கான தமிழ் பொதுமக்கள் சிறிலங்கா இராணுவத்திடமிருந்து தப்பி தமிழர்களின் ஆயுத எதிர்ப்பு கட்டுப்பாட்டில் உள்ள மிகுதியான தமிழர் தாயகங்களை நோக்கி இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ நிர்ப்பந்தித்து விடுகிறது. சிறிலங்காவின் தொடர்ச்சியான பொருளாதாரத் தடைகள், இப்பிரதேசங்களில் தொடர்ச்சியாக வாழும் மக்களின் மனிதாய உரிமைச் சட்டங்களை மறுத்து மருந்து, உணவு போன்ற அடிப்படைத் தேவைகள் இவர்களுக்கு கிடைக்காது தடை செய்கிறது.

6. தமிழ் கிராமங்கள் இனப் பாகுபாடான வகையில் ஆகாய குண்டுவீச்சுகளாலும் தரைவழி சுடுதிறன் பிரயோகங்களாலும் தாக்கி அழிக்கப்பட்டு வருகின்றன. தமிழ் பெண்கள் சிறிலங்காப் படைகளினால் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். காரணமின்றிக் கைதாக்கப்படுதல், இனச் சித்திரவதைகள், படைகளின் பாதுகாப்பில் கைதாகி இருப்பவர்கள் சாகடிக்கப்படுதல் போன்ற பல சம்பவங்கள் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பிரதேசங்களில் அதிகளவில் நடைபெற்று வருவதை அங்கிருந்து கிடைக்கும் அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

7. அமைதின் மேல் கொண்ட சிறப்பான ஆர்வத்தினாலும் எல்லா மனித உரிமைகள் அடிப்படைச் சுதந்திரங்கள், சுயநிர்ணய உரிமை உள்ளடங்களாக முக்கிய மானவை என உணரப்படுவதினாலும் இந்த ஆணைக்குழு,

அ). சிறிலங்கா அரசாங்கத்தை, வடக்கு கிழக்குப் பிரதேசமான தமிழர்களின் தாயகத்திலிருந்து தனது இராணுவ படைகளை விலக்கிக் கொள்ளுமாறு வற்புறுத்த வேண்டும் எனவும்

ஆ). ஆயுதப் போராட்டத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும், தமிழ் மக்கள் தமது அரசியல் அந்தஸ்தை சுயமான முறையில் தீர்மானிக்கும் உரிமையினை முழு அளவில் அங்கீகரிக்கக்கூடிய அரசியல் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் படி வற்புறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறது. ✷


ஆங்கிலத்தில் தமிழர் தன்மான, வீரகாவிய எழுச்சிக் கவிதைநூல் வெளியிடுகள் உலகத்தமிழ் இலக்கியப் பத்திரிகைகள் மூலம்

## தமிழ்க் கவிஞர்களுக்கு அழைப்பு

பேமிங்காம் நூற்றாண்டு இல்லப் பதிப்பகத்தினர் தமிழர் வீரகாவிய எழுச்சிக் கவிதைநூல் ஒன்றிரண்டைக் கூடிய கெதியில் வெளிக்கொணர உத்தேசிக்கின்றனர். தெரிந்தெடுக்கப்படும் பழைய, அண்மைக்கால, சமகாலத் தமிழ்க் கவிதைகள் ஆங்கிலத்தில், இரணைக் கவிதைகளின் உருவில் மொழிபெயர்க்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழில் உருவாகியுள்ள தரமான, இனவுணர்ச்சி, வீரம் பற்றிய இலக்கியப் படைப்புக்களை மேல்நாட்டினருக்கு முறையாக அறிமுகம் செய்து வைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். ஆகவே, இலாபத்தை எதிர்நோக்காது முதலீட்டுப்பணத்தை மீளப்பெறமுடியலாமெனும் எதிர்பார்ப்பினுடன் மட்டுமே நூற்றாண்டு இல்லப் பதிப்பகம் இச் சேவையைச் செய்ய முன்வந்துள்ளது. எனவே, தெரிந்தெடுக்கப்படும் தமிழ்க் கவிதைகளின் மூலவாசிரியர்களின் பெயர்கள் அவ்வவ் இரணைக் கவிதைகளுடன் பிரபல்யமாகக் குறிப்பிட்டு பிரசுரிக்கப்படுவதுடன் அவர்கள் அறிவிக்கும் விலாசங்களுக்கு, வெளிவரவிருக்கும் ஆங்கில நூல்களின் பிரதிகள் ஒவ்வொன்று அனுப்பப்படுமேயல்லாமல் வேறொரு விதமான சன்மானம் ஒன்றும் மூலவாசிரியர்களுக்கு என்றும் வழங்கப்படமாட்டாது. தரமான ஆங்கிலப்படுத்தலுக்கு உசிதமான கவிதைகளே எதுவித பாரபட்சமுமின்றித் தெரியப்படும்.

தரமான தமிழ்மொழி நூல்கள், உலகப்பத்திரிகைகளில் முன் பிரசுரமாகியுள்ள முதன்மையான கவிதைகளே எதிர்பார்க்கப்படுகின்றன. அனேகமாக, ஒவ்வொரு கவிஞரினதும் ஓரிரண்டு கவிதைகளே தெரியப்படுமெனினும், இந் நூலில் தமது கவிதைகளை இரணைக் கவிதைகளின் மூலம் வெளியுலகிற்கு தெரியப்படுத்த விரும்பும் தமிழ்க் கவிஞர்கள், தாமாகவே தெரிந்தெடுத்த தமது சில கவிதைகளுடன் இந்நூல் திட்டத்தில் பங்குகொள்ளத் தம் விருப்பத்தையும் நூற்றாண்டு இல்லப் பதிப்பகத்திற்கு பின்தரும் விலாசத்தில் அவர்களிடமிருந்து அல்லது பத்திரிகைகளிடமிருந்து பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களை நிரப்பி ஒப்பமிட்டு, கவிதைகள் முன் பிரசுரமான விபரங்கள், தம் சரியான விலாசம் முதலிய தகவல்களுடன் அனுப்பவேண்டுமென இத்தால் அழைக்கப்படுகின்றனர்.

அடுத்த கிழமைகளுக்குள், தபாலில் நிரப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களுடன் வந்துசேரும் கவிதைகளையே பரிசீலனைக்கு எடுக்கமுடியும். விண்ணப்பப் பத்திரங்களைச் சில குறிப்பிட்ட உலகப் பத்திரிகைகளின் காரியாலயங்களில் பெற்றுக் கொள்ள முடியும். எனினும், நூற்றாண்டுப் பதிப்பகத்தினரிடமிருந்து இவற்றை நேரே பெற விரும்புவோர் தங்களின் சரியான விலாசமிட்டு, பிரித்தானிய முத்திரைகள் அல்லது சர்வதேசப் பாவனைக்கென விற்பனையாகும் விசேட முத்திரைகளுடன் தம் விலாசமிட்ட தலையுறைகளை நூற்றாண்டு இல்லத்தின் பின்வரும் விலாசத்திற்கு நேரில் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மற்றும்படி கடிதத் தொடர்புகளோ, தொலைபேசித் தொடர்புகளோ நடாத்த வசதிகளோ நேரமோ ஒதுக்கப்படவில்லையென விசனிக்கிறோம்.

**விண்ணப்பிக்க வேண்டிய விலாசம்:**

**Century House, 99 - 101, Sutton Road, Erdington,**

**Birmingham B23 5XA, United Kingdom.**

www.tamilarangam.net



# "இறைமை பொதுவாக இருப்பதே தமிழர் பிரச்சினை! சுதந்திரத் தமிழீழத்தை மீள நிறுவுவதே ஒரே தீர்வு!"

## -தந்தை செல்வா, 1975 இல் தமிழீழ மக்களுக்கும் சர்வதேச உலகுக்கும் விடுத்த பிரகடனம்

தமிழீழ மக்கள் 31-03-1997இல் அமரர் தந்தை செல்வாவின் நூறாவது பிறந்தநாளை தேச நேசத்துடன் நினைவு கூர்கின்றனர்.

இந்நேரத்தில் தந்தை செல்வநாயகம் 1975 தை மாதத்தில் காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவையடுத்து தமிழீழத் தேச மக்களுக்கும் சர்வதேச உலகுக்கும் விடுத்த உத்தியோக பூர்வமான பிரகடனத்தை அதன் முக்கியத்துவம் கருதி முதலில் தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலும் அப்படியே கீழே தருகின்றேன்.

1972ஆம் ஆண்டு சிங்கள பௌத்த குடியரசு அரசியலமைப்பை தமிழர்களின் ஜனநாயக ரீதியான ஒற்றையாட்சிப் பங்களிப்புக்கு பிரித்தானிய அரசு வழங்கிய நிபந்தனைகளை உள்ளடக்கிய சோல்பரி அரசியலமைப்பை வன்முறைப்படுத்தி, இலங்கைப் பாராளுமன்றத்தின் தொடர்ச்சியையும் அறுத்து நவரங்கலாவில் சர்வாதிகார முறையில் தன்னிச்சையாக அன்றைய (இன்றைய) சிறிலங்காப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரகடனப்படுத்தியதை எதிர்த்து தமிழ் மக்களின் தலைவரான தந்தை செல்வநாயகம் தனது காங்கேசன்துறை பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இராஜினாமாச் செய்தார். இதன்மூலம் தமிழ் மக்கள் அனைவரும் சிங்கள பௌத்த பேரினவாதச் சர்வாதிகார குடியரசு அமைப்பை நிராகரிக்கின்றார்கள் என்பதற்கான நேரடி வாக்கு விருப்பைத் தெரிவிக்கும் தீர்மானத் தேர்தலாக காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடாத்தும்படி தந்தை செல்வா சிங்கள அரசிற்கு பகிரங்கச் சவால் விடுத்தார்.

ஆனால், தேர்தலை நடாத்தாது ஜனநாயக விரோதமான தனது சர்வாதிகாரப் போக்கை ஆயுத படைபலத்தால் தமிழர்கள் மீதான குறிப்பாக தமிழ் இளைஞர்கள் மீதான ஆக்கிரமிப்பு முயற்சியாக சிறிமாவோ மாற்றினார். இதனால் தமிழ் மக்கள் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் தமது உயிருக்கும் உடமைக்கும் தமிழீழத் தேசமக்களின் பாதுகாப்புக்காகவும் ஆயுத எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்த நிலையில் 1975ஆம் ஆண்டு தை மாதத்தில் காங்கேசன்துறை இடைத்தேர்தல் நடாத்தப்பட்டது. அதில் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றதன் பின்னர், தந்தை செல்வநாயகம் முதன்முறையாக தமிழீழத் தேசமக்களுக்கு என விடுத்த உத்தியோகபூர்வ பிரகடனமே கீழே தரப்படுகிறது.

"அந்நிய ஆதிக்கத்துக்கு உள்ளாகும் மட்டும் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வேறுபட்ட இறைமையுடன் இத் தீவில் வாழ்ந்து வந்தனர். தமிழ் மக்கள் சுதந்திரத்துக்கான போராட்டத்தில் முழுமூச்சுடன் ஈடுபட்டபோது தமது சுதந்திரத்தையும் தாம் மீளப் பெறுவார்கள் என்ற முழு நம்பிக்கையுடனேயே ஈடுபட்டனர் என்பது ஈண்டு நினைவு கூரப்படவேண்டியதொன்று.

**தந்தையின் கனவை நனவாக்குதல் நம்கடமை.**
**அதுவே நூற்றாண்டு விழாக் காணும் தந்தைக்கு உகந்த பரிசாகும்.**



தந்தை செல்வா

கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக (இந்தக் கூற்று 1975இல் கூறப்பட்டது), எமது அரசியல் உரிமை-களைச் சிங்களவர்களுக்கு சமத்துவமான வகையில் ஐக்கிய இலங்கைக்குக் கீழ் பெற்றுக் கொள்வதற்கு இயலுமான ஒவ்வொரு முயற்சியையும் நாம் எடுத்தோம். ஆயினும் துக்ககரமான உண்மை என்னவெனில், தொடர்ச்சியாக வந்த சிங்கள அரசுகள் அனைத்தும் சுதந்திரத்தினால் வந்த சக்திகளை எமது அடிப்படை உரிமைகளை மறுத்து எம்மை "மக்கள்" என்ற நிலையில் இருந்து கீழே தள்ளுவதற்காகவே பயன்படுத்தி வந்தன என்பதே ஆகும்.

இந்த அரசுகள் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படுவதற்கு இயலுமாக இருந்தமைக்கு, இறைமை தமிழர் களுக்கும் சிங்களவர்களுக்கும் பொது வாக்கப் பட்டமையே காரணமாக உள்ளது.

நான் எனது (தமிழீழ) தேசமக்களுக்கும், தேசம் முழுவதற்கும் இத் தேர்தலின் தீர்ப்பானது தமிழர்கள் தம்மிடையே ஏற்கனவே உள்ள சட்ட பூர்வமான இறைமையைப் பயன்படுத்தி தமிழீழத் தேச மக்களாக சுதந்திரம் பெற தீர்மானித்துவிட்டார்கள் என்ற மக்கள் ஆணையாக அமைகிறது என்பதைப் பிரகடனப்படுத்த விரும்பு கிறேன். தமிழர் ஐக்கிய முன்னணி சார்பாக நாம் இந்த மக்கள் ஆணையை முழுமையாக முன்னெடுத்துச் செல்வோம் என்னும் உறுதி மொழியை நான் வழங்குகிறேன்"

**நான் எனது (தமிழீழ) தேசமக்களுக்கும், தேசம் முழுவதற்கும் இத் தேர்தலின் தீர்ப்பானது தமிழர்கள் தம்மிடையே ஏற்கனவே உள்ள சட்ட பூர்வமான இறைமையைப் பயன்படுத்தி தமிழீழத் தேச மக்களாக சுதந்திரம் பெற தீர்மானித்துவிட்டார்கள் என்ற மக்கள் ஆணையாக அமைகிறது என்பதைப் பிரகடனப்படுத்த விரும்புகிறேன்.**
***- தந்தை செல்வா***

On winning the 1975 Kankesanthurai by-election, token plebiscite, S.J.V. Chelvanayakam, Leader of the Tamil Eelam nation declared:

Through out the ages the Sinhalese and Tamils in the country lived as distinct sovereign people till they were brought under foreign domination. It should be remembered that the Tamils were in the vanguard of the struggle for independence in the full confidence that they also will regain their freedom. We have for the last 25 years made very effort to secure our political rights on the basis of equality with the Sinhalese in a united Ceylon. It is regrettable fact that successive Sinhalese governments have used the power that flows from independence to deny us our fundamental rights and reduced us to the position of a subject people. These governments have been able to do so only by using against the Tamils the sovereignty common to the Sinhalese and the Tamils. I wish to announce to my people and to the country that I consider the verdict at this election as a mandate that the Tamil Eelam nation should exercise the sovereignty already vested in the Tamil people and become free. On behalf of the Tamil United Front, I give you my solemn assurance that we will carry out this mandate.

தந்தை செல்வநாயகம் சிறிலங்கா பாராளுமன்றத்திலும் இதே கருத்தை வலியுறுத்தி சிறிலங்கா பாராளுமன்றத்திற்கு தமிழீழ மக்களை ஆளும் உரிமை இல்லை என்பதை உலகுக்கு தெளிவுபடுத்தி தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை சட்டபூர்வமாக மாற்றினார்.

இந்தச் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தின் அடிப்படையில் 1976 வைகாசி 14ஆம் நாள் வட்டுகோட்டையில் தந்தை செல்வநாயகம் தலைமையில் கூடிய தமிழர் ஐக்கிய முன்னணி மாநாடு "தமிழீழத் தேசப் பிரகடனத்தை" பிர-கடனப்படுத்தி தமிழர் ஐக்கிய முன்னணியினை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாக மாற்றியமைத்துக் கொண்டது. இந்த, தமிழீழத் தேசப் பிரகடனத்திற்கான மக்கள் குடியொப்பமாகப் பொதுத் தேர்தலை எதிர் கொள்வது என தந்தை செல்வா முடிவெடுத்து இருந்தார். ஆயினும், 1977 சித்திரை 25இல் தந்தை செல்வநாயகம் அமரரானார். இருந்த போதிலும், 1977 வைகாசி 22 பொதுத் தேர்தல் தமிழீழத் தேசப் பிரகடனத்துக்கான குடியொப்பமாக அறிவிக்கப்பட்டு தமிழீழ மக்கள் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் "தமிழீழத் தேசமே" தமது முடிந்த முடிவு என உறுதியாகத் தீர்மானித்தனர்.

இந்த மக்கள் ஆணையை சிறிலங்கா அரசு ஏற்க மறுத்து, படைபல ஆக்கிரமிப்பு மூலம் தமிழீழ மக்களை இனஅழிப்புச் செய்தாவது தனது அரசியல் தீர்வுகளைத் திணிக்க முற்படுவதே இன்றைய இலங்கைத் தீவின் வரலாறாக உள்ளது.

இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக 1974ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சாசனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட "சுதந்திரப் போராட்ட வீரர்கள்" எனும் சகல தகுதியுடனும் தமிழ் மக்களின் நியாயமானதும் தவிர்க்க முடியாதுமான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை தந்தை செல்வாவின் கனவை நனவாக்கும் உரிமையுடன் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் ஒரே இயக்கமாக, தமிழீழ மக்களின் உண்மை அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கடமையைச் செய்து வருகின்றனர்.

கடமை நிறைவேறி தமிழீழத் தேசம் மலரும் பொன் நாளில் தான் தந்தை செல்வாவின் தேசிய ஆன்மா உண்மையான அமைதியைப் பெறும். எனவே தந்தை செல்வாவின் கனவு நனவாக உழைக்க வேண்டிய கடமை எம் அனைவருக்கும் உண்டு என்பதையே தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழா எமக்கு நினைவூட்டி நிற்கிறது.

தந்தை செல்வா தமிழீழ வரலாற்றின் ஒரு காலத்தின் சின்னம். அவரைப் பற்றியோ அவரது பணிகளைப் பற்றியோ ஆராய்வது என்பது மகத்தான ஒன்று. அதற்கான காலம் வசதி என்பன சுதந்திரத் தமிழீழத் திலேயே முழுமை பெற முடியும். எனவே இந்த நூற்றாண்டு நினைவுக் கட்டுரையில் தந்தை செல்வா எனும் பெருந் தலைவனின் பங்களிப்பினை ஆராய்வது **தந்தை செல்வா தனது அனுபவத்தினாலும் யதார்த்தத்தினாலும் வெளிப்படுத்திய ஒரே தீர்வான தமிழீழத் தேசத்தை உருவாக்குதல் எனும் மிக உன்னதமான பணிக்கு ஒவ்வொருவரும் நம்மைத் தயார் படுத்துவதும் பங்களிப்பதுமே தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழாவுக்கு நாம் அளிக்கக்கூடிய மிக உகந்த சாத்தியமான பரிசாகும் என்பதையே வலியுறுத்த விரும்புகிறேன்.**

**வாழ்க, வளர்க தந்தை செல்வாவின் சிந்தனைகள் - மலரட்டும் சுதந்திரத் தமிழீழத் தேசமென வாழ்த்துகிறேன்.**

- எஸ்.ஜே. புர்றிமாகரன் B.A.
Special Diploma (University of Oxford)

www.tamilarangam.net



# ஈழம் - தமிழர் பூமி

ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பிறகு, ஈழமக்கள் பிரச்சினையில் ஒரு தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுவிட்டதாக ஒரு கருத்து நிலவுகிறது. தமிழ் மக்கள் எப்போதுமே உணர்வு பூர்வமாகச் சிந்திப்பவர்கள். அறிவைக் கையில் எடுத்துக்கொண்டு செயலாற்றுவதால் மிகவும் பின்தங்கியவர்கள் என்பதற்கான பல சான்றுகளில் இதுவும் ஒன்று. ஈழம், அதன் மக்களின் அவலமான நிலை போன்றவற்றைப் பற்றி ஒருவரி எழுதினாலோ ஒரு சொல் உச்சரித்தாலோ தேசத்துரோகம் என்றானது. ஜனநாயகத்தின் கூறுகளை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருக்கிறது ஒரு மிகப்பெரிய நாடு என்பது புலனாகிறது.


> சிங்கள பௌத்தமே உண்மையானது. சிங்கள இனத்தைக் காக்க நற்பண்புகளும் தளராத உறுதியும் மிக்க மக்கள் குழுவும் வீரத் தலைவனுமே இன்றைய தேவை. இந்த உயர்ந்த இனத்தைக் காக்க போர்க்குணமிக்க கொள்கைகளை தயக்கமின்றி நடைமுறைப்படுத்த கிட்லர் போன்று அத்தலைவன் அமையவேண்டும்.
>
> — அநகாரிக தர்மபால.


நூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழ் பேசும் மக்கள் சிங்கள ஆட்சியாளர்களால் தாக்குதலுக்குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பது உலகறிந்த உண்மை. பிறந்த மண்ணிலேயே அந்நியமாக்கப்பட்டு, மிகக் கொலீரமாகவும் அவமானகரமாகவும் நடத்தப்படும் ஒரு இனம் தமிழ் இனமாகத்தான் இருக்கவேண்டும். சிங்கள வரலாற்றில் நடந்த தொடர் நிகழ்ச்சிகள் இதை உறுதி செய்யும்.

உண்மையில் இலங்கையை ஆள்வோர் பௌத்த பிக்குகளே. இவர்களின் தமிழர்களுக்கு எதிரான பிரச்சாரம் என்பது இந்திய எதிர்ப்புப் பிரச்சாரமே. இந்தப்பிரச்சாரம் கவர்ச்சிகரமாக இருந்தது. சிங்கள வரலாற்றை விட பழமையான வரலாறு வேறெதுவுமில்லை. சிங்களவர்களாகிய நம் உடலில் ஓடுவது ஒரே குருதி. நாம் தனிச்சிறப்புள்ளவர்கள். 5500 ஆண்டுகளுக்கு மேலாக தன் மதம் நிலைக்குமென்று கூறினார் சேனநாயக்க. நாமும் அதே காலம் வாழ்வோம், தலைமை ஏற்போம் என்று அரசியல்வாதியாக இருந்த சேனநாயக்க முழங்கியது மக்களை ஈர்த்தது. இவருடைய ஆற்றல் மிக்க பேச்சு சிங்கள மக்கள் எல்லோரையும் சென்றடைந்து தமிழர்களுக்கு எதிரான ஒரு ஆவேசத்தை ஏற்படுத்தியது.


> "சுயகௌரவத்தோடும் சுதந்திரத்தோடும் வாழ்கின்ற புனிதமான உரிமையைப் பாதுகாப்பதற்காக போராடுவதற்குரிய உரிமையை இந்தியா போன்ற நாடுகள் மதிக்க வேண்டும். ஈழவிடுதலை எப்போதென்பது பிரச்சினை. ஏனெனில் விடுதலைப் போராட்டங்களுக்குக் காலம் என்பதே கிடையாது. இதுவே வரலாறு - பிரபாகரன் சொல்வது இதுதான்."


"தமிழர்களின் எழுச்சி சிங்களவர்களின் வீழ்ச்சி. தமிழர்களின் எழுச்சி பௌத்தத்தின் வீழ்ச்சி" போன்ற உக்கிரமான கோஷங்கள் 1936ல் உச்சக் கட்டத்தில் முழங்கப்பட்டன. "சிங்களவர்களுக்கு வேறு நாடு இல்லை. தமிழர்களுக்கு நாடு உள்ளது. எனவே சிங்களவர்களை நசுக்க வந்த தமிழ்ப் பிசாசுகள் அனைவரையும் விரட்டியடியுங்கள்" என்று புத்த பிக்குகள் இடைவிடாமல் பிரச்சாரம் செய்தனர். பிற நாடுகளில் இருக்கும் பௌத்த சமயத்தைக் கூட தூய்மையற்றது என்றார் தலைமைப் புத்த குருவான அநகாரிக தர்மபால. சிங்கள பௌத்தமே உண்மையானது. சிங்கள இனத்தைக் காக்க நற்பண்புகளும் தளராத உறுதியும் மிக்க மக்கள் குழுவும் வீரத் தலைவனுமே இன்றைய தேவை. இந்த உயர்ந்த இனத்தைக் காக்க போர்க்குணமிக்க கொள்கைகளை தயக்கமின்றி நடைமுறைப்படுத்த கிட்லர் போன்று அத்தலைவன் அமையவேண்டும் என்று முழங்கினார் தர்மபால. முழுச் சிங்களமும் முழுப்பௌத்தமுமே அவரது முழக்கமாக இருந்தது. தர்மபால, அரசையே ஆட்டிப்படைக்கும் வல்லமை பெற்றிருந்தார்.

இனவாதத்தை ஆழமாக விதைப்பதில் இலங்கைத் தேசியவாதிகளும் சளைத்தாரில்லை. இந்திய அச்சுறுத்தல் என்ற சொல்லை நேர்த்தியாகக் கையாண்டனர். சரித்திர கால சில சோழ மன்னர்களின் படையெடுப்புகளை மிகைப்படுத்தி, மக்கள் முன் வைத்தனர். இலங்கைத் தமிழர்களை கடத்தல் காரர்களாகவும், போக்கிரிகளாகவும் சித்தரித்தனர். இந்தியாவின் ஏஜெண்டுகள் என வருணிக்கப்பட்டனர். இந்தியத் திரைப்படம், பத்திரிகை முதலியன சிங்களக் கலாச்சாரத்தை அழிக்கவந்த சாதனங்கள் என இடைவிடாமல் பிரச்சாரம் செய்தனர். 1948ல் இந்தியா, சமஸ்தானங்களைத் தம்மோடு இணைத்துக்கொண்ட நிகழ்ச்சியை ஒரு அச்சுறுத்தலாக விமர்சனம் செய்தனர். நிஜாம் ஆட்சிக்குட்பட்ட ஹைதராபாத்தை இராணுவ நடவடிக்கை மூலம் சேர்த்துக் கொண்டதை உதாரணம் காட்டி, இந்தியாவை நாடு பிடிக்கும் பேரரசாகப் பிரச்சாரம் செய்தனர். இந்திய விருப்பு அவர்களின் ஐந்தாம் படைகளான தமிழ்க்குழுக்களால் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்படும். இலங்கை இந்தியாவின் ஓர் மாநிலமாக ஆக்கப்பட்டு விடும் என்று வெகுவாகப் பயப்படுத்தினர். ஐக்கியத் தேசியக் கட்சியின் அரசில் அமைச்சராக இருந்த பண்டாரநாயக்க, இந்தியப்பிரதமராக இருந்த ஜவகர்லால் நேருவுடன் இருந்த நட்பைக் குறிப்பிடும் போது, "நாங்கள் இந்தியர்களின் நண்பர்கள். இந்த நட்பு சிங்கள மக்களுக்குத் துரோகமிழைப்பதன் அடிப்படையில் ஒருபோதும் இருக்கமுடியாது" என்றார்.

இலங்கைத் தொழிலாளர்கள் சாதி, மத, இன வேறுபாடுகளை மறந்து ஒருங்கிணைந்து ஜனநாயக உரிமைக்காகவும் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காவும் போராடிப் பல வெற்றிகளையும் பெற்று வந்தனர். 1923ல் இந்த ஒற்றுமை பல்வேறு முனைகளிலிருந்தும் சீர்குலைக்கப்பட்டது. சிங்களத் தொழிலாளர், தமிழ்த் தொழிலாளர் என இரு கூறுகளாகப் பிரிந்து வர்க்க நலன்களைப் பலியிட்டனர். போக்குவரத்துத் தொழிலாளர்கள், மாணவர் சங்கங்கள், அரசுத் தொழிலகங்கள் என இன ரீதியாக பிளவுபட்டு நின்றன. எ.ஈ. குணசிங்க, ரி.பி. சுபசிங்க போன்ற சக்திவாய்ந்த இடதுசாரித் தலைவர்களும் கூட தமிழர்களுக்கு எதிராக இனவாதம் பேசினால்தான் பிழைப்பு நடத்தமுடியும் என்று தமிழர்களுக்கு எதிராக நின்றனர். "தமிழர்கள் சிங்களத் தொழிலாளர்களின் வேலையைப் பறிக்க வந்தவர்கள். எனவே தமிழர்களே வெளியேறுங்கள்" என மேடைகள் தோறும் முழக்கமிட்டனர். தமிழர்களை இந்திய பாஸிச அரசின் ஐந்தாம் படைகள் என வருணித்தனர். தமிழர்கள் தாழ்த்தப்பட்டாவிட்டால் பௌத்தர்களின் புனிதம் கெட்டுவிடும் என்று தீவிர இடதுசாரி சிந்தனைகளைப் புதைத்து விட்டு புத்த பிக்குகளின் குரலில் பேசினர்.

தீவிர இடது சாரியான குணசிங்க சமாசமாஜக்கட்சியைச் சார்ந்தவர்.


> "தமிழர்களால் சிங்களவர்களின் நலன்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே என் இடதுசாரிக் கருத்துக்களை ஓரங்கட்டிவிட்டு இனவாதியாகவே என்னை அடையாளம் காட்டிக் கொள்கிறேன். இதற்காக வெட்கப்படவில்லை. நான் தேர்தலில் தோற்றாலும் சரி இந்தியத் தமிழரின் ஒரு வாக்கையும் பெற்றுக் கொள்ளமாட்டேன். ஏனெனில் அவர்கள் வெளியேற்றப்பட வேண்டியவர்கள்"
>
> - குணசிங்க -


"தமிழர்களால் சிங்களவர்களின் நலன்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே என் இடதுசாரிக் கருத்துக்களை ஓரங்கட்டி விட்டு இனவாதியாகவே என்னை அடையாளம் காட்டிக் கொள்கிறேன். இதற்காக வெட்கப்படவில்லை. நான் தேர்தலில் தோற்றாலும் சரி இந்தியத் தமிழரின் ஒரு வாக்கையும் பெற்றுக் கொள்ளமாட்டேன். ஏனெனில் அவர்கள் வெளியேற்றப்பட வேண்டியவர்கள்" என்று முழங்கினார். 1966ல் இனவாதம் கொடிகட்டிப் பறந்தது. இதனால்தான், தமிழர்கள் சிங்களவர்களின் மூர்க்கமான தாக்குதலுக்கு ஆளாக நேர்ந்தது இந்தக் காலகட்டத்தில்தான்.

ஆங்கிலேயரை எதிர்த்து நடந்த சுதந்திரப் போராட்டத்தில் சிங்களமக்கள் ஈடுபட்டிருந்த போது, தமிழர்கள் ஆங்கிலேயக் கல்வி பயின்று அரசின் சக்தி மிக்க பதவிகளில் இருந்தனர். தமிழர் – சிங்கள இனப்பிரச்சினையைத் தீர்க்க எந்தத் திட்டமும் வைத்திருக்கவில்லை. இவர்கள் அநேகமாக வெளிநாடுகளில் சொத்துக்களைத் திரட்டி வைத்திருந்தனர். தம் பிள்ளைகளை உயர் கல்வி கற்க ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பினர். இவர்களின் சிற்சில நேரச் சமரசத் திட்டங்கள், தமிழர்கள் மத்தியில் துளி சலசலப்பையும் ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்வதில் கவனமாக இருந்தன. தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள சாதாரண தமிழ் மக்களைப் பலியிடத் தயங்கவில்லை. தமிழர் தலைவர் என்று சொல்லப்பட்ட ஜி.ஜி. பொன்னம்பலமும் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் எந்தக் காலத்திலும் கருத்தொற்றுமை கொண்டிருக்கவில்லை. இருவருமே மாறி மாறி அரசை எதிர்ப்பதும் ஆதரிப்பதுமான குழப்ப நிலைகளையே எடுத்தனர். ஒரு கட்டத்தில் இனவாதம் பரவி தமிழர்களை விரட்டியடியுங்கள் என்ற கோஷம் உச்சத்தில் இருந்த போது, இலங்கை சிங்கள இனவாத அமைச்சரவையில் அமைச்சர்களாகக்கூட இருந்திருக்கிறார்கள். தமிழர்கள் சிங்களவர்களால் ஏமாற்றப்பட்டதற்கு இணையாக, தமிழ்த் தலைவர்களாலும் ஏமாற்றப்பட்டனர் என்பதும் கசப்பான உண்மையாகும். அமிர்தலிங்கமும் இதே மாதிரியான சந்தர்ப்பவாதிதான்.

இப்படி சகல முனைகளிலும் அதர்மமான முறையில் நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்ட தமிழர்கள் கிட்டத்தட்ட நாதியற்ற இனமாகவே ஆக்கப்பட்டனர். இந்தக் கட்டத்தில், ஒன்று தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து இந்தியாவுக்கு அகதிகளைப் போல் ஓடி வந்திருக்க வேண்டும். அல்லது தம்மீது தொடுக்கப்பட்ட கலாச்சார மற்றும் ஆயுத யுத்தத்தை எதிர்க்க வேண்டும். தமிழர் தலைவர்கள் எனப்பட்டவர்களின் கபடமான அணுகு முறையும் வெறும் காகித ஒப்பந்தங்களும் சிந்திக்கத் தெரிந்த சில இளைஞர்களைக் களத்திற்கு வரச்செய்தது. உலக வரலாற்றினை அறிந்திருந்த இவர்கள், கலாச்சாரப் பற்றுதல் காரணமாக வேறுவழிகளைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தனர். சகல உரிமைகளையும் சுதந்திரத்தையும் கலாச்சாரச் செழுமையையும் காப்பாற்றிக் கொள்ள சர்வதேச அளவில் பல முன்னுதாரண நிகழ்வுகள் உலகில் நடந்து கொண்டிருந்தது. இவை இவர்களை உற்சாகப்படுத்தியது. உலகில் நடக்கும் இன விடுதலைப் போராட்டத்திற்கு இணையான ஒரு போருக்கு, நூறு சதமானம் தயாரானபோது வரலாற்றின் பக்கங்கள் இவர்களின் புரட்சிகரமான யுத்தத்தை எழுதத் திறந்து கிடந்தன. இவற்றால் வழக்கமாகத் தோன்றிய பிளவுகளும் போட்டிக் குழுக்களும் துரோகக் கும்பல்களும் களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன. ஒரு அரசை எதிர்த்து சவால் விடும் அளவிற்கு புலிப்படை செயற்படத் தொடங்கியது. தமிழர் வரலாற்றிற்கு சிங்களத்தில் புதிய பரிமாணம் ஏற்பட்டது.

மார்க்ஸ், லெனின் போன்றோரின் தேசிய இன விடுதலை போன்ற கருத்தும் இன்றைய அறிவியல் உலகில் போதுமான விளக்கம் தருவனவாக இல்லை. எனவே, இவர்கள் சிந்தனைகளையும் இணைத்துக் கொண்டு ஒரு புதிய போர் யுக்தி வகுக்கப்பட்டது.

"சுயகௌரவத்தோடும் சுதந்திரத்தோடும் வாழ்கின்ற புனிதமான உரிமையைப் பாதுகாப்பதற்காக போராடுவதற்குரிய உரிமையை இந்தியா போன்ற நாடுகள் மதிக்க வேண்டும். ஈழவிடுதலை எப்போதென்பது பிரச்சினை. ஏனெனில் விடுதலைப் போராட்டங்களுக்குக் காலம் என்பதே கிடையாது. இதுவே வரலாறு – பிரபாகரன் சொல்வது இதுதான்." ✷

என்.விஸ்வநாதன், BCR PA, தபால் அலுவலகம், 612804 இந்தியா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போராளிகளின் தாக்குதல் இலக்கு இராணுவ இலக்கு என்றால் அது போர்க் குற்றமாகாது

## - பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illinois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

கேள்வி: எந்த வரைவிலக்கணத்தை உபயோகிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து, ஓரளவுக்கு நீங்கள் இசையலாம், கனடாவில் அது பயங்கரச் செயல் எனக் கருதப்படலாம்.

பதில்: நான் கூறியது போல், கனேடியச் சட்டத்தின்கீழ் பயங்கரவாதத்திற்கு வரைவிலக்கணம் இல்லை. நான் நினைக்கிறேன் இதனைப் போதுமானளவு விளக்கி விட்டேன் என்று. அதாவது அந்தநபர் குண்டை வெடிக்க வைத்தது வேண்டுமென்றே வைத்த குற்றத்திற்கு குற்றவாளியாகக் காணப்படும், நியூயோர்க் மரபை மீறியதற்கு குற்றவாளியாகக் கணிக்கப்படும், ஒப்பந்தம் 1ஐ மீறியதற்கு குற்றவாளியாகக் கொள்ளப்படும்.

இந்த மூன்றில் எந்தவொரு குற்றச் சாட்டிலும் அவர்மீது வழக்குத் தொடரலாம். பயங்கரவாதம் பற்றிக் குறிப்பிட வேண்டிய அவசியமே இல்லை.

கேள்வி:நான் சரியாக விளங்கிக்கொள்ளும் பட்சத்தில் போர்க் குற்றத்தை வரையறை செய்யும் நோக்கத்துக்கு எது போர் என்ற வரையறை வெவ்வேறு நீதி பரிபாலனங்களைப் பொறுத்தது...

பதில்: ஆம்

கேள்வி: ...வழக்கு வைப்பது?

பதில்: ஆம். உதாரணத்துக்கு அமெரிக்க அரசு வியட்நாம் போரின்போது யப்பானிய தளங்களை உபயோகித்தது. ஆகவே போரை ஆதரித்து யப்பானில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்றன. சண்டையிடும் நாடுகள் வேறு நாடுகளைத் துருப்புக்கள் மற்றும் பொருட்களை நகர்த்துவதற்குப் பாவிக்கும்போது இவ்வித சம்பவம் நடை பெறுகிறது.

இவையெல்லாம் போர் முயற்சி சம்பந்தமானவை. போர் அல்லது மோதலில் சம்பந்தப்படும்வரை அவை (நாடுகள்) தாக்குதலுக்கு, அவை எங்கு இருந்தாலும் சரியான இலக்குகளாகும்.

எனவே நாங்கள் இங்கு விவாதிக்கும் சட்டங்கள், பேராசிரியர் (Quigley) அதைப்பற்றிக் குறிப்பிட்டார், சர்வதேசச் சட்டங்கள் சம்பந்தமானதாகும். அவற்றின் சர்வதேசக் கருக்கோள்கள் சம்பந்தமானதாகும். இக்கருக்கோள்கள் போர் எங்கு நடைபெற்றாலும் அங்கு உபயோகிக்கப்படும்.

கேள்வி: அப்படியென்றால் உமது எண்ணப்படி, போர் நடவடிக்கை எங்கு இடம்பெற்றாலும், அதை வைத்துக் கொண்டு அப்போர் நடவடிக்கை போர்க்குற்றம் என்று சொல்லிவிட முடியாது. எனவே அது சிறீலங்கா, கனடா, அமெரிக்கா எங்கு நடைபெற்றாலும்...

பதில்: மன்னிக்கவும்...?

கேள்வி: ஒரு தேசிய விடுதலை இயக்கத்தினால்?

பதில்: அத்தேசிய இயக்கத்தினால் ஜெனிவா மரபுகள் அல்லது ஒப்பந்தங்கள் அல்லது சம்பிரதாயச் சட்டங்கள் மற்றும் போர் பற்றிய சம்பிரதாயங்கள் மீறப்பட்டிருக்கிறதா என்பதை (முதலில்) நிச்சயிக்க வேண்டும்.

கேள்வி: போராளி அல்லாத ஒருவர்மீது தாக்குதல் என்று அனுமானித்தால்?

பதில்: சரி, மறுபடியும் இங்கு ஒரு தமிழ்ப்புலி வந்தார் என்று வைத்துக் கொள்வோம். அவர் இங்கு நடுத்தெருவில் பேரூந்து வண்டிக்குக் குண்டு வைக்கிறார். அந்த நபர்மீது கனேடிய சட்டத்தின்கீழ் வழக்குத் தொடரலாம். எனது அபிப்பிராயப்படி ஒப்பந்தம், ஜெனிவா மரபுகளை மீறியதற்கு அவர் மீது வழக்குத்தொடரலாம்.

கேள்வி: போர்க் குற்றத்திற்காக?

பதில்: போர்க் குற்றித்திற்காக, ஆம், கனேடிய அரசு அச்சம்பவத்தை எப்படிக் கையாள வேண்டும் என்பதைப் பொறுத்தது.

கேள்வி: மெத்தச் சரி

பதில்: கொள்கை காரணமாக அவர்கள் போர்க்குற்றங்களுக்குப் பதிலாக கொலை, தீ வைத்தல் போன்ற குற்றங்களுக்கு வழக்கு வைக்க முடிவு செய்யலாம். அரசுகள் இந்த முடிவுகளை எடுக்கின்றன.

கேள்வி: மெத்தச் சரி, ஒரு அரசிற்கும் தேசிய விடுதலை இயக்கத்திற்கும் இடையிலான மோதல் நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் நடைபெறுகின்றது என்று வைத்துக்கொண்டால்....

வடக்கு மாகாணம் என்று வைத்துக் கொள்வோம். தலைநகரம் தென் மாகாணத்தில் இருக்கின்றது. தேசிய விடுதலை உறுப்பினர்கள் அந்தத் தலைநகரில் வதியும் பொதுமக்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துகிறார்கள். இங்கு (தலைநகரம்) போர் இடம்பெறவில்லை.

அந்தப் பிரதேசம் பற்றித் தேசியவிடுதலை இயக்கத்திற்கு பிணக்கு இல்லை. இந்தப் பகைப்புலத்தில் பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்கள் ஒப்பந்தம் 1 ஜெனிவா மரபுகள் இவற்றின் கீழ் போர்க்குற்றமாகக் கணிக்கப்படும்?

பதில்: அவர்கள் நேரடியாகப் பொதுமக்களை இலக்கு வைத்தால், அதுதான் அவர்களது நோக்கு, அதைச் சுற்றி இராணுவ இலக்குகள் இல்லை, அதைப் போன்றவை இல்லை, அப்படியானால், ஆம். அது போர்க்குற்றமாகும்.

கேள்வி: அப்படி இல்லையென்றால், இலக்கு இராணுவ இலக்கு என்றால் அது போர்க்குற்றமாகாது.

பதில்: போர் நடவடிக்கை அல்லது மோதல்கள்...

கேள்வி: அது கிரிமினல் குற்றம் அல்ல.

பதில்: அது கிரிமினல் குற்றமல்ல. அவர்கள் பிடிக்கப்பட்டால் மூன்றாவது ஜெனிவா மரபின்கீழ் போர்க் கைதி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

கேள்வி: ஐயா... நான் தனி ஒரு நாட்டைக் குறிப்பிடப் போவதில்லை. அதையிட்டு மேலும் சொல்ல விரும்ப வில்லை. நான் கூடியளவு கற்பனை அடிப்படையில் அணுக விரும்புகிறேன். காரணம் இராசதந்திரிகள் அரசியல் வாதிகள் இவர்கள்மீது நடாத்தப்படும் தாக்குதல்கள் பற்றி... எனது கேள்வி, என்னவென்றால்... நாடு 'ஏ' ஒரு தேசிய விடுதலை இயக்கத்துக்கும் ஒரு அரசுக்கும் இடையிலான மோதலில் சம்பந்தப்படவில்லை என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அந்த நாட்டு 'ஏ' நாட்டைப் பொறுத்தது.

கேள்வி: அது போர்க்குற்றமாக எப்படிக் கணிக்க முடியும் என்பதை எனக்கு விளங்குமாறு சொல்லவும்? சம்பந்தப்பட்ட நாடு இந்த மோதலில் ஈடுபடாது இருக்கும்போது? ஒருவேளை நான் எதையோ விட்டுவிட்டேன் போலிருக் கிறது.

பதில்: ஏனென்றால் நான் அனுமானிக்கிறேன்... அந்த நாடு ஜெனிவா மரபுகளுக்கு ஒப்புதல் அளித்த நாடென்று நான் அனுமானிக்க வேண்டியுள்ளது.

நான் சொன்னவாறு எல்லா நாடுகளும் ஜெனிவா மரபுகளை ஏற்றுக் கொண்டுள்ளன. அவற்றில் பெரும்பான்மையானவை மேலதிக ஒப்பந்தம் 1 ஐ அங்கீகரித்துள்ளன. தனக்கு விரும்பாத ஒன்றைச் செய்ததற்காக மூன்றாவது நாட்டைச் சார்ந்த ஒரு அரசியல் வாதியைத் தாக்க ஒரு கெரில்லாப் போராளிக்கு உரிமை கிடையாது.

இவர், இந்த அரசியல்வாதி ஒரு பொதுமகன் ஆவார். அவர் தாக்குதலுக்கு சரியான இலக்கல்ல.

நீதிபதி: பேராசிரியரே! இடையில் குறுக்கிடுவதற்கு தயவுசெய்து மன்னிக்கவும். நீங்கள் புதிய அம்சம் ஒன்றைக் குறிப்பிட்டுள்ளீர்கள். நீங்கள் "கெரில்லா" என்ற புதிய சொல் ஒன்றைப் பாவித்துள்ளீர்கள். உங்களுக்கு அது (கெரில்லா) என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது.

சாட்சி: கெரில்லா போராளிகள்?



அரசியல்வாதி ஒருவர் ஒரு பார்வையை ஒரு நிலைப்பாட்டை எடுத்தார். ஒரு அபிப்பிராயத்தை, உத்தியோகபூர்வமான அபிப்பிராயமல்ல, அந்த அபிப்பிராயத்தை, அறிக்கையை தேசிய விடுதலை இயக்கம் அங்கீகரிக்கவில்லை, ஒத்துக் கொள்ள வில்லை. இது கற்பனைக் கேள்வி.

அந்த தேசிய விடுதலை இயக்கம் அல்லது அதன் உறுப்பினர்கள் ஆயுத மோதலில் ஈடுபடாத நாட்டின் அரசியல்வாதி ஒருவரை தாக்கிக் கொன்றுவிடுகிறார்கள்?

பதில்: 'ஏ' நாட்டில்?

கேள்வி: ஆம். அந்த நடவடிக்கையை எப்படிக் கணிப்பீர்?

பதில்: 'ஏ' நாட்டின் சட்டங்களின் கீழ் 'ஏ' நாட்டில் இடம்பெற்ற ஒரு கொலையாக அல்லது போர்க்குற்றங்களாகக் கருதி வழக்குத் தொடரலாம், அவர்கள் மேலதிக ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டி ருந்தால், அவர்களை எப்படிக் கையாள்வது என்பது

நீதிபதி: சட்டத்தரணி அந்த வார்த்தையை உபயோகித்ததை நான் கேட்கவில்லை.

பதில்: மன்னிக்கவும்.

நீதிபதி: சட்டத்தரணி உங்களைக் கெரில்லா பற்றிக் கேட்கவில்லை. எனவே இப்போது என்ன சொல்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கிறேன்.

சாட்சி: சில சமயம் அவர்களைக் கெரில்லாக்கள் என அழைப்பதுண்டு....

நீதிபதி: யார்... யார் அப்படி அழைக்கப்படுகிறார்கள்?

சாட்சி: தேசிய விடுதலை இயக்கத்தின் உறுப்பினர்கள். சிலசமயம் அவர்கள் சிப்பாய்கள் என அழைக்கப்படுகிறார்கள். நான் தெளிவுபடுத்த விரும்புவது என்னவென்றால் மூன்றாவது நாட்டில் உள்ள அரசியல்வாதியைத் தாக்க அவர்களுக்கு உரிமை இல்லை என்பதாகும். அதுதான் எனது கூற்றாகும். ✷ (தொடரும்.... )

www.tamilarangam.net

# 'புளுகுணாவி' அதிரடி ;

**"புளுகுணாவி"** என்ற எம் ஊரை **'புலுக்குனாவ'** என்றாக்கிச் சிங்களம் அபகரித்த கதை பழையது; இரண்டு தசாப்தங்களுக்கு முந்தியது **ஜூலியஸ் ரிச்சாட் ஜெயவர்த்தன,** என்ற சிங்களத்தின் முதுபெரும் பேரினவாதி, தான் ஆட்சியில் அமர்ந்தபோது அரங்கேற்றிச் சென்ற நிலப்பறிப்பிற்குள் – வியர்வையாய் குருதி சிந்திச் செழிப்பாக்கி – தமிழன் வனப் போடு வாழ்ந்த அந்த விவசாயக்கிராமம் சிக்கிக்கொண்டது. பூர்வீகத் தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்; புதிதாகக்



**தலைவர் பிரபாகரனோடு, தளபதி கருணா.**

கொண்டுவரப்பட்டு சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். அது ஆக்கிரமிப்புக் குடியேற்றம். ஆனாலும்–

காலஅசைவில், புலிகள் முன்னெடுத்துச் சென்ற ஆயுதப் போராட்டத்தின் பெறுபேறாக மட்டும், சிங்களக் குடியேற்றவாசிகள் அப்புறப்படுத்தப்பட்ட தென் தமிழீழத்தின் அநேக தமிழர்களின் வரிசையில் புளுகுணாவி– தாளையடி மடுப் பிரதேசமும் விடுவிக்கப்பட்டது. இருந்தபோதும்– மீண்டும் எம்மக்கள் அங்கு குடியேற முடியாமல், தடையாகக் குந்தியிருந்தது அந்தப்படைமுகாம்.

> S.T.F இன் ஒரு தசாப்தகால வரலாற்றில் ஒவ்வொன்றுமே குருதிக்கறை உறைந்த கொடுமைகளின் அத்தியாயங்கள்தான். தமிழீழத் தென் பிராந்தியத்தின் ஒவ்வொரு மண் துணிக்கைகளும் சுமந்து நிற்கும் உலகப் பிரசித்திபெற்ற துயரக்கதைகளின் பிரதான நாயகர்களாக S.T.F படையாட்களே விளங்குகிறார்கள். அவர்கள் செய்த கொடுமைகள், கொடுமைகளை விஞ்சிய கொலைகள், கொலைகளுக்குச் சளையாத அழிவுகள், இந்த அனர்த்தங்களைப் புரிய ஈவிரக்கமற்று அவர்கள் கைக்கொண்ட முறைகள் - தென் தமிழீழத்தின் ஒவ்வொரு குடிமகனது ஆன்மாவிலும் என்றென்றும் ஆறாத வடுக்கள்!

அதுவரை வனக்காப்புத் துறையின் செயலகமாயிருந்த கட்டிடத்தை 1977 இற்குப் பின்பு சிங்களக் காவற்துறை நிலையமாக்கியது ஜெயவர்த்தன அரசாங்கம். 83 இல், தமிழீழப்போர் முனைப்படைந்ததை அடுத்து, தரைப் படையினர் மாற்றப்பட்டு அது இராணுவமுகாம் ஆக்கப்பட்டது. 86 இன் பிற்காலத்தில், தென்தமிழீழ மக்களுக்கு உமிர்கலங்க வைக்கும் இராட்சதர்களாக விளங்கிய **"பொலிஸ் கொமாண்டோ"** க்களின் தளமாகி **"விசேட அதிரடிப்படை – S.T.F முகாம்''** என்ற மறுவடிவத்தை எடுத்தது.

புலிகளைத் தோற்கடிப்பதற்கான யுத்த முறைக்கென தனித்துவமாகப் பயிற்றுவிக்கப்பட்ட அதிரடிப்படையினரின் அந்தத் தளத்திற்கு, சிங்களக் குடியேற்றக்காரர்களுக்குப் பாதுகாப்பளிப்பது உப பணியாகவே கொடுக்கப்பட்டிருந்தது; மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களின் எல்லையில் தாக்கம்மிகுந்த போரியற் கேந்திரத்தில் நிறுவப்பட்டிருந்ததன் மூலம், கிழக்குப் போரரங்கில் குறிப்பிடத்தக்க பாத்திரத்தை அந்தத்தளம் ஆற்றிக்கொண்டிருந்தது. வடபுறத்தே பரந்திருந்த புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை இலக்கு வைக்கக்கூடியதாக, **'ஆட்டிலறி'** (Artilery) ரெஜிமென்டின் பிரிவு ஒன்று மிகமிக அண்மைக்காலத்தில் அங்கு இணைக்கப்பட்டிருந்தது என்பதுவே அந்தத் தளத்தின் முக்கியத்துவத்தை அறியத்தரப் போதுமானதாகும்.

**Special Task Force - S.T.F –** எனப்படும் "சிறப்பு அதிரடிப்படை"யின் தோற்றமும், வளர்ச்சியும் அது படைத்த சாதனைகளும் உலகறிந்த இரகசியம்.

பொலிஸ் துறையில் தேர்ந்தெடுத்த சண்டைக்காரர்களை ஒருங்கிணைத்து, இஸ்ரேலிய சிறப்புப் பிரிவினரால் பயிற்றுவித்து பிரித்தானிய, பாகிஸ்தானிய, இஸ்ரேலிய போரியல் வித்தகர்களால் தயார்செய்யப்பட்ட அதிகாரிகளை தளபதிகளாக நியமித்து, **'வியட்கொங்'** போராளிகளுக்கு எதிரான வனப்புற யுத்த முனைகளில் சுலபமாகக் கையாண்டு பயன்படுத்தவென **'M.16'** வகையில் உருமாற்றம் செய்து – நீளம் நறுக்கி, பாரம் குறுக்கி, அமெரிக்கா தயாரித்த 'COLT' வகைத் துப்பாக்கிகளைத் தருவித்து வழங்கி, தனது புத்திரன் ரவியையே பொறுப்பாக நியமித்து, "தமிழ் பயங்கரவாதத்தின்" பேரிடும் வல்லமையை முறியடித்து முழுமையாக அழிப்பதையே இலட்சியமாக வரித்து, ஜெயவர்த்தன உருவாக்கிய படை அது. தன்னாட்டு ஜனாதிபதிகளின் மெய்க்காப்புப் படையாகப் பணியாற்றக்கூடிய, படைத்துறையின் அதிசிறப்புப் பிரிவாகத் தனித்துவத் தகுதியைப் பெற்றிருக்கும் S.T.F இன் ஒரு தசாப்தகால வரலாற்றில் ஒவ்வொன்றுமே குருதிக்கறை உறைந்த கொடுமைகளின் அத்தியாயங்கள்தான். தமிழீழத் தென் பிராந்தியத்தின் ஒவ்வொரு மண் துணிக்கைகளும் சுமந்து நிற்கும் உலகப் பிரசித்திபெற்ற துயரக்கதைகளின் பிரதான நாயகர்களாக S.T.F படையாட்களே விளங்குகிறார்கள். அவர்கள் செய்த கொடுமைகள், கொடுமைகளை விஞ்சிய கொலைகள், கொலைகளுக்குச் சளையாத அழிவுகள், இந்த அனர்த்தங்களைப் புரிய ஈவிரக்கமற்று அவர்கள் கைக்கொண்ட முறைகள் – தென் தமிழீழத்தின் ஒவ்வொரு குடிமகனது ஆன்மாவிலும் என்றென்றும் ஆறாத வடுக்கள்!

**பிரேமதாச** ஆட்சியில் **J.V.P** யை இல்லாதழித்த அன்றும், இன்றும், என்றும் அழியாப்புகழ்பெற்ற – "அரும்பெருஞ் சாதனை" யை நிகழ்த்தியது இந்தப்படைதான் என்பதுவே – தனது முதன்மையான சேவையிடமாகக் கிழக்கு மாகாணத்தைக் கொண்டுள்ள அது, தமிழ் மக்களுக்கு எவ்வித கொடூரங்களைச் செய்திருக்கும் என்பதைத் தெளிவாக உணர்த்தப் போதுமானதாகும்.

**போரியல் ரீதியில் - வனப்புற யுத்த முறையிலும், கெரில்லா எதிர்ப்புப் போர்முறையிலும்** (Jungle Warfare and Anti Guerrilla Warfare) ஆற்றலூட்டப்பட்ட சிறப்பு அதிரடிப் படையானது, கிழக்குப் பிராந்தியத்தை சிங்களத்தின் ஆளுகையிலிருந்து பறிபோய் விடாமல் காக்கும் முக்கிய பணியைச் சுமந்திருந்ததுடன், கிழக்குப் போரரங்கில் புலிப் படைக்குப் பெருஞ் சவாலுக்குரிய, செயற்திறன் மிக்க ஒரு படையாகவும் திகழ்ந்தது.

எனவே தான்–

தாக்கப்பட்ட படைப்பிரிவு, அது இழந்த உயிர்த் தொகை, பறிகொடுத்த சுடுகலங்கள், அவற்றின் எண்ணிக்கை, தாக்குதல் நிகழ்ந்த போரரங்கு மற்றும் காலகட்டம், தாக்குதலின் முடிவு என்பவற்றைக் கருத்திற்கொண்டு –புளுகுணாவி அதிரடியானது, முல்லைத்தீவுப் பெருவீழ்ச்சிக்குப் பிறகு, சந்திரிகா – ரத்வத்த அரசாங்கத்திற்குப் புலிகள் கொடுத்த மற்றொரு பேரடி என ஆய்வாளர்கள் வர்ணிக்கின்றார்கள்.

**S.T.F படை தொடரான தோல்விகளைச் சந்தித்துவரும் அண்மைக்காலக் கிழக்குக் கள நிலவரத்தின் சிகரமாக, புளுகுணாவித் தோல்வி அமைந்துவிட்டது.**

எப்போதும் போலவேதான் இதுவும், எம் வேவு வீரர்களின் நீண்ட, துன்பம் நிறைந்த சிரமங்கள் குவிந்த பாடுகளின் பெறுபேறு, ஆட்களற்றுச் சூனியப் பிரதேசங்களாகிவிட்ட சுற்றுக்கிராமங்களூடு நகர்ந்து, அங்கு பதுங்கிப்பதுங்கி அலைந்துதிரியும் எதிரியின் வெளிப்புற காவற் குழுக்களுக்கு மறைந்து, எதேச்சையாக அவர்களோடு மோதநேர்ந்த பல சந்தர்ப்பங்களில் அதிஸ்டவசமாகத் தப்பித்து மீண்டு, திரும்பத்திரும்பச் சென்று வெளிவேவு பார்த்தனர்! முள்வேலித்தடைதாண்டி, கண்ணிவெடி வயல்கடந்து, சுடுகுழல்களுக்கு ஒழிந்து, "தேடொளி" களுக்கு மறைந்து, முகாமில் புகுந்து உள்வேவு பார்த்தனர்! வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே ஊசலாடி அவர்கள் கொண்டுவந்த தகவல்களே வெற்றியின் வேர்!

வேவு அணியின் முதல்வன் **அகர்நாதன்** சந்திவெளிச் சண்டைக்குப் போன இடையிலொருநாள், நடுமுகத்தில் வெடிபட்டு படுக்கையில் வீழ்ந்தபோதும், விட்டபணி தொடரும் உளவேகத்தோடு காயம்மாற்றி, மீண்டும் திரும்ப வந்து வேவு செய்தவன். 'ஆட்டிலறி' பகுதி அணிக்கு வழிகாட்டியாக களத்திலு மிறங்கினான். தாக்குதலில் காயப்பட்ட **ஈழவேங்கை, கோகுல்ராஜ்** மற்றும் **அசதன், தினேஸ்** ஆகியோரை ஏனைய முதன்மையானர்களாகக் கொண்ட வேவு அணிக்கு, வழிப்படுத்தும் பொறுப்பாளராகச் செயற்பட்டு தகவல் சேகரிப்பை முழுமையாக்கிப் பூர்த்தியாக்கினார், முதன்மைத் தளபதிகளில் ஒருவரான **ரமேஸ்.** எங்கோ தொலைவில் இருந்து தூரநோக்கியால் பார்த்த ஒரு மாலை, மறைந்தும் மறையாமலும் புகையாய் வீற்றிருந்த, 'ஆட்டிலறி'யைக் கண்ணுற்ற



**வேவுப்புலிகள் வேவு பார்க்கையில்...**

சந்தோச வேளை–

உறுதிப்படுத்த விரைந்த எம் வேவு

www.tamilarangam.net

# கிழக்குப் போரரங்கின் சாதனை

வீரர்கள், சென்று பார்த்து ஊர்ந்து திரும்புகையில் கண்டுவிட்ட எதிரி **"ஹறா துவணவா! ஹறா துவணவா!"** என்று சுட்டுத்தள்ள, வெடிபட்டு விழாமல் தப்பித்து மீண்டு வந்து "அது அதுவேதான்!" என்பதை அறியத்தந்த கணம் புளகாங்கிதத்தின் உச்சம்!

புலிகளின் முதுநிலை – முதன்மைக் கள வழிநடத்துனர்களுள் ஒருவரும், மட்டக்களப்பு – அம்பாறைத் தளப்பிராந்தியச் சிறப்பு ஆணையாளருமான **தளபதி கருணா** அவர்கள் சமர்ப்பித்த நடவடிக்கைத் தகவற் தொகுப்பை, **தலைவர் பிரபாகரன்** அவர்கள் ஆழமாகவும், முழுமையாகவும் ஆராய்ந்தார்;

வேவுத் தரவுகளை நோக்கினார். **'காணொலி'** நாடாவிற் பதியப்பட்ட தளத்தையும், தளச்சூழ்நிலையையும் அவதானித்தார். இராணுவ புவியியற் தன்மைகளை கவனித்தார். தளத்தின் பலம் –பலவீனங்களை எடைபோட்டார். தாக்கக்கூடிய வழிமுறைகளை பரிசீலித்தார். தாக்குதலை முடித்துக்கொண்டு அணிகள் பாதுகாப்பாக வெளியேறக்கூடிய ஏது நிலைகளை ஆலோசித்தார். தளபதி கருணா அம்மானோடு கலந்துரையாடி, அவருக்கு அறிவுரைகள் வழங்கி, தீட்டப்பட்ட திட்டத்தை மேலும் மெருகூட்டி, அதன் இறுதி வடிவத்தை வரைந்த தலைவர் அவர்கள், தாக்குதற் திட்டத்தின் செயலாக்கத்திற்கான ஒப்புதலையும் அளித்தார்.

வடக்குப் போரரங்கில் நிறுத்தப்பட்டிருந்த, புலிகளின் முதன்மைத் தளபதிகளுள் ஒருவரும், முல்லைச்சமரில் காத்திரமான பங்கு வகித்தவருமான – **தளபதி ராம்** அவர்களின் கட்டளைப் பணிப்பின் கீழிருந்த தென்பிராந்தியப் படையணியை, புளுகுணாவித் தாக்குதலுக்காகவும், கிழக்குப் போரரங்கின் தொடர் நடவடிக்கைத் திட்டத்தின் பொருட்டும்– மீண்டும் கிழக்கிற்கு நகர்த்தி – புளுகுணாவித் தளத்திலிருந்து 'ஆட்டிலறி' யை பாதுகாப்பாகவும், பக்குவமாகவும் அப்புறப்படுத்துவதற்கு வசதியாக, 'ஆட்டிலறி' பயிற்சி அளிக்கப்பட்ட சிறிய குழு ஒன்றையும் கூட அனுப்பி–

"ஆட்டிலறி எடுக்கப்பட்டுவிட்ட வெற்றிச் செய்திக்காக நான் காத்திருப்பேன்" என வாழ்த்தி வழியனுப்பி வைத்த தலைவர் அவர்களின் நம்பிக்கை வீண் போகவில்லை!

அம்பாறையிலிருந்து, **'மகாஓயா'** நெடுஞ் சாலையில் 19 கிலோமீற்றர் தூரத்தில், 16ம் மைல் கல்லுக்கு அருகில் அமைவிடத்தைக் கொண்டுள்ளது தளம். அதிரடிப்படையின் 3 'ப்ளற்றூன்' களையும், இறப்புக்குமுன் 'கப்டன்' தரத்திலிருந்த **மேஜர் சிறிவர்ண** வின் தலைமையிலான ஆட்டிலறி ரெஜிமென்டின் படைப்பிரிவு ஒன்றையும் இணைத்த 140 வரையான துருப்புக்கள் அங்கு நிலை கொண்டிருந்தனர். அந்த அதிரடிப்படை – இராணுவக் கூட்டிணைப்புத் தளத்தின் கட்டளைப் பணிப்பாளர் இன்ஸ்பெக்ரர் **எஸ்.ஐ. குணரட்ண** தாக்கப்படக்கூடும் என முன்னுரைப்பட்டு – பலப்படுத்தப்பட்டு – கடைசிக்காலத்தில் மேலும் பெரிதாக்கப்பட்டு, 5 வரையான சுற்றுத்தடை வேலிகளோடு காப்பு வியூகமிடப்பட்ட முகாமின் விஸ்தீரணம் 300 மீற்றர் நீளம் 250 மீற்றர் அகலம் பரந்து, பல கிலோமீற்றர்களுக்கு அகன்று கிடக்கும் ஆட்களற்றுச் சூனிய நிலமாகிவிட்ட சுற்றுக் கிரர்மங்களுக்குள் 24 மணிநேரமும் **'அசையும் காவற்குழு'** க்களை நகரவிடுவது – தேடிவரும் ஆபத்தை வாசலுக்கு வெளியிலேயே எதிர்கொண்டு மேலதிக பாதுகாப்பு ஏற்பாடு.

பகலிரவு பாராமல், ஊனுறக்கம் கருதாமல், வெற்றியன்றி வேறெதுவும் நினையாமல், தாக்குதல் வழிமுறைப்பட்ட ஒத்திகைப் பயிற்சிகளைப் பெற்ற புலிவீரர் வகுக்கப்பட்ட அணிகளாய்க் கூடியிருக்க, தளபதி கருணாம்மான் அவர்கள் இறுதியுரையை வழங்கினார். உறுதியூட்டும் தெளிவுரையாக அது பிறந்தது.

"பெரியதொரு படை நகர்த்தலுக்கு நாம் தயாராகிவிட்டோம், முல்லைத்தீவுத் தாக்குதலுக்குப் பிறகு, இயக்கத்தின் அடுத்த பெரிய நடவடிக்கைக்களமாக இது இருக்கப்போகிறது. முன்பு – புதுக்குடியிருப்புத் தாக்குதலில் எம்மால் முழுமையான வெற்றியைப் பெறமுடியவில்லை. அம்பிலாந்துறை, கிண்ணியடி தாக்குதல்களிலும் முகாம்களை எம்மால் வீழ்த்த முடியவில்லை. ஆனால் சில பின்னடைவுகளைச் சந்தித்தமைக்காக நாம் தோல்வி மனப்பான்மையை அடைந்துவிடக் கூடாது. அந்தக் களங்களில் வீழ்ந்த எம் தோழர்களின் நினைவோடு, குறிப்பாக, **கரும்புலி றங்கனின்** முதல்வருட நினைவோடு இந்த நடவடிக்கையில் நாம் முழுமையாக வெல்லவேண்டும்!

தளநிலைமை முற்றிலும் எமக்குச் சாதகமாகவே உள்ளது; செய்யப்பட்டுள்ள முற் தயாரிப்புக்களில் எந்தக்குழப்பமும் இல்லை. வரையப்பட்டுள்ள தாக்குதற் திட்டத்தில் எவ்வித ஐயப்பாடுகளும் இல்லை. நடவடிக்கைக்குத் தலைவர் அவர்கள் பூரணமான ஒப்புதலை அளித்துள்ளார். சொல்லித் தரப்பட்டவற்றிற்கு மாறில்லாமல் நீங்கள் ஒவ்வொருவரும் நிதானமாகவும், முழுமையாகவும், வேகமாகவும் செயற்படுங்கள் வெற்றி எமக்குத்தான்! எமது பிராந்தியத்தில் இது முக்கிமான தாக்குதல். வெற்றிச் செய்திக்காகத் தலைவர் அவர்கள் ஆவலோடும் நம்பிக்கையோடும் காத்திருக்கின்றார். அங்கு ஏனைய போராளிகளும், தளபதிகளும் எதிர்பார்த்துள்ளார்கள். **"முகாம் வீழ்த்தப்பட்டு, 'ஆட்டிலறி'யும் எடுக்கப்பட்டு விட்டது"** என்ற செய்தியை நாம் அனுப்ப வேண்டும். **"துணிந்தவன் வெல்வான்! என்பது உண்மை. எமக்கும் இப்போது துணிவுதான் தேவை. உறுதியோடும் துணிவோடும் செல்லுங்கள். வெற்றி எமக்குத்தான்!"**




**டிசம்பர் 10ம் நாளின் பின்னிரவு,** கருமுகில் கவிந்த வானத்திலிருந்து மழைத்துளிகள் பன்னீராய்த் தூவி வாழ்த்த அணிகள் நகரத்தொடங்கின. நடவடிக்கை ஆரம்பித்துவிட்டது. ஒட்டுமொத்தக் கட்டளைப் பணிப்பாளராக தளபதி கருணாம்மான் நடவடிக்கையை ஒருங்கிணைத்து நெறிப்படுத்த, கருணாம்மானின் துணைவராக தளபதி ராம் அவர்கள் தாக்குதற் களத்தை வழிப்படுத்தினார். முகாம் இரண்டு முனைகளினூடாகத் தாக்கப்பட்டது, 'ஆட்டிலறி' நிலையினை உள்ளடக்கிய தளத்தின் ஒரு பகுதியை வீழ்த்தும்பணி – இளநிலைத் தளபதிகளுள் ஒருவரும், முல்லைத்தீவு, கிளிநொச்சி சமர்களில் பங்கேற்றவருமான **தாத்தா** வின் அணிக்குரியது. தளத்தின் மறுபகுதியை வீழ்த்தும்பணி – இன்னொரு இளநிலைத் தளபதியும், கிழக்குமுனையில் பல வெற்றிக்களங்களைக் கண்டவருமான – **ஜீவனின்** அணிக்குரியது.

முகாம் தாக்குதலணிகளுக்கு மேலதிக உதவி வழங்குவதற்குரிய துணை அணிகளாகவும், வழங்கல் மற்றும் வேறு பணிகளுக்குரிய அணிகளாகவும் கிழக்குமுனையில் சிறந்த களத் தளபதிகளான **விஷ்னு, குட்டி, நாதன், சைலன்** மற்றும் **குமரன்** ஆகியோரது சண்டைப் பிரிவுகள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டன.

ஒருபுறம் **அம்பாறை** நோக்கிய வீதியில் **கொண்டைவெட்டுவான்** முகாமிலிருந்து உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காகவும், மறுபுறம் **பதுளை** நோக்கிய வீதியில்– புளியடி முகாமிலிருந்து உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காகவும் இளநிலைத் தளபதிகளான **சுது, பாலேந்திரா** ஆகியோரது அணிகளும், இந்த அணிகளுக்குரிய மேலதிக உதவிகளை வழங்கக்கூடிய தயார் நிலையில் மகளிர் படையணியின் இளநிலைத் தளபதிகளுள் ஒருவரான **மதனா** வின் சண்டைப் பிரிவுகளும் நகர்த்தி நிறுத்தப்பட்டு விட்டன.

டிசம்பர் 11ம் நாளின் முன்னிரவு – அதிகாலை மணித்துளிகள். சூழ்ந்து நெருங்கும் பேரழிவை அறியாது அமைதியாயிருந்தது தளம். மழை; கடும் மழை; மூசிப்பெய்தது மழை! குளிரில் நடுங்கித் தூங்கிக் கொண்டிருந்தனர் சிங்கள வீரர்களுள் பலர். மாவீரர் நாளுக்கு அடிவிழும் என்று நித்திரை விழித்துக் காத்திருந்த களைப்புத் தீராமல், காவலரண்களில் தூங்கி தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள் மற்றவர்கள். **'மகாஓயா'** போரரங்கப் பகுதியின் S.T.F **தளபதி A.S.P மேனநாயக்கா** வும் அன்று அங்கேதான் படுக்கையைப் போட்டிருந்தார். அவசரப்படாது, ஆறுதலாக, அமைதிகாத்து, நிதானமாக புலிகள் அண்மித்துக் கொண்டிருந்தனர். தரையோடு தரை படர்ந்து, அணுவணுவாய் ஊர்ந்து தளத்தின் வெளிப்புறக் காப்பு வியூகத்திற்கு ஒருசில யார் தூரம்வரை நெருங்கிவிட்டனர். இதோ! சண்டை ஆரம்பிக்கப் போகின்றது! வேகப்பட்ட இதயத்துடிப்போடு காத்திருந்த கணங்கள்! நகரும் அணிகளில் எமது சிறு ஒலியும் எதிரியை உசார்ப்படுத்தும்; எமது சிறு சரசரப்பும் எம்மைத் தோல்விகளுக்குள் தள்ளும். எமது சிறு இனங்காட்டலும் எமக்குப் பேரழிவைத்தரும். பெரு வெற்றிக்கும், பெருமிழப்புக்குமிடையில் ஊசலாடிய அந்தவேளை – திடீரென, துரதிஸ்டவசமாக, தாத்தாவின் அணியில் நகர்ந்துகொண்டிருந்த எம் வீரன் கடலரசனுக்குக் காலில் மிதிக்கண்ணி வெடித்தது! பெருஞ்சத்தம்!

எதிர்பார்த்திருக்க வேண்டியதுதான்; நிகழக்கூடியதுதான்; இருந்தும், எது நடக்கக்கூடாதென அவதானம் பேணப்பட்டதோ அது நடந்து விட்டது. எதிரி உசார்ப்பட்டிருப்பான். சத்தத்தின் காரணம் அறிய காதுகளைக் கூர்மையாக்கியிருப்பான். இரைந்து கொட்டிய மழைத்துளிகளினூடு கண்களை நீட்டித் துளாவியிருப்பான். ஏனோ, எதனாலோ, பன்றிதான் சிக்கியிருக்கும் என அவன் நினைத்ததனால்தானோ என்னவோ அவன்

தொடர்ச்சி 14ம் பக்கம்...

**தளபதி கருணா** அவர்கள் சமர்ப்பித்த நடவடிக்கைத் தகவற் தொகுப்பை, **தலைவர் பிரபாகரன்** அவர்கள் ஆழமாகவும், முழுமையாகவும் ஆராய்ந்தார்

வேவுத் தரவுகளை நோக்கினார். **'காணொலி'** நாடாவிற் பதியப்பட்ட தளத்தையும், தளச்சூழ்நிலையையும் அவதானித்தார். இராணுவ புவியியற் தன்மைகளை கவனித்தார். தளத்தின் பலம் -பலவீனங்களை எடைபோட்டார். தாக்கக்கூடிய வழிமுறைகளை பரிசீலித்தார். தாக்குதலை முடித்துக்கொண்டு அணிகள் பாதுகாப்பாக வெளியேறக்கூடிய ஏது நிலைகளை ஆலோசித்தார். தளபதி கருணா அம்மானோடு கலந்துரையாடி, அவருக்கு அறிவுரைகள் வழங்கி, தீட்டப்பட்ட திட்டத்தை மேலும் மெருகூட்டி, அதன் இறுதி வடிவத்தை வரைந்த தலைவர் அவர்கள், தாக்குதற் திட்டத்தின் செயலாக்கத்திற்கான ஒப்புதலையும் அளித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# “புளுகுணாவி”....

சுடவில்லை! எம் நல்லகாலம், அல்லது அவனது கெட்டகாலம் – சுடுகலங்களை ஒன்று சேர்த்து அவன் முழக்கித் தள்ளவில்லை!

ஆனால் **கடலரசன்** கத்தியிருந்தால், பிய்ந்து சிதறிய பாதத்தின் வேதனை தாங்காது குரலெடுத்திருந்தால் "பன்றியல்ல, பகைவர் நாம் புலிகளே" என்பதை இனங்காட்டிக் கூவியிருந்தால் நடந்திருக்கக்கூடிய அனர்த்தம் கற்பனைக்கே கஸ்டமானது! புளுகுணாவிப் படைத் தளத்தின் வேலிச்சுருள் கம்பிகளுக்குள் எம்தோழர் சிக்கிச்சிதறிக் கிடக்கும் பெருந்துயர் நேர்ந்திருக்கும். ஆனால், அப்படி நடக்கவில்லை. அப்படி நடக்க அந்தவீரன் விடவில்லை. தான் பட்ட வேதனையைத் தனக்குள்ளேயே தாங்கிக் கொண்டான் எம் தோழன்! கட்டுப்போட, தூக்கியெடுக்க, வெளியில் அகற்ற எதற்குமே அங்கு அவகாசம் இல்லையென அவன் அறிவான். அதற்கு முயன்றவர்களைத் தடுத்தான். நிதானமாக, உறுதியாக, அமைதியாக முன்னேறிய தோழர்களுக்கு விடையளித்தான். அந்தப்பெரு வெற்றியின் முதல் விலையாக, அவன் தன்னைச் செலுத்தத்துணிந்தான். குருதிஓடி, குருதிஓடி மெல்லமெல்ல எம்தோழன் கண்மூட, அவனைப்பிரிந்து வெற்றிதேடி, வெற்றிதேடி மெல்லமெல்ல எம் வீரர் நெருங்கினர்.

புலிகளுக்கு நேரம் 12.45. பகைவனுக்கு நேரம் 1.15. திகைப்பூட்டும் அடி! மயிர்க்கூச்செறியும் தாக்குதல்! 81 மில்லிமீற்றர், 60 மில்லிமீற்றர் மோட்டார்களின் முழக்கத்தோடு ஆரம்பித்தது உக்கிரசண்டை! கடுஞ் சீற்றமான மூர்க்கப்பாய்ச்சல்! காப்புத்தடை வியூகங்களை உடைத்து ஆவேசமாய் நுழைந்தனர் புலிகள்! ‘ஆட்டிலறி’ நிலையினை விழுத்துவதிலேயே முழுக்கவனமும் செலுத்தப்பட்ட ஆரம்ப இலக்கு. ஏற்ற வழிமுறையிலேயே தாக்குதல் திட்டமும் வகுக்கப்பட்டிருந்தது. சண்டை ஆரம்பித்த பத்தாவது நிமிடம், ‘ஆட்டிலறி’ யைப் புலிகள் கையேற்றனர். அதைத் தடுப்பதற்காகச் சண்டையிட்ட எதிரியின் ‘ஆட்டிலறி’ப் பிரிவினர் முழுமையாகவே அழிக்கப்பட்டனர். உக்கிரமாகச் சண்டை நீண்டது. தளத்தைத் தக்கவைக்கவும், இழந்து விடாமல் காத்து ‘ஆட்டிலறி’ யைத் திரும்பவும் மீட்டெடுக்கவும் பகைவன் கடுமையாகப் போரிட்டான். தன்னால் இயலுமான உச்சக்கட்டத் தற்காப்புச் சண்டையை நிகழ்த்தினான். அயற் தளங்களிலெல்லாம் அவலமாய் உதவி கோரினான்.

உகண பகுதியின் ஹிங்குராகொட வான்படைத்தளம் கையாலாகாத நிலையில் கிடந்தது. கொட்டிய மழை பகைவனுக்கு கொடுமை செய்தது. முகாமைப் பாதுகாப்பதற்கான சண்டையில் எவ்வித பங்கையும் வகிக்கமுடியாமல் வான்படைக்கு இடையூறு விளைவித்தது மழை!

இரண்டே கிலோமீற்றர் தூரத்திலிருந்த புளியடி முகாம் சிப்பாய்கள் புத்திசாலிகள். உதவிக்குப் போவதற்குப் பதிலாக, தாமும் தாக்கப்பட்டுவிடுவோம் என்ற பீதியில் முகாமை முற்றாகக் கைவிட்டு வெளியேறிப் பக்கத்துக் காட்டுக்குள் பதுங்கிக்கொண்டிருந்தனர்.

பத்து கிலோமீற்றர் தூரச் சுற்றுப் பாதைக்கு அப்பாலிருந்த கொண்டை வெட்டுவான் முகாம் படையினர் பாவம்! உதவிக்குப்போய் உபத்திரவப்பட்டு போனவழியில் அடிவாங்கி தாக்கியழிக்கப்பட்ட **பவல்** (Buffel) கவச வண்டியோடு திரும்பியோடினர்!

ஒருமணிநேரக் கடும் சண்டையின் பின்னர் ஏனைய முகாம்களுடனான தொடர்பைத் தளம் இழந்தது. அங்கு நடைபெறுவது என்ன என்பதை அறிய முடியாத நிர்க்கதி நிலையில் மற்றைய முகாம்கள் தவித்திருக்க, அங்கு 50 வரையான படையினர் கொல்லப்பட்டும், மேலும் அதேதொகையினர் காயப்பட்டும் வீழ்ந்து போயிருக்க, தளத்தைப் பாதுகாப்பதென்பது செய்தற்கரிய ஒரு இடரார்ந்த தொல்லையாகவே ஆகிப்போக, எஞ்சிய சிப்பாய்களும் தளபதிகளும் தப்பியோடிவிடும் முடிவுக்கு வந்தனர். சுற்று முகாம்களிலிருந்து பகைவனுக்குக் கிடைத்த ‘ஆட்டிலறி’த் தாக்குதற் துணையையும் இகழ்ச்சிக்குரியதாக்கி வியப்பூட்டும் அதிரடியை நிகழ்த்திய புலிகள், வேறு வழி எதையும் அவர்களுக்கு விட்டு வைக்கவில்லை. இரண்டுமணிநேர தொடரடியின் பின்பு, தாம் முழுமையாக அழிந்துபோவதைத் தவிர்ப்பதற்காகக் காயப்பட்ட சகாக்களையும் தூக்கிக்கொண்டு எஞ்சிய சிங்கள வீரர்கள் தப்பியோட, தளம் புலிகளின் கைகளில் முழுமையாகவே விழுந்தது.

அதே கிழக்குப் போரரங்கு; வேறொரு சந்தர்ப்பம். வேறொரு முனை. வேறொரு இலக்கு. வேறொரு பணி. அதே "சிறப்பு அதிரடிப்படை" யின் துணைக்கட்டளைத் தளபதியான – இறப்புக்கு முன்னர் 'SSP' தரத்திலிருந்து – DIG **எச். உபாலி டி.பி.ஏ.டி சொய்சா சகபந்து** அவர்கள்–

டிசெம்பர் 17 ம் நாள் மாலை 4.30 மணியளவில், மட்டக்களப்பு – கல்முனை பிரதான சாலையில் காரைதீவு S.T.F தளத்திற்குப் போய்க் கொண்டிருக்கும்போது, கல்முனைப் பொலிஸ் நிலையத்திற்கு ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள தரவைக் கோவில் என்னுமிடத்தில் வைத்து, காத்திருந்து – சரிவர இனங்கண்டு தனது **‘பஜரோ’** வண்டிமீது ‘மோட்டார் சைக்கிளோடு’ மோதி நிகழ்த்தப்பட்ட மனிதக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

மிகப் பிரபல்யம் வாய்ந்த சிங்களப்படை அதிகாரியும், ஒரு தசாப்த காலத்திற்கும் அதிகமாகப் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவரும், வியாபித்த துறைசார் பட்டறிவு கொண்ட ஒரு போரியலாளருமான DIG சகபந்து, கிழக்குப் போரரங்கில் புலிகளை முறியடிப்பதற்கான போர்ச் செயற்பாடுகளில், தாக்கம் மிகுந்த இன்றியமையாத – பங்கினை வகித்தவராவார்.

இறுதியாகக் கொல்லப்படும்போது, மட்டக்களப்பில் நிறுத்தப்பட்டுள்ள தரைப்படையின் 3வது டிவிசன் படைப்பிரிவின் தளபதி **மேஜர் ஜெனரல் சிறீபீரிசுடன்** இணைந்து புளுகுணாவித் தாக்குதலையடுத்து முன்னெடுக்கப்பட்ட **“பாடும் மீன்”** படையெடுப்பினை வழிநடாத்திக்கொண்டிருந்த அவர்–

1990 இல் புலிகளின் கைகளிலிருந்த பல பகுதிகளை மீளக் கைப்பற்றியதுடன், தனது பொறுப்பின் கீழிருந்த **"யால"** மற்றும் ஏனைய பிரதேசங்களில் புலிகளை முறியடிக்கும் நடவடிக்கைகளிலும் S.T.F கொமாண்டோக்களை வழிநடாத்தி குறிப்பிடத்தக்க பாத்திரத்தை வகித்தார்.

பிரிட்டனின், **‘கீனி மீனி சேவை’** (Keeni Meeni Service - KMS) விசேட படைக்காகப் பணியாற்றும், SAS (Special Air Services) இன் மூத்த உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டு, பாகிஸ்தானினதும் இஸ்ரேலினதும் சிறப்புப் பயிற்சிகளால் வனைந்தெடுக்கப்பட்டதுடன், பாகிஸ்தானின் தனித்துவப் போர்ப் பயிற்சிப் பிரிவினரால் பயிற்றுவிக்கப்பட்ட சிறிலங்காவின் மிகச்சில போரியல் நிபுணர்களுள் ஒருவருமான DIG சகபந்து அவர்கள் இறக்கும்போது தமிழீழப்போரில் கொல்லப்பட்ட S.T.F இன் அதியுயர் தளபதி என்ற பெருமைக்குரியவராகினார்.

தமிழர் தாயகத்தின் மீதான ஆக்கிரமிப்பு அடக்குமுறைப் போரிற்கு இறுதியாகத் தலைமை ஏற்ற சிங்களத்தின் இன்றய **சந்திரிகா - அனுருத்த** அரசாங்கம், கடந்த ஆண்டில், அதிசிறந்தது எனத் தான் கருதிய இராணுவ மூலோபாயம் ஒன்றை இனவாதப் போரின் களத்திலிறக்கியது.

கிழக்கில் தமது பிடியைச் சற்றுத் தளர்த்தி அந்தப் பலத்தையும் வடக்கில் பிரயோகித்து, புலிகளின் மைய நிர்வாக ஆதிக்கத்தையும் நிலக்கட்டுப்பாட்டையும் கொண்டுள்ள வடக்கில் அவர்களை வென்று, அதன் வாயிலாகக் கிழக்கிலும் அவர்களை முறியடித்து, முடிவாகத் தமிழீழப் போரையே தோற்கடித்து

**அப்படி நடக்க அந்தவீரன் விடவில்லை. தான் பட்ட வேதனையைத் தனக்குள்ளேயே தாங்கிக் கொண்டான் எம் தோழன்! கட்டுப்போட, தூக்கியெடுக்க, வெளியில் அகற்ற எதற்குமே அங்கு அவகாசம் இல்லையென அவன் அறிவான். அதற்கு முயன்றவர்களைத் தடுத்தான். நிதானமாக, உறுதியாக, அமைதியாக முன்னேறிய தோழர்களுக்கு விடையளித்தான். அந்தப்பெரு வெற்றியின் முதல் விலையாக, அவன் தன்னைச் செலுத்தத்துணிந்தான். குருதிஓடி, குருதிஓடி மெல்லமெல்ல எம்தோழன் கண்மூட, அவனைப்பிரிந்து வெற்றிதேடி, வெற்றிதேடி மெல்லமெல்ல எம் வீரர் நெருங்கினர்.**

---

விடலாம் என்பதுவே அந்தப் புதிய நுட்பத் தந்திரோபாயமாகும்.

இன யுத்தத்தில் தனது புதிய மூலோபாயத்தைக் கையாளப் புறப்பட்ட சிங்கள ஜெனரல், வட போரரங்கில், புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த நிலப்பகுதிகள்மீது பெருமெடுப்பிலான ஆக்கிரமிப்புப் படையெடுப்புக்களை ஆரம்பித்து, அவற்றைத் தொடராக நிகழ்த்தி வந்த ***"றிவிரச–1"*** ற்குப் பின்னான காலத்தில்–

எதிரியின் மூலோபாயத்தை முறியடிக்கும் எதிர்மாறு மூலோபாயமாகவும் போராட்டம் பிரவேசித்துவிட்ட புதிய கட்டத்தின் தன்மைக்குப் பொருத்தமானதாகவும், தமிழீழ மக்களின் சுதந்திரத்தை நோக்கிய போரின் இறுதி நகர்வாகவும் –

போர்க்களத்தில் புதிய போருபாயம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டு வந்து காலத்தின் தேவையை நிறைவேற்றத் தீர்மானித்தார் தலைவர் பிரபாகரன் அவர்கள்.

வரலாற்றுப் பழியைச் சுமக்கக்கூடிய பெரும் இராணுவத் தோல்விகளுக்கும், அதன் உடனடி நீண்டகால விளைவுகளான பெரும் அரசியற் தோல்விகளுக்கும் சிங்களத் தலைமையைச் சொந்தக்காரர்களாக்குவதுடன், சளையாது – பணியாது – போராடி விடுதலையை வென்றெடுத்த மக்கள் என்ற சரித்திரப் பெருமையைத் தமிழர்களின் தலைகளில் சூடுவதற்காகவும், தலைவர் பிரபாகரன் அவர்கள்–

தமிழீழ யுத்தத்தின் இரு பிரதான பொருதரங்கங்களான வடக்கிலும் – கிழக்கிலும் –

அந்தந்தத் தளப் பிராந்தியங்களின் இராணுவ, அரசியல், புவியியல், குடியியல் தன்மையியல்புகளுக்கு ஏற்றதான–

கெரில்லா யுத்த முறையின் இருவேறு பரிமாண வகைப்பட்ட போர் வடிவங்களை, ஒரே சமநேரத்தில் நடைமுறைப்படுத்தத் தலைப்பட்டார்.

நிலத்தைத் தக்கவைத்திருப்பதில் குறைந்தளவு அக்கறையைச் செலுத்தி, எதிரி முன்னேற இடம் கொடுத்து ஆட்பலத்தைத் தக்கவைத்து, திட்டமிட்டுப் போரணிகளை ஒருங்கிணைத்து நகர்த்தி, எதிரியின் பாரிய இலக்குகளின் மீது ஒருமுகப்படுத்தித் தாக்கி, படுநாசங்களை உண்டுபண்ணும் திடீர் பெருமெடுப்பு நடவடிக்கைகளை வடக்குப் போரரங்கிலும் –

நிலத்தைத் தக்கவைப்பதை முழுமையாகவே கைவிட்டு, திகைப்பூட்டும் அதிரடிகளை பரவலாகத் தீவிரப்படுத்தி, போர் வெறுக்கும் விரக்திகர மனநிலைக்குள் சிங்களச் சிப்பாய்களைத் தள்ளி, தோற்கடிக்கும் தொடரடிகளைக் கிழக்குப் போரரங்கிலும் – தலைவர் அவர்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

முல்லைத்தீவு வென்றெடுத்த பெரு வெற்றித் தாக்குதலும், ‘சத்ஜய’ வை எதிர்கொண்ட தந்திரோபாயச் சமர்க் களமும், ஆனையிறவு – பரந்தன் அழித்தொழிப்புப் பேரடியும் கிழக்கில் பரவலாகத் தொடரும் வெற்றிகர அதிரடிகளும் – அவர் நேரடியாக நெறிப்படுத்திச் செல்லும் மூலோபாயத்தின் இதுவரைகாலப் பெறுபேறுகள். ❐

**நிலத்தைத் தக்கவைத்திருப்பதில் குறைந்தளவு அக்கறையைச் செலுத்தி, எதிரி முன்னேற இடம் கொடுத்து ஆட்பலத்தைத் தக்கவைத்து, திட்டமிட்டுப் போரணிகளை ஒருங்கிணைத்து நகர்த்தி, எதிரியின் பாரிய இலக்குகளின் மீது ஒருமுகப்படுத்தித் தாக்கி, படுநாசங்களை உண்டுபண்ணும் திடீர் பெருமெடுப்பு நடவடிக்கைகளை வடக்குப் போரரங்கிலும் -**

**நிலத்தைத் தக்கவைப்பதை முழுமையாகவே கைவிட்டு, திகைப்பூட்டும் அதிரடிகளை பரவலாகத் தீவிரப்படுத்தி, போர் வெறுக்கும் விரக்திகர மனநிலைக்குள் சிங்களச் சிப்பாய்களைத் தள்ளி, தோற்கடிக்கும் தொடரடிகளைக் கிழக்குப் போரரங்கிலும் - தலைவர் அவர்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றார்.**

**தி. இனியவன் (தமிழீழம்)**

www.tamilarangam.net



## சிறுகதை

**வ**யிற்றுக்குள் நெருப்பு பிடித்துக் கொண்டது மாதிரி ஒரு உணர்வு........

சமீப காலமாக பழகிப்போய் விட்டதினால் அதைப் பொருட்படுத்தத் தோன்றவில்லை.

அது பசியினால் வருவது என்பதும் வெறும் சாயத் தண்ணி குடித்தால் கூட தற்காலிகமாய் தணியக்கூடியது என்பதும் அவனுக்குத் தெரிந்த ஒன்றுதான். "அய்யோ என்னாலேயே இந்தப் பசியை பொறுக்க முடியேலை. என்ரை குஞ்சுகள் எப்பிடித் தாங்குங்கள்."

இந்த நினைவு, பசியின் உணர்வு தரும் வேதனையை விட அதிக வேதனையைத் தரக்கூடியது.

# நியாயங்களும் மாறும்

### – தாமரைச்செல்வி –
### (தமிழீழம்)

அவன் சோர்வுடன் அந்தப் பூவரசு மர அடியில் புல் படர்ந்து கிடந்த நிலம் மீது அமர்ந்து கொண்டான். சற்றுத் தூரத்தில் வாய்க்கால்....... அதில் சிறிதளவு தண்ணீர்.

அந்த சரிவில் விளையாடிக் கொண்டிருக்கும் தங்கனும் கணேசுவும் இன்னும் அரை மணி நேரத்தில் 'பசிக்குதம்மா.......' என்று மனோன்மணியிடம் வந்து அழப்போகிறார்கள்.

மனோன்மணி பூவரசு மரத்தடியில் கட்டப்பட்ட ஏணைக்குள் இருக்கும் இரண்டு வயதுக் குழந்தையை ஆட்டிக்கொண்டே கவலையோடு அவனைப் பார்க்கப் போகிறாள். அவன் என்ன செய்யப் போகிறான்.

ஐந்து நாள் தாடியை பரபரவென்று தேய்த்து விட்டுக் கொண்டான்.

சாப்பாட்டுக்கு ஏதும் வழி செய்தே தீர வேண்டும். மிகவும் தூரத்தில் கிளிநொச்சிப் பக்கமாக 'கிபீர்' சுற்றும் மெல்லிய இரைச்சல்......... இடை இடையே எறிகணை வீச்சின் அதிர்வு.........

இந்த எட்டு மைல் தூரம் கூட பாதுகாப்பானதா என்று புரியவில்லை.

தெருக் கரையில் வாய்க்கால் புட்டியில் வரிசையாய் நின்ற பூவரசு மரங்களுக்கு நடுவே அவர்களது குடியிருப்பு.

இரண்டு பூவரசுகளுக்கு நடுவே இழுத்துக் கட்டப்பட்டிருந்த மனோன்மணியின் பழைய சேலைதான் கூரை. அதற்குக் கீழே அவர்களது மிகக் கொஞ்சமான உடமைகள்.

வாய்க்காலின் அந்தப் பக்கம் சிவப்பு நிற மண் தெரு. அதில் படலமாய் பரவும் புழுதி.

விடிந்தால் இருளும் வரை கவலையாய்....... யோசனையாய்........ அலைகின்ற மக்கள்.

இந்த இடத்திற்கு வந்து இருந்த நான்கு நாட்களாய் எத்தனை முகங்களைப் பார்த்து விட்டான்.

மலர்ச்சியாய் சிரித்த முகத்துடன் யாருமே காணப்படுவதில்லை.

ஒவ்வொரு இடம்பெயர்வின் போதும் உடமைகளை இழந்து உயிர் மட்டுமே மிச்சமாய் உள்ளவர்களாக இருக்கும் அவனைப் போல.......

முதல் தடவை இடம் பெயர்ந்து வந்ததை நினைக்க இப்போது மனம் அதிர்ந்து போகிறது.

அவன் அந்த நேரம் கொக்குவிலில் சிறு பெட்டிக் கடை வைத்து நடத்திக் கொண்டிருந்தான்.

ஒரு வருசத்துக்கு முதல், மனைவியுடனும் மூன்று பிள்ளைகளுடனும் சைக்கிளில் கட்டக்கூடிய பொருட்களுடனும் தலைச் சுமையுடனும் நடந்து வந்ததை வாழும் காலம் வரை மறக்க இயலாது.

தென்மராட்சிக்கு வந்து ஒரு தென்னைமரக் காணியில் சிறு கொட்டில் போட்டு இருந்தார்கள். திரும்ப பெட்டிக் கடை போட வசதி வரவில்லை.

அதனால், விடத்தல் பளைப் பக்கம் போய் விறகு வெட்டி சைக்கிளில் கட்டி வந்து விற்றுக் கொண்டிருந்தான். வயிற்றுக்கு நிறையா விட்டாலும் ஏதோ சமாளிக்க முடிந்தது. குழந்தைகளுக்கு கொடுத்து விட்டு அவனும் மனோன்மணியுமாக கால்வயிறு அரைவயிறு நிரப்பிய நாட்கள் அவை.

பன்னிரண்டு வயது தங்கனுக்கும் எட்டு வய்து கணேசுக்கும் இடம் பெயர்வின் தாக்கம் பற்றிப் புரியவில்லை.

விட்டு வந்த உடமைகள் பற்றிய கவலை மறந்து, வாழலாம் என்ற நம்பிக்கை வந்த நேரம் மறுபடி அடுத்த இடம் பெயர்வு.

வன்னிக்கு ஓடி வந்தபோது சைக்கிளில் கட்டக் கூடிய பொருட்களே மிஞ்சியது.

கிளிநொச்சியில் – உருத்திரபுரத்தில் ஒரு கொட்டில் போட்டு அதை அடைக்கக் கூட வசதியில்லாமல் இருந்தார்கள். புது இடம் – புது மனிதர்கள். உதவியேதும் கிடைக்காமல் பட்ட கஷ்டம். என்ன தொழில் செய்வதென்று தெரியவில்லை.

இங்கு விறகு வெட்டி விற்றுக்கொள்ள முடியவில்லை. அப்போதுதான் பெட்டிக் கடையைப் போடும் யோசனையை மனோன்மணி சொன்னாள்.

அவளின் காதுத் தோடுகளையும் மூக்குத்தியையும் குழந்தையின் காது வளையத்தையும் மூவாயிரம் ரூபாய்க்கு விற்றுவிட்டு உருத்திரபுரம் வீதியில் கடையைப் போட்டான். ஏதோ ஒரு வகையில் சீவிக்க முடிந்தது.

இப்படியாவது இருந்தால் போதும் என்று நினைத்துக் கொண்டிருக்க மறுபடி பிரச்சினை தொடங்கியது.

பரந்தன் பகுதிகளில் சண்டை நடந்தபோது, வான் வெளியில் 'கிபீரும்' 'புக்காராவும்' சுற்றி வளைத்துக் குண்டு போட்டபோதும் எறிகணை வீச்சில் கிளிநொச்சி நகரமே அதிர்ந்து கொண்டிருந்த போதும் பதட்டம் இருந்தாலும் அவர்கள் உருத்திர புரத்தில்தான் இருந்தார்கள்.

இனி எங்கே போவது என்ற ஏக்கம்....... யுத்தம் பரந்தனைச் சுற்றிய பகுதிகளில் நடந்ததால் இந்தப் பத்து மைல் தூரத்தில் இருப்பது பாதுகாப்பு என்று நினைத்திருந்தான்.

கடைசியில் குஞ்சுப் பரந்தன் பகுதிகளினால் இராணுவம் முன்னேறி வந்தபோது மழையாய் வந்து விழுந்த எறிகணைகளின் வேகத்தால் அப்படியே ஓடிவரவேண்டி வந்துவிட்டது.

நின்று யோசிக்கவும் பொருட்களை எடுக்கவும் அவகாசம் இல்லாமல் போய்விட்டது.

கடையில் உள்ள பொருட்களை எடுத்து வராததுதான் மிகுந்த கவலையைத் தந்தது.

கொக்குவிலிலிருந்து கொடிகாமம், அதன் பிறகு உருத்திரபுரம், கடைசியாய் ஸ்கந்தபுரம் என்று எத்தனைதரம் ஓடியாகி விட்டது. ஒவ்வொரு தடவை ஓடும் போதும் கொஞ்சம் கொஞ்சமாய் பொருட்களை இழந்து இப்போது முற்றிலும் இழந்தாகி விட்டது.

இப்போது இங்கே இருந்து கொண்டு என்ன தொழில் செய்வது என்று ஒரே திகைப்பாக இருந்தது.

இந்த வாய்க்கால் கரையில் கூட இன்னும் எத்தனை நாளைக்கு வசிக்க முடியும். மழைக்காலம் வரப்போகிறது. அதை நினைக்க மனதுக்குள் இப்போதே குளிர் பிடித்துக் கொண்டது.

கவலையோடு சுற்றிலும் பார்த்தான்.

சூரியன் உச்சிக்கு வந்து கொண்டிருந்தது.

இந்தத் தடவை ஐப்பசி பிறந்த பின்னும் மழை கடுமையாய்ப் பெய்யவில்லை. கோடை காலம் மாதிரி வெய்யில் எறிக்கிறது.

மனோன்மணி மரத்தின் கீழ், நசுங்கிய சிறு சருவத்தை வைத்து ஒரு பிடி அரிசி போட்டு கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தாள்.

"அரிசி எங்கால அப்பா?"

"ஒரு பையில் போட்டு வந்த அரிசியைத்தான் மிச்சம் பிடிச்சு இண்டைக்கும் கஞ்சி காய்ச்சிறன். இதோட இதுவும் முடிஞ்சுது"

'நாளைக்கு?' என்ற கேள்வி நெஞ்சு வரை வந்து நின்றது.

"போற போக்கைப் பாத்தால் சண்டை பெரிசாய் வரும்போல கிடக்குது."

குரலில் கவலையும் சலிப்பும் பிரதிபலித்தது.

"ஓமப்பா தொடர்ந்து 'ஷெல்' அடித்துக் கொண்டிருக்கிறாங்கள், ஒரு இடைவெளி விட்டாங்களெண்டால் உருத்திர புரத்துக்குப் போய் எல்லாச் சாமான்களையும் கட்டிக்கொண்டு வந்திடலாம். கடைச் சாமானைக் கொண்டு வந்திட்டால் இந்த றோட்டுக் கரையிலையே கடைபோட்டு நடத்தலாம். எத்தனை நாளைக்கு இப்படியே சும்மா இருக்கிறது?"

"ஆனா. போகப் பயமா இருக்கப்பா. வீட்டுச் சாமானை எடுக்கப் போய்த்தானே ஆக்கள் அம்பிடுறது அல்லது 'ஷெல்'லால் ஒரு காயம் வந்தா என்ன செய்யிறது? நீங்கள் போக வேண்டாம் ஏதோ பாப்பம்."

"நாங்கள் போகாட்டி கள்ளர் வந்து எல்லாத்தையும் கொண்டு போகப் போறாங்கள். அதுதான் யோசனையாய்க் கிடக்கு"

அவள் ஒன்றும் பேசாமல் தடிச்சுள்ளி களைத் தள்ளி அடுப்பை எரிய விட்டாள்.

ஓடி வந்த தங்கன் எரிகின்ற அடுப்பைப்



பார்த்துவிட்டு "இண்டைக்கும் கஞ்சியோ. அய்யோ! எனக்குக் கஞ்சி வேண்டாம்", என்று சிணுங்கத் தொடங்கினான்.

"என்ரை அப்பனல்லே, பிள்ளை சொன்னது கேட்கும்"

அவள் சமாதானப் படுத்த முயன்றாள்.

"எனக்குத் தெரியாது எனக்குக் கஞ்சி வேண்டாம் எவ்வளவு பசிக்குது தெரியுமோ?"

"நாளைக்கு பிள்ளையளுக்கு சோறு காய்ச்சித் தாறன்......... என்ன."

"நேற்றும் இப்பிடித்தான் சொன்னனீங்கள், பிறகு இண்டைக்கும் கஞ்சி காய்ச்சிறீங்கள்."

கண்களில் நீர் தழும்ப முறைத்து நிற்கும் பிள்ளையைப் பார்க்க அவளுக்குத் தாங்க முடியாமல் போனது.

"இங்க வாடி குஞ்சு, கட்டாயம் நாளைக்கு சோறு காய்ச்சித் தாறன்." அவள் கையை நீட்டிக் கூப்பிட, தங்கன் கிட்ட வராமல் பூவரசு மரத்துடன் ஒட்டிக் கொண்டு நின்றான்.

மெலிந்த முகத்தில் அழுகை

தொடர்ச்சி 16ம் பக்கம்...

தெருக் கரையில் வாய்க்கால் புட்டியில் வரிசையாய் நின்ற பூவரசு மரங்களுக்கு நடுவே அவர்களது குடியிருப்பு.
இரண்டு பூவரசுகளுக்கு நடுவே இழுத்துக் கட்டப்பட்டிருந்த மனோன்மணியின் பழைய சேலைதான் கூரை. அதற்குக் கீழே அவர்களது மிகக் கொஞ்சமான உடமைகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நியாயங்களும் ....

சிறுகதை (தொடர்ச்சி)

வருவதற்கான அறிகுறி.........

"கணேசு காலமை பாண் திண்டவன். நான் அதுவும் தின்னேலை"

"அது பக்கத்தில் அந்த ஆச்சி தந்தவ" என்றான் கணேசு.

"எனக்குச் சரியாய் பசிக்குதப்பா....... வாங்கோ எங்கட வீட்டை போவம். வாங்கோ அங்க போனா சமைச்சுச் சாப்பிடலாம்."

அவன் கவலையுடன் மனோன்மணியைப் பார்த்தான்.

"மெய்யப்பா........ இப்ப பதினொரு மணிதானே ஆகுது? மத்தியான நேரம் கொஞ்சம் 'ஷெல்' அடியும் குறைவாய் இருக்குது 'பொம்மரு'களையும் காணேல்லை. ஒருக்கால் வீட்டை போய் பாத்திட்டு வரட்டே?"

அடுப்பை ஊதியவள் சட்டென்று நிமிர்ந்தாள்.

"என்னவோ பயமாய் இருக்கப்பா அங்க சனமொண்டும் இல்லையாம். குஞ்சுப் பரந்தன் ஏழாம் வாய்க்கால் எல்லாம் ஆமி வந்திட்டுதாம்.

மாணிக்கப் பிள்ளையார் கோயிலடியிலையும் ஆமியாம்."

"நான் முறிப்பு வரைக்கும் போய்ப் பார்த்து, அங்கால போகலாம் எண்டால், அதுவும் ஆக்கள் போனால்த்தான் போவன், இல்லாட்டி திரும்பி வாறன். இங்கை இருந்தால் அங்கத்தை நிலைமை விளங்காது. போய்ப் பாத்து ஏலுமெண்டால் கடைச் சாமான்களையும்



வீட்டில இருக்கிற மா, சீனியையாவது எடுத்து வரலாம். பிள்ளையள் பசி பசி எண்டு சொல்ல வயிறு எரியுது."

அவள் எதுவும் பேசவில்லை.

"என்ன போயிற்று வரட்டையப்பா?"

"என்னவோ கவனமாய் போட்டு வாங்கோ."

அவன் எழுந்து பூவரசு மரத்தில் சாத்தி வைத்திருந்த சைக்கிளை எடுத்தான்.

"அப்பா........ நானும் உங்களோடை வரட்டே?" தங்கன் கேட்டான்.

"வேண்டாம் ராசா, நீ இங்கயே நில்லு."

"இல்லையப்பா, நீங்கள் சாமான்களை சைக்கிளில கட்டி வர நான் பசளைப் பையில கட்டி தலையில வைச்சுக்கொண்டு வருவன். ரெண்டு பேரும் போனால் கனக்க சாமான் கொண்டு வரலாமல்லே"

அவன் ஒரு வினாடி யோசித்து, மனோன்மணியிடம் திரும்பினான்.

"என்னப்பா செய்வம் பிள்ளையையும் கூட்டிப் போகட்டே?"

"கவனமப்பா 'ஷெல்' அடிச்சா பிள்ளை பயந்திடும்."

"பின்ன சரி. வா."

தங்கனையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு அவன் புறப்பட்ட போது பன்னிரண்டு மணியாகிக் கொண்டிருந்தது.

அரை மணியில் கோணாவில் சந்திக்கு வந்தார்கள். செம்மண் வீதி அந்த வெய்யிலில் புழுதி பறக்க நீண்டிருந்தது. அதில் விலத்திப் போக ஏலாத அளவுக்கு ஆட்கள்.........

தெருவோர மர நிழல்களில் தூசு படிந்து, களைத்துப் போன முகங்களுடன் மூட்டை முடிச்சுக்களுடன் இருக்கின்ற வர்களைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது.

**செம்மண் வீதி அந்த வெய்யிலில் புழுதி பறக்க நீண்டிருந்தது. அதில் விலத்திப் போக ஏலாத அளவுக்கு ஆட்கள்.........**

**தெருவோர மர நிழல்களில் தூசு படிந்து, களைத்துப் போன முகங்களுடன் மூட்டை முடிச்சுக்களுடன் இருக்கின்ற வர்களைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது.**

கிளிநொச்சிப் பக்கமாய் 'கிபீரின் இரைச்சல் கேட்டது. ஐந்து நிமிடம் நின்று பார்த்துவிட்டு தொடர்ந்து போனார்கள். ஊற்றுப்புலம் தாண்டி முறிப்பை அடைந்தபோது அங்கிருந்து கூட்டம் கூட்டமாக சனம் வந்து கொண்டிருந்தது. வந்துகொண்டிருந்தவர்களிடம் அங்கு நின்றவர்கள் "கூளாவடிப் பக்கம் போகலாமே......... எட்டாம் வாய்க்கால் போகலாமே" என்று விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கே ஒரு அரைமணி நேரம் தயங்கி நின்று விட்டு குளக்கட்டை நெருங்கினார்கள். பக்கத்தில் இறங்கிப் போகும் ஒற்றையடிப் பாதையில் சிறிது தூரம் போக பிள்ளையார் கோயிலடி வந்தது. அங்கே சிறு கூட்டமாய் ஆட்கள். அடுத்தடுத்து இரண்டு 'ஷெல்' சற்றுத் தூரத்தில் விழுந்து வெடித்தன.

சைக்கிளில் இருந்து இறங்காமல் ஒரு காலை ஊன்றிக்கொண்டு அவர்களிடம் கேட்டான்.

"உருத்திரபுரப் பக்கம் போக ஏலுமே......?"

"அந்தப் பக்கம் சனங்கள் போய் வருகுதுதான். சிவன் கோவிலடியிலை 'ஷெல்' விழுகுது. 'ஷெல்' விழுகிற நேரம் ஏன் அங்கை போறியள்?"

"வீட்டுச் சாமான் ஒண்டும் எடுக்காம ஓடி வந்திட்டம். சாப்பிடக்கூட வழியில்லை"

"ஏதோ கவனமாய் போய்ப் பாருங்கோ"

தடதடக்கும் நெஞ்சோடு சைக்கிளை மிதித்தான். ஒரு மைல் போனதும் எதிரே நீள இருந்த வீதியில் எந்த ஆட்களையும் காணவில்லை. நாய்கள் ஊளையிடும் ஒலியையும் தூர 'ஷெல்' விழுந்து வெடிக்கும் ஓசையையும் தவிர, வேறு எந்தச் சத்தமும் இல்லை.

பய உணர்வு மனதுக்குள் நிரம்பியது. அந்த அமைதியை தாங்க இயலாமல் இருந்தது.

சமீபத்தில் 'ஷெல்' விழுந்து அதிர்ந்தது. திரும்பிப் போவோமா என்று ஒரு கணம் நினைத்தான். "வாங்கோப்பா! டக்கெண்டு வீட்டை போயிட்டு வரலாம்" தங்கன் அவசரப் படுத்தினான்.

அடுத்த 'ஷெல்' இன்னமும் சமீபமாய் வெடிக்க, சயிக்கிளுடன் சரிந்து விழுந்தார்கள்.

"கடவுளே........ கிட்டக் கிட்ட விழுகுது..........

"வா ராசா திரும்பிப் போவம். ஏலாது போல கிடக்கு"

"இல்லை அப்பா அவங்கள் அடுத்த 'ஷெல்' அடிக்கிறத்துக் கிடையிலை வீட்டை போயிற்று வருவம்."

மெல்லிதாய் கேட்ட 'கிபீரின்' இரைச்சல் இப்போது சமீபத்தில் கேட்டது. துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் தூரத்தில் அதிர்ந்தன.

"சாமான்களை எடுக்கப் போய் ஏதும் நடந்தால்......... பிள்ளையையும் கூட்டி வந்திட்டன்"

அவன் மனம் பதைபதைத்தது.

"திரும்பிப் போவம் ராசா. பிறகு வந்து எடுப்பம்"

தங்கனின் முகத்தில் ஏக்கமும் ஏமாற்றமும் கவலையாய்ப் பரவியது.

"சாமான் எடுத்துக் கொண்டு போனால்தானே அம்மா சமைச்சுத் தருவா"

தங்கனை தன்னோடு ஆதரவாய் அணைத்துக்கொண்டு, "முன்னால ஆக்கள் ஒருத்தரையும் காணேல்ல. அங்கை ஆமி நிண்டாலும் தெரியாது. போய் நாளைக்கு வருவம்" என்றான்.

விருட்டென்று அவனின் கையை விலக்கிக் கொண்டு திரும்பிய தங்கன்,

"அங்கை அப்பா அந்தக் காணிக்கு வெளியில ஆரோ மரவெள்ளிக் கிழங்கு புடுங்கிப் போட்டிருக்கினம்" என்றான்.

அவன் திரும்பிப் பார்த்தான்.

பக்கத்துக் காணிக்குள் வரிசையாய் மரவெள்ளி மரங்கள். இந்தப் பக்க வரிசையில் கிழங்குகள் புடுங்கப்பட்டு, வெளியே வேலி மர அடியில் சிறு குவியல்களாய் குவிக்கப்பட்டிருந்தது.

"காணிக்காரர் கிழங்கு பிடுங்கின குறையில 'ஷெல்' அடிச்சாப்போல விட்டுட்டு ஓடிட்டினமாக்கும்"

"அப்பா......."

தயக்கத்துடன் கேட்டான்.

"இதில நாலைஞ்சு கிழங்கை எடுத்துக் கொண்டு போவமே........"

**சமீபத்தில் 'ஷெல்' விழுந்து அதிர்ந்தது. திரும்பிப் போவோமா என்று ஒரு கணம் நினைத்தான். "வாங்கோப்பா! டக்கெண்டு வீட்டை போயிட்டு வரலாம்" தங்கன் அவசரப் படுத்தினான்.**

**அடுத்த 'ஷெல்' இன்னமும் சமீபமாய் வெடிக்க, சயிக்கிளுடன் சரிந்து விழுந்தார்கள்.**

அவன் திடுக்கிட்டு தங்கனைப் பார்த்தான். தங்கனின் கண்களில் தெரிந்த பசியின் சோர்வு அவன் மனதைச் சுருக்கென்று குத்தியது.

"வேண்டாம் ராசா. ஆற்றயேன் பொருள் நாங்கள் எடுக்கக் கூடாது.

"சும்மாதானே கிடக்கு, அவையள் வந்து எடுக்காட்டி பழுதாய்த்தானே போகும். நாலு கிழங்கு எடுத்துக்கொண்டு போனால் அம்மா அவிச்சுத் தருவா. சரியாய்ப் பசிக்குதப்பா."

கண்களில் பளபளப்பு. உதடு துடிக்க கெஞ்சினான். அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். யாரையும் காணவில்லை.

கிழங்குக் குவியலை இரு கைகளாலும் அள்ளிக் கொண்டு, "அஞ்சு கிழங்கு எடுப்பமே அப்பா" என்று அங்கிருந்தே கேட்டான்.

"நாலு காணும். கெதியாய் ஓடி வா"

குனிந்து எடுத்துக் கொண்டிருந்த தங்கனைப் பார்த்துக் கொண்டு நின்ற அவன், சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான். நாலைந்து பேர் சைக்கிளில் வருவது தெரிந்தது.

"டேய்! ஆரடாவன் கிழங்கு எடுக்கிறது?" அந்த உறுமல் வார்த்தைகளில் அவன் வெலவெலத்துப் போய் தங்கனைப் பார்த்தான்.

அதற்குள், வந்தவர்களில் இருவர் அவனைப் பிடித்துக் கொள்ள மற்றவர்கள் தங்கனை ஒரு கொத்தாய் பிடித்தார்கள்.

"அப்பா..... அப்போய்....."

தங்கனின் அலறலில் அவன் துடித்துப் போனான்.

"அய்யோ என்ரை பிள்ளை...... அவனை விடுங்கோ" அவன் திமிறிக் கொண்டு அங்கே போக முயன்றான்.

"பிள்ளையைக் களவெடுக்க விட்டுட்டு நீ காவல் இருக்கிறியே?" அவனுக்கு மாறி மாறி அடித்தார்கள்.

தங்கனை அமுத்தி வைத்து மிதித்தார்கள்.



அவர்களின் அடி தாங்காமல் தங்கன், "அம்மா அம்மா" என்று அலறினான். நைந்து போயிருந்த சட்டை 'சர்' என்று கிழிந்தது.

"நாலு நாளாய் கிழங்கு களவு போகுது. ஆரடா எடுக்கிறதெண்டு பாத்தம். இண்டைக்கு பிடிபட்டீங்கள்."

"அய்யோ! இல்லை இல்லை இண்டைக்குத்தான்...... பசிக்குது........ அதுதான்....... நாலு கிழங்குதான்." தங்கனின் மெல்லிய குரல் அழுகையில் விம்மலுடன் வெளி வந்தது.

"ஆரிட்டை சொல்லுறாய் களவெடுக்கிற கையை முறிச்சு விடுறன்."

தொம் தொம் என்று மிதித்தார்கள். கண் முன்னால் பிள்ளை அடிபடுவதைப் பார்க்க அவன் உடல் எல்லாம் பதறியது.

"அய்யோ! என்ரை பிள்ளை பசியிலை எடுத்திட்டுது. பாவம் அடிக்காதையுங்கோ. குழந்தைப் பிள்ளை." அவன் குரல் பொருட்படுத்தப்படவில்லை.

அவர்கள் உதைத்ததில் வேலியோரம் விழுந்தான். துவண்டுபோன தங்கனை தூக்கிப் போட்டார்கள்.

வந்து விழுந்தவனை அவன் வாரி எடுத்துக் கொண்டான். "உங்களுக்கு அடிச்சது காணாதுதான். இனி இந்தப் பக்கம் உங்களைக் காணக் கூடாது. ஓடுங்கோ." அவர்கள் உள்ளே போக அவன் நெஞ்சு பதற தங்கனைப் பார்த்தான். சட்டை கிழிந்து, முகம் வீங்கி, உதடு வெடித்து, இரத்தம் வர, தங்கன் கண்கள் சொருக 'அப்பா' அப்பா' என்று முனகினான்.

"அப்பா!" அவங்கள் அடிச்சது நோகுதப்பா இனி பசிக்குது என்று சொல்ல மாட்டேன். அப்பா ஒரு நாளும் சொல்ல மாட்டன்."

> ஒரு உணர்ச்சி உள்ள மனிதம் அரசியலற்றதாக இருக்க முடியும் என்று நான் நம்பவில்லை. இது சாத்தியமும் இல்லை. அரசியல் என்பது வாழ்க்கைப் போக்கின் மிக முக்கிய பகுதியாகும். – புத்ததேவ் தாஸ் குப்த

www.tamilarangam.net






# சீனா: டெங் ஜியாபிங்கின் சீர்திருத்தக் கொள்கைகள் தொடருமா?

உலகில் மிகப்பெரிய சனத்தொகையைக் கொண்ட (1200 மில்லியன்) அதாவது உலக சனத்தொகையின் ஐந்தில் ஒரு பங்கினரைக் கொண்ட, சீனப் பெரு நாட்டிற்கு பொதுவுடமைக் கொள்கைகளை அறிமுகப்படுத்திய இறுதிப் புரட்சியாளரான டெங் ஜியாபிங் பெப்ரவரி 19ஆம் திகதியன்று, 92வது வயதில் மரணித்த செய்தி, சீன மக்களில் பலருக்கு அதிர்ச்சியையும் துக்கத்தையும் ஏற்படுத்தியது.

**மாவோ சேதுங்கின் தீவிரவாதக் கொள்கைகளைக் கைவிட்டு, முதலாளித்துவப் பாணியில் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி, சீன வல்லரசை உலக சமூகத்துடன் ஒன்றிணைக்கப் பாடுபட்ட பெருமை டெங்கையே சாரும்.**

டெங் 1990இல் தனது இறுதிப் பதவியில் இருந்தும் ஓய்வு பெற்றிருந்தார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக எந்தவித பொது நிகழ்ச்சிகளிலும் டெங் கலந்து கொள்ளவில்லை எனினும் கடந்த தசாப்தத்தின் அநேகமான காலப்பகுதியில் 'மாபெரும் தலைவர்' எனும் பட்டத்தின் பின்னணியில் சீன அரசியலை நெறிப்படுத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது இறுதிக் காலத்தில் 'தோழர்' எனும் பதவியை மட்டுமே வகித்து வந்த டெங், கம்யூனிஸ்ட் கட்சியின் சாதாரண அங்கத்தவராகவே வாழ்ந்து வந்தார். எனினும், உருவத்தில் சிறிய தோற்றத்தைக் கொண்டிருந்த டெங், உலகின் மிகப்பெரிய நாட்டின் பிரகடனப்படுத்தப்படாத தலைவராக விளங்கி வந்தார்.

சீனப் பெருஞ்சுவருக்குள் முடங்கிக் கிடந்த சீனாவில் சந்தைப் பொருளாதாரத்தை அறிமுகப்படுத்திய டெங் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருந்தாலும், அவரின் அரசியல் வாரிசுகள் இக் கொள்கைகளைத் தொடர்ந்து கடைப் பிடிப்பார்களா? அல்லது மீண்டும் தீவிரவாத கம்யூனிசக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படுமா எனப் பலரிடையே சந்தேகம் தோன்றியுள்ளது.

இதேவேளை தைவான், கொங்கொங் மற்றும் பிலிப்பைன்ஸ், வியட்நாம், கொரியா போன்ற பல ஆசிய நாடுகளும் புதிய ஆட்சியாளர்களின் அடுத்த நகர்வை எதிர்பார்த்த வண்ணமுள்ளன.

குறிப்பாக, கொங்கொங்கின் பொருளாதாரமும், பொதுநல வாழ்க்கை முறையும் சீனாவின் ஸ்திரத்தன்மையில் தங்கியிருக்கின்றது என்பதை, கொங்கொங்கின் அரசியல்வாதிகளும் வர்த்தகர்களும் உணர்ந்துள்ளனர்.

யூலை மாதம் முதலாம் திகதி கொங்கொங், சீனாவின் ஒரு பகுதியாக மீண்டும் இணையும்போது, கொங்கொங்கிற்கு ஓரளவு சுயாட்சி வழங்கும் வண்ணம், "ஒரு நாடு, இரண்டு கட்டுமான அமைப்பு" எனும் கொள்கை கடைப்பிடிக்கப்படும் என டெங் உறுதிமொழி அளித்திருந்தார். ஆனால், புதிய ஆட்சியாளர்கள் இக் கொள்கையை நடைமுறைப்படுத்துவார்களா என பல கொங்கொங் வாசிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

"தனது நாட்டினை மாற்றியமைத்த தலைவராக டெங் விளங்கினார்" என, கனேடியப் பிரதமர் ஜீன் கிரச்சயன் கூறியுள்ளார். இதேவேளை "கடந்த இரு தசாப்தங்களாக உலக அரங்கில் டெங் ஒரு குறிப்பிடத்தக்க நபராக விளங்கினார்" எனக் கூறிய அமெரிக்க சனாதிபதி பில் கிளின்டன், "அமெரிக்காவுடனான உறவுகளை சாசுவாசப்படுத்துவதற்கான பிரதான உந்து சக்தியாக இவர் விளங்கினார்" என்றும் கூறியுள்ளார். "சீன வரலாற்றின் பெருந் தலைவர்களில் ஒருவராக டெங் கணிக்கப்படுவார்" என, பிரான்சின் சனாதிபதி ஜக் சிராக் புகழாரம் சூட்டியுள்ளார்.

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தின் கிராமப்புறத்தில், வசதியானதொரு குடும்பத்தில் 1904ஆம் ஆண்டு டெங் பிறந்ததுடன் "நல்ல பையன்" எனும் பட்டப் பெயரையும் பெற்றுக் கொண்டார். புத்த மதத்தில் பக்தி சிரத்தையுடன் திகழ்ந்த இவரது தந்தையாருக்கு நான்கு மனைவிமார் இருந்ததுடன், 10 கெக்டேயர் பரப்பளவு கொண்ட நிலமும், 16 அறைகள் கொண்ட பண்ணை வீடும் இருந்தன.

வீட்டில் வைத்து இவருக்கு பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டது. அவரது கிராமத்தில் படிப்பறிவுள்ள ஒரு சிலரில் ஒருவராகத் திகழ்ந்த இவர், 11 வயதில் அயலிலுள்ள தனது குடும்பத்தினருக்குக் கடிதங்கள் எழுதத் தொடங்கினார்.

மேலும் ஓரளவு பிரெஞ்ச் மொழியையும் கற்றுக்கொண்ட டெங், பதினாறு வயதில் தனது மாமனார் ஒருவருடன் கப்பலில் பிரான்சுக்குப் பயணமானார். பாரீஸ் வாழ்க்கை இவரது அரசியல் சிந்தனையை நெறிப்படுத்தியது மட்டுமன்றி, பிரான்சிய உணவுப் பதார்த்தங்களிலும் அதீத நாட்டத்தை ஏற்படுத்தியது.

1926இல் மீண்டும் சீனாவுக்குத் திரும்பி வந்த டெங், இராணுவக் கல்லூரி ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றியதுடன், சங்காய் நகரின் கம்யூனிசக் கட்சியிலும் மறைமுகமாக வேலை செய்தார்.

சீனாவின் சியாங்கை சேக்கின் படைகளுடன் நகரங்களில் போராடுவதை விடுத்து, கிராமப்புறங்களில் நீண்டதொரு போராட்டத்தை நடாத்தும் மாவோ சேதுங்கின் திட்டத்திற்கமைய கிராமங்களில் போராளிகளை நிலை நிறுத்துவதில் உதவி புரிந்தார்.

- சாள்ஸ். தேவசகாயம் -

மாவோ சேதுங்கின் பிரபல்யமான 'நீண்ட பயணத்தில்' டெங் 1934இல் சேர்ந்து கொண்டார். 9600 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்த சீனாவின் இக் கம்யூனிச செம்படையினர், 1949இல் சியாங்கை சேக் மற்றும் தேசியவாதிகளைத் தோற்கடித்து வெற்றி கொண்டனர். சீனப் பெருநிலப் பகுதியில் இருந்து தைவானுக்குத் தப்பியோடிய இத் தேசியவாதிகள் இன்றும் தமது குடியரசே உண்மையான சீனக் குடியரசு என வாதாடி வருவது குறிப்பிடத்தக்கது.

டெங் மூன்று தடவைகள் மணம் முடித்தார். கல்லூரிக் காதலியான இவரது முதலாவது மனைவி 24 வயதாகவிருக்கும் போதே மரணத்தைத் தழுவிக் கொண்டார். 1933இல் இவர் அரசியல் நெருக்கடிக்குள்ளாகியதனை அடுத்து இரண்டாவது மனைவி இவரை விட்டுப் பிரிந்து சென்றார்.

யூனான் மாகாண தொழிலதிபர் ஒருவரின் மகளான இவரது மூன்றாவது மனைவி 1938இல் கம்யூனிசக் கட்சியில் சேர்ந்திருந்தார். ஓராண்டு கழித்து மாவோ தங்கியிருந்த குகை இருப்பிடத்தின் முன்னால் டெங் இவரைக் கைப்பிடித்தார். இவர்களுக்கு மூன்று பெண் பிள்ளைகளும், இரண்டு ஆண் பிள்ளைகளும் உள்ளனர்.

பொருளாதாரம் சம்பந்தமாக டெங்கின் மாறுபட்ட கொள்கைகளும், மாவோ சேதுங்கின் எதிர்ப்பாளருடன் அவருக்கிருந்த தொடர்புகளும், சீனப் பண்பாட்டுப் புரட்சியின் போது இரு தடவைகள் அரசியல் ரீதியான நெருக்கடிகளைத் தந்தன. உழவு இயந்திரத் தொழிற்சாலை ஒன்றிற்கு வேலைக்காக அனுப்பப்பட்ட இவர், 1973இல் மீண்டும் முன்னணிப் பதவிக்கு வந்தார். ஆனால், திரும்பவும் 1976இல் பதவி இறக்கம் செய்யப்பட்டார்.

1976இல் மாவோ சேதுங் இறந்ததனையடுத்து, இரு ஆண்டுகளாக இடம்பெற்ற அதிகாரப் போட்டியில் இவர் வெற்றி பெற்றார். 1977இல் உதவிப் பிரதமராக இவர் நியமிக்கப்பட்டதானது, சீர்திருத்தத் திட்டத்தினை முன்வைக்கத் தேவையான அதிகாரத்தை இவருக்களித்தது. மாவோ சேதுங்கின் மனைவியும், முன்னாள் நடிகையுமான ஜியாங் குவிங்கையும் அவரது 'நால்வர் குழு'வையும் வெற்றிகரமாக ஓரங்கட்டிய டெங், தலைமைப் பதவி தனக்குக் கிடைக்கும் வண்ணம் தன்னை நிலைப்படுத்திக் கொண்டார்.

இதன் பிற்பாடே, அதாவது 1978இல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தனது பொருளாதார சீர்திருத்தக் கொள்கைகளை முன்வைத்தார்.

**"பூனை கறுப்பா அல்லது வெள்ளையா என்பது முக்கியமல்ல. அது எலி பிடிக்கிறதா என்பதே முக்கியமானது""**

என டெங் ஜியாபிங் தனது தாராளக் கொள்கைகளை நியாயப்படுத்திக் கூறியது பிற்பாடு பிரபல மேற்கோளாகக் கணிக்கப்பட்டது.

விவசாய சமூகங்களை டெங் நீக்கி, தனிப்பட்ட தொழில்கள் சிலவற்றை அனுமதித்ததுடன், ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்வதற்காக விசேட பொருளாதார வலயங்களையும் நிறுவினார்.

1979இல் டெங் அதிகாரத்துக்கு வந்தபோது, நகரவாசி ஒருவன் ஒரு கறுப்பு – வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டியை வாங்குவதற்கு ஓராண்டு சம்பளம் தேவையாகவிருந்தது. 18 ஆண்டுகளின் பின் டெங் இறந்தபோது, ஒரு சராசரி நகரவாசி குளிர்சாதனப்பெட்டி, துணி துவைக்கும் இயந்திரம், ஒரு வண்ணத் தொலைக்காட்சி ஆகியவற்றை வாங்க முடிந்ததுடன், சிலர் தமது சொந்த வீட்டையும் வாங்கக் கூடியதாக பொருளாதார நிலை மாறியிருந்தது.

வசதி படைத்த குடும்பத்தில் பிறந்தமை, தொழிலதிபரின் மகளை மணம் முடித்தமை மற்றும் பாரிசில் சில காலம் வாழ்ந்தமை என்பன இத் தாராள பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்க உந்துதல்



அளித்திருக்கலாம். மேலும் மாவோ சேதுங்கின் பண்பாட்டுப் புரட்சியின்போது டெங்கினுடைய மகனும் இராணுவத்தினரின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் ஆனதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் அரசியல் சுதந்திரம் எனும் விடயத்திலோ, "இரும்புக் கையுடனேயே" இவர் ஆட்சி செய்தார்.

**உதாரணமாக, அரசியல் சுதந்திரம் வேண்டியும், அதிகரித்து வரும் ஊழல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சீன மாணவர்கள் பெய்ஜிங்கின் புகழ்வாய்ந்த தியனமன் சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்காகத் திரண்டபோது இராணுவ டாங்கிகளின் உதவியுடன் இவ் ஆர்ப்பாட்டத்தை மூர்க்கத்தனமாக அடக்கினார். தனது சொந்த மக்களின் மீதே துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர் எனும் நீங்காத வடுவை டெங்கிற்கு இது ஏற்படுத்திவிட்டது.**

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான ஜியாங் செமின் தற்போதைய தலைமைப் பதவியை ஏற்றுள்ளார். டெங் நீண்ட காலம் சுகவீனமாக இருந்தபோது தனக்கு ஆதரவானவர்களைத் திட்டமிட்ட ரீதியில் முக்கிய பதவிகளில் நியமித்திருந்தார். சீனத் தலைவர் ஒருவரின் மறைவின் பின்பாக ஏற்படும் அதிகாரப் போட்டி வழமையாக இரத்தக் களரியில் முடிவடைந்தாலும், டெங்கின் மேற்கூறிய நடவடிக்கைகளால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளிலே தற்போதைக்கு மாற்றம் ஏற்படாது என எதிர்பார்க்கலாம். கம்யூனிஸ்ட் கட்சியின் 15வது காங்கிரஸ் கூட்டம் ஒக்டோபர் மாதத்தில் நிகழும் வரை, செமின் தனது அதிகாரப் பிடியை வைத்திருப்பார்.

சீனாவின் மிகப்பெரிய நகரமான சாங்காயின் முன்னாள் நகர பிதாவான 70 வயதான செமின் ஜனாதிபதி, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், மற்றும் இராணுவத் தலைமையதிகாரி எனும் மூன்று முக்கிய பதவிகளை வகிக்கிறார். "துப்பாக்கி முனையில் இருந்தே அரசியல் அதிகாரம் வருகிறது" எனும் மாவோ சேதுங்கின் கூற்றிற்கிணங்க கடந்த ஏழு ஆண்டுகளாக மூன்று மில்லியன் வீரர்களை அடக்கிய இராணுவத்தைத் தனது ஆளுமைக்குள் கொண்டு வருவதற்காக உழைத்தார்.

தனது முதலாளித்துவப் பாணி சீர்திருத்தங்கள் எதிர்வரும் நூறு ஆண்டுகளுக்கு சீனாவை வழிநடத்திச் செல்லும் எனும் டெங்கின் கூற்றை விஞ்சும் வகையிலே, தான் சீர்திருத்தங்களில் ஈடுபடுவேன் என செமின் உறுதிமொழி அளித்துள்ளார். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்



## முதலாம் பாகம்

### அத்தியாயம் பன்னிரெண்டு

(தொடர்ச்சி)

லியோன் யூரிஸ்

முதற் சில வாரங்களில் எல்லோரும் ஒரு குழப்பநிலையில் இருந்தார்கள். ஆனால், ஆகே மட்டும் அமைதியாக இருந்தார்.

ஜேர்மன் நிர்வாகமும், ஆக்கிரமிப்புப் படைகளும், அருமையான வாக்குறுதிகளை அள்ளி வீசினர். டென்மார்க் காரர்கள் அவர்களைப் போலவே ஆரியர்கள் என்றார்கள். உண்மையில் எங்கள் சகோதரர்கள், ஆக்கிரமிப்பின் உண்மையான நோக்கம் டென்மார்க்கை போல்ஷ்விக்குகளிடம் இருந்து (Bolshevkis) காப்பாற்றுவதே என்றார்கள். டென்மார்க் தன் உள்விவகாரங்களைத் தானே நடத்திக்கொள்ள அனுமதிக்கப்படும் என்றார்கள். உண்மையில் டென்மார்க் ஒரு மாதிரிப் பாதுகாப்பு ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமாக (Protectorate) விளங்கும் என்றார்கள். இப்படியாக ஆரம்ப அதிர்ச்சி நீங்கியதும். இயல்பு நிலைமைக்கு வாழ்க்கை திரும்புவது போலிருந்தது.

மதிப்புக்குரிய கிறிஸ்ரியன் அரசர், கொப்பன்ஹேஹனில் (Copen-Hagen) உள்ள அமாலியன் போர்க் (Amalienborg) மாளிகையில் இருந்து தனது தினசரி குதிரைச்சவாரியைத் திரும்பவும் ஆரம்பித்திருந்தார். அவர் வீதிகளூடாகப் பெருமையுடன் குதிரையை ஓட்டிச் சென்றார். அவரது மக்களும் அவரைப் பின்பற்றினர். அதாவது அமைதிமுறை எதிர்ப்பு (Passive resistance), அந்நாட்களின் இலக்கணமாக இருந்தது.

ஆகே சொன்னது சரியாய்ப் போயிற்று. கரேன் தன் பாடசாலைக்கும், நடன பாடங்களுக்கும் செல்லத்தொடங்கினாள். எதுவுமே நடக்காததுபோல், ஆல்போர்க்கில் (Aolborg) வாழ்க்கை தொடர்ந்தது.

1941ம் வருடம் வந்தது. ஜெர்மனியர் ஆக்கிரமித்து எட்டு மாதங்கள் ஆகிற்று. ஒவ்வொரு நாளும் கழியக்கழிய ஜேர்மனியர்க்கும், அவர்களது மாதிரிப் பாதுகாப்பு ஆளுகைக்குட்பட்ட பிரதேசப் பிரஜைகளுக்கும் இடையில் மனக்கசப்பு வளர்வது தெளிவாயிற்று. கிறிஸ்ரியன் அரசர் தொடர்ந்தும், வெற்றிகொண்ட அவர்களுக்கு மதிப்பளிக்காமல் எரிச்சலூட்டி வந்தார். மக்கள் கூடக் கூடியவரை அவர்களைப்பற்றிப் பாராமுகமாக இருந்தும், அதிலும் விட அவர்களின் பகட்டான நடைஉடை பாவனைகளையும், அவர்களுடைய பிரகடனங்களையும் பற்றிக் கேலிசெய்தும் மகிழ்ந்தனர். டென்மார்க்காரர்கள் எவ்வளவுக்கெவ்வளவு கூடச் சிரித்தார்களோ, அவ்வளவுக்கவ்வளவு ஜேர்மனியரின் கோபமும் ஏறிச்சென்றது.

ஜேர்மன் ஆக்கிரமிப்புத் தொடங்கிய நேரத்தில் டென்மார்க்காரன் யாருக்காவது ஏற்பட்டிருக்கக் கூடிய மாயை, விரைவிலேயே கலைந்தது. ஜேர்மனியரின் பெரும் திட்டத்தில் டென்மார்க் இயந்திரங்களுக்கும், டென்மார்க்கிய உணவுக்கும், அதன் புவியியல் அமைப்புக்கும் உரிய இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஜேர்மனியப் போர் இயந்திரத்தின் ஒரு பல் சக்கரமாக, டென்மார்க் மாறவேண்டிய தேவை இருந்தது. தங்களுடைய சக ஸ்கண்டி நேவியர்களான நோரவேக்காரர்களின் உதாரணத்தை அடியொட்டி, 1941இன் நடுப்பகுதிகளில் டென்மார்க்காரரும் ஒரு சிறிய, ஆனால் மிக உறுதிகொண்டிருந்த தலைமறைவு எதிர்ப்பு இயக்கத்தை (Underground) உருவாக்கிக் கொண்டனர்.

"மாதிரிப் பாதுகாப்பு ஆளுகைக்குட்பட்ட பிரதேச" ஜேர்மன் கவர்னராய் இருந்த டொக்டர் வேர்ணர் பெஸ்ட் (Dr.Werner Best) டென்மார்க்கியர் அமைதியாக ஒத்துழைக்கும் வரை, மிதவாதக் கொள்கையைக் கடைப்பிடிப்பதை ஆதரித்து வந்தார். டென்மார்க்கியருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மற்றைய ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளோடு ஒப்பிடும்போது, மிக மென்மையாக இருந்தன. எப்படியிருப்பினும், தலைமறைவு எதிர்ப்பியக்கம் வளரத் தொடங்கியது. எதிர்ப்பியக்கப் போராளிகள், ஜேர்மன் ராணுவத்தோடு நேரடி மோதல்களில் ஈடுபடமுடியாவிடினும், பொதுவான ஒரு மக்கள் எழுச்சியை நிகழ்த்த முடியாமல் இருந்தாலும் ஜேர்மன்காரர்கள் மேல் தங்களுக்கிருந்த வெறுப்பைக்காட்ட ஒரு வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அது நாசவேலை.

டாக்டர் வேர்ணர் பெஸ்ட் கலவர மடையவில்லை. இந்தப் புதிய சவாலுக்கு முகம் கொடுக்கும் வகையில், டென்மார்க்காரருள் இருந்த நாஸி அனுதாபிகளை ஒரு அமைப்பாக்க அமைதியாக நடவடிக்கை எடுத்தார். ஜேர்மன் ஆதரவிலான ஹிப்போ கோர்ப்ஸ் (Hipo Corps) தங்கள் சொந்த மக்களுக்கெதிராகப் பயங்கரமான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒரு பயங்கரவாதக் குழுவாக மாறியது. ஒவ்வொரு நாசவேலை நடவடிக்கையும், ஹிப்போக்களின் எதிர் நடவடிக்கையாற் பதிலளிக்கப்பட்டது.

ஜேர்மனிய ஆக்கிரமிப்பின் காலம் மாதங்களையும் வருடங்களையும் தாண்டி, உருண்டு கொண்டிருந்தபோது கரேனும் தனது பதினொராவது, பன்னிரண்டாவது பிறந்தநாட்களை, வாழ்க்கை இயல்பாக நடைபெறுவதுபோல் தோற்றமளித்துக் கொண்டிருந்த, தொலைதூர ஆல்போக்கில் கடந்து வந்தாள். நாசவேலை பற்றிய செய்திகளோ, இடைக்கிடை கேட்கும் சூட்டுச் சத்தங்களோ, அல்லது குண்டு வெடிப்புக்களோ ஒரு உடனடிப் பதற்றத்தை மாத்திரம் உண்டாக்கின.

கரேன் வாலைக்குமரியாய் முகிழ்க்கத் தொடங்கினாள். தாய் தந்தையாரையும், பெண் சிநேகிதிகளையும் தவிர்ந்த வேறு ஆட்களைப்பற்றி ஆழமாக அன்பு செலுத்துவதால் ஏற்படும் உற்சாக வெள்ளங்களையும், ஏமாற்றங்களையும் அனுபவிக்கத் தொடங்கினாள். பாடசாலையின் சிறந்த உதைபந்தாட்ட வீரனான மோர்க் சொரென்சன் (Morgens Sorensen), கரேனில் அன்பு கொண்டிருந்தான். இதனால், மற்றப் பெண்கள் இவளில் பொறாமைப்பட்டனர்.

நாணத்துடன் அவள் நடனமாடிய விதத்தால், அவளது நடன ஆசிரியர் மேற்றாவையும், ஆகேயையும் கரேனை கொப்பன் ஹேஹனின், றோயல் நடனக்குழுவில் நடனமாடச் சேர்க்கும்படி வற்புறுத்தினார். அவள், "வயதுக்குமீறிய உணர்ச்சி பாவங்களை நடனத்தின் மூலம் வெளிக்கொணரும் ஒரு கொடைபெற்ற பிள்ளை" என அவர் சொன்னார்.

1943 ஆரம்பம் வந்தபோது ஹான்சன் தம்பதியினர் மேலும் மேலும் கலக்கமடைந்தனர். டென்மார்க் தலைமறைவு எதிர்ப்பியக்கம் நேச நாட்டுப்படைகளின் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டிருந்ததோடு, யுத்த தேவைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளினதும் விநியோகக் களஞ்சியங்களினதும் நிலையங்கள் இருக்கும் இடங்களைப்பற்றிய முக்கிய தகவல்களை வெளியே அனுப்பினர். அவர்கள் றோயல் விமானப்படையின் மொஸ்குயிற்றோ குண்டுவீச்சு (Mosquito Bombers) விமானங்களுக்கு இலக்குகளை அடையாளம் காட்டி மேலும் ஒத்துழைத்தனர்.

ஹிப்போசும், வேறு ஜெர்மனியர் ஆதரவிலான பயங்கரவாதக் குழுக்களும், எதிர் நடவடிக்கைகளைத் தீவிரமாக்கினர். இவர்களது நடவடிக்கைகள் அதிகரிக்க அதிகரிக்க ஆகே யோசிக்கத் தொடங்கினார். ஆல்போர்க்கில் எல்லோரும் கரேன் எங்கிருந்து வந்தவள் என்பதை அறிந்திருந்தனர். இதுவரையில் டென்மார்க் யூதர்களுக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையேனும் திடீரென எதுவும் நடக்கலாம். ஹிப்போஸ் ஜெர்மனியருக்கு கரேனின் விபரமனைத்தும் கொடுத்திருப்பர் என்பது அவருக்கு நிச்சயமாகத் தெரிந்தது. ஆகேக்கு நல்ல தொழில் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்றும் கரேனுக்கு நடனமாட நல்ல பயிற்சி அளிக்கமுடியும் என்றும் சாட்டைச் சொல்லிக்கொண்டு ஆல்போர்க் வீட்டை விற்றுவிட்டு கொப்பன் ஹேஹனுக்குச் செல்ல முடிவு செய்தார்.

1943 முதுவேனிற் காலத்தில், ஆகே கொப்பன் ஹேஹனில் ஒரு சட்ட நிறுவனத்தில் இணைந்து கொண்டார். அங்கேயிருந்து இலட்சக்கணக்கான தாங்களும் அடையாளம் பார்க்க முடியாமல் கலந்து விடலாம் என்று நினைத்தனர். கரேன் தனது சொந்தக் குழந்தை என்று நிரூபிக்கத் தேவையான பிறப்புச் சான்றிதழ், மற்ற ஆவணங்களையும் போலியாகத் தயாரித்துக் கொண்டனர். கரேன், மோர்க்கென்ஸ் சொரென்சனுக்கு பிரியாவிடை கூறிவிட்டுச் சுக்குநூறாய் உடைந்த இதயத்தின் வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

ஹான்சன் தம்பதியினர் சோட்டேடாம்ஸ் டொசரின்ஜனில் (Sortedams Dosseringen) ஒரு அழகான வசிப்பிடம் ஒன்றைப் பெற்றுக்கொண்டனர். அது ஒரு மரங்கள் நிறையக் கொண்ட பாதையாகும். செயற்கைக் குளமொன்றைப் பார்த்தபடி அமைந்திருந்தது. இதன் குறுக்காக ஏராளமான பாலங்கள் பழைய நகரத்தினுள் இட்டுச் சென்றன.

மீள்குடியமர்தலின் தாக்கங்கள் குறையத் தொடங்கியதும், கரேன் கொப்பன் ஹேஹனை விரும்பத் தொடங்கினாள். அது பூமியில் இருந்த தேவதைகளின் உலகம். கரேனும், ஆகேயும், மக்சிமில்லியனும் அந்நகரச்சிறப்புக்களைக் காண மணிக்கணக்காக நடந்தனர்.

அங்கு ஏராளமான ஆச்சரியப்படக் கூடிய இடங்கள் இருந்தன. துறைமுகத்தைச் சுற்றிச் சிறிய கடல் பெண்ணின் சிலையைத் தாண்டியதும் லான்ஜலஜன் நெடுகவும் – மலர்ந்து சிரித்துக் கொண்டிருக்கும் சிற்றாடல் (Citadel) தோட்டங்களின் ஊடாகவும், கிறிஸ்ரியன் போர்க் (Christian Borg) மாளிகைத் தோட்டத்தின் ஊடாகவும்– நீர்வழிகள்– புராதனமான ஐந்துமாடிச் செங்கல் கட்டிடங்களைக் கொண்ட ஒடுக்கமான சிறுவழிகள் (Alleys) ஊடாகவும் செல்கையில் இவற்றைக் காணக்கூடியதாக இருந்தன. ஒரு போதும் முற்றுப்பெறாத துவிச்சக்கரவண்டிகளின் ஊர்வலங்கள் இருந்தன. ஆல்போர்க்கில் இருக்கும் மீன்சந்தையைக் காட்டிலும் மிகச்சிறந்த மீன்சந்தையொன்று கமல்ஸ்றாண்டில் (Gammel Stand) இருந்தது.

அரச குடும்ப நகைகளை வைத்திருந்த சொர்க்க லோகமான ரிவோலி (Tivoli) – சுற்றிச்சுழலுகின்ற மின்சோடனைகள், குதிரைச்சவாரிகள், திரையரங்குகள், சிற்றுண்டிச்சாலைகள்– மைல்க்கணக்கான மலர்ப்படுக்கைகள், சிறுவர் இசைக் குழுக்கள், விவெக்ஸ் உணவுச்சாலை, வாணவேடிக்கைகள் இவற்றைச் சூழ்ந்தெழும் சிரிப்பலைகள், எல்லாமே மிக அருமையானவை.

ஜேர்மன் நிர்வாகமும், ஆக்கிரமிப்புப் படைகளும், அருமையான வாக்குறுதிகளை அள்ளி வீசினர். டென்மார்க் காரர்கள் அவர்களைப் போலவே ஆரியர்கள் என்றார்கள். உண்மையில் எங்கள் சகோதரர்கள், ஆக்கிரமிப்பின் உண்மையான நோக்கம் டென்மார்க்கை போல்ஷ்விக்குகளிடம் இருந்து (Bolshevkis) காப்பாற்றுவதே என்றார்கள். டென்மார்க் தன் உள்விவகாரங்களைத் தானே நடத்திக்கொள்ள அனுமதிக்கப்படும் என்றார்கள். உண்மையில் டென்மார்க் ஒரு மாதிரிப் பாதுகாப்பு ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமாக (Protectorate) விளங்கும் என்றார்கள்.

தொடரும்...

www.tamilarangam.net



# தமிழீழப் பிரதேசங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அபிவிருத்திச் சேவைகள்

## உலகத்தமிழர் ஒன்றியம் வேண்டுகோள்

சூரியக்கதிர் என்ற இராணுவ நடவடிக்கைகளின் போது பொதுமக்களின் மீது நடாத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சு, எறிகணை வீச்சு என்பன தமிழர்களை அவர்களது குடியிருப்புக்களை விட்டு ஒட்டு மொத்தமாக ஓடத் தூண்டின. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த மக்களுக்கு சத்ஜெய இராணுவ நடவடிக்கை சொல்லொணாத்துயரம், மரணம், அவயவ இழப்புக்களை ஏற்படுத்தியதுடன் வன்னி வாழ் மக்களையும் பாதித்தது.

எனவே இம்மக்களுக்கு உதவி வழங்க விரும்புவோர் வடக்கு கிழக்குப்பகுதியில் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான கட்டமைப்பைக் கொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பில் தமிழர்களை அடிபணிய வைக்கும் ஆயுதமாக சிறிலங்கா அரசு பயன்படுத்தும் உணவு மருந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களை வழங்கும்படி உலகத்தமிழர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## போலியோ எதிர்ப்பு தினம் அமுல்படுத்தல்

சர்வதேச போலியோ எதிர்ப்பு தினங்களான 7.9.96, 12.10.96 ஆகிய இரு தினங்களிலும் முதல்நாளே மருந்து வந்து சேர்வதால்அதனை மருந்து வழங்கும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்ல தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது வாகனத்தை வழங்கி உதவியதுடன் இத்தினங்களின் முக்கியத்துவத்தையும், மக்களுக்கு விளம்பரப்படுத்தி பெரும்பான்மையான குழந்தைகளுக்கு இம்மருந்து கிடைக்கக்கூடியதான அறிவிப்பினைச் செய்வதற்கும் தனது வாகனமொன்றை கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவில் வழங்கியுதவியுடன் அறிவிப்பினையும் செய்துதவியது. மேலும் இதற்கான தொண்டர்களையும் அவர்களுக்கான பயிற்சி வழங்கல் செலவையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பொறுப்பேற்றது.

13 போசாக்கு நிலையங்களுக்கு நடமாடும் மருத்துவசேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கான மருத்துவப் பிரதிநிதியிடம் கோரியுள்ளது.

## வைத்தியசாலை ஊழியர்களுக்கான உதவி:

அரச வைத்தியசாலைகளில் பணிபுரியும் 94 ஊழியர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கிளி மாவட்டத்தில் உணவல்லாத பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், முல்லை மாவட்டத்திலும் அரச வைத்தியசாலை ஊழியர்களுக்கு (இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த காரணத்தால்) உணவல்லாத பொருட்கள் வழங்கப் படவுள்ளது.

அத்துடன், இவ்வாறு இடம்பெயர்ந்த ஊழியர்கள் 07 பேருக்கு தலா 1,000 ரூபா வீதம் மாதாந்தம் உதவிப்பணமும், 25 ஊழியர்களுக்கு வீடு அமைப்பதற்கான தடிகளும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் வழங்கப்படவுள்ளது.

## மலசலகூடம் அமைக்க உதவி:

ஆனைவிழுந்தான் பகுதியில் சுகாதாரத் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க 25 மலகூடங்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் அமைக்கப்பட்டு வருகிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான குடியிருப்புக்களில் 40 மலகூடங்கள் அமைக்கப்படல் வேண்டுமென தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, இம் மல கூடங்களுக்கான தடிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியுள்ளது.

## இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒருநேர உணவு வழங்குதல்:

"சத்ஜெய" இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு அரச நிவாரணம் எதுவும் உடனடியாகக் கிடைக்காத காரணத்தினால், 25.08.96ல் இருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழக ஏற்பாட்டில் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒவ்வொரு வாரத்திற்கு ஒருநேர உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கல் சேவை:

யூ. என். எச். சீ ஆர் இடமிருந்து பெற்ற 10.000 லீற்றர் கொள்ளளவுடைய தண்ணீர் தாங்கி ஒன்றையும், 3,400 லீற்றர் கொள்ளளவுடைய தண்ணீர் தாங்கி ஒன்றையும், 210 லீற்றர் டீசலையும், மன்னார் அரச அதிபரினால் வழங்கப்பட்ட பாரவூர்தியையும் கொண்டு கோணாவில், அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகளில் இடம் பெயர்ந்துள்ள 10,000 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொள்வதுடன், ஜெயபுரம் பகுதியிலும் குடிநீரை வழங்கி வருகிறது.

## வீடமைப்பு உதவி:

"சத்ஜெய" இராணு நடவடிக்கையால் இடம்பெயர்ந்த 1.000 குடும்பங்களுக்கு வீடமைக்கத் தேவையான தடிகளை உடனடியாக வழங்குவதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது.

## உணவு அல்லாத பொருட்கள் வழங்கல்:

இடம்பெயர்ந்த 100 குடும்பங்களுக்கு சமையல் பாத்திரங்களையும், பூநகரிப்பிரிவில் உள்ள 550 குடும்பங்களுக்கு பாய், வாளி, படுக்கைவிரிப்பு, சவர்காரம் போன்ற பொருட்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியுள்ளதுடன், சூரியக் கதிர் 2ல் இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசு உலர் உணவு வழங்காததனால், அவர்களுக்கான உலர் உணவையும் வழங்கியுள்ளது.

மேலும் பூநகரிப் பிரதேசத்தில் 200 தற்காலிக வதிவிடங்களையும், அக்கராயன் வைத்தியசாலைக்கு 02 மலகூடங்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்துக் கொடுத்துள்ளது.

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து செயற்பாடு:

கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவைச் சேர்ந்த 4, 368 குடும்பங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உணவு அல்லாத பொருட்களான பாய், படுக்கைவிரிப்பு, வாளி போன்றவற்றை வழங்கியுள்ளது.

மேலும் அமைதிபுரம், ஆரோக்கியபுரம் பகுதிகளில் வசிக்கும் 450 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மேற்படி உணவு அல்லாத பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

## சுகாதாரம்:

கிளிநொச்சி மாவட்டத்தில் போசாக்கு நிலை குறைவாகவுள்ள 1,000 குழந்தைகளை இனம் கண்டு 14 சமூகநல சேவை நிலையங்களை அமைத்து, 03 மாதங்களுக்கு அக்குழந்தைகளுக்கு ஒருநேர போசாக்குணவு வழங்க மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியுடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்துள்ளது.

## சமைத்த உலர் உணவு வழங்கல்

புத்துவெட்டுவான் கிராமத்திலுள்ள 1,000 குடும்பங்களுக்கு 3 நாட்கள் சமைத்த உணவையும் கோணாவில் ஸ்கந்தபுரம், அக்கராயன், ஊற்றுப்புலம் பகுதிகளில் 200 குடும்பங்களுக்கான உலருணவினையும் தமிழர் புனர்வாழ்வுச் கழகம் வழங்கியுள்ளது

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கும் மரதன் ஓட்டம்

ஆண்டுதோறும் லண்டனில் நடைபெறும் லண்டன் மரதன் (Marathon) ஓட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக கழகத்தின் ஆதரவில் இவ்வருடம் 15 வீரர்கள் பங்குபற்றுகிறார்கள்.

அவர்கள் ஏற்கனவே Haisting என்ற இடத்தில் நடைபெற்ற 1/2 மரதன் ஓட்டத்தில் Silver, Brounce பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

தாயகத்தில் போர்ச்சூழலினால் இடம் பெயர்ந்து வாழும் எமது குழந்தைகளினதும் வயோதிபர்களினதும் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்து வரும் தமிழர் புனர்வாழ் வுக்கழகத்தின் திட்டங்களுக்கு இம்மரதன் மூலம் வரும் நிதி அனுப்பி வைக்கப்படும்.

மரதன் ஓட்டத்தில் பங்குபற்றும் இளைஞர்கட்கு Sponcer செய்வதன் மூலம் நீங்களும் கழகத்தின் புனர்வாழ்வுத்திட்டங்களில் பங்குபற்றலாம். உங்கள் £1.00 அன்பளிப்பு, எமது வீரர்கள் ஒரு மைல் ஓடுவதற்கு ஊக்கு விக்கும். மொத்தமாக 26 மைல் ஓடவுள்ளனர்.

London Marathon 97 லில் பங்குபற்றும் இளைஞர்களை ஊக்குவிக்க விரும்புகிறேன்.

ஊக்குவிக்க விரும்பும் வீரரின் பெயர்

| | |
|---|---|
| 1. M.ராஜேந்திரன் | 2. V.ஆனந்தசோதி |
| 3. S.ஈஸ்வரநாதன் | 4. O.N.தமிழழகன் |
| 5. R.யோகேந்திரன் | 6. S.ராமதாஸ் |
| 7. S.கிருஸ்ணமூர்த்தி | 8. K.கயிலைவாணன் |
| 9. N.யசி | 10.R.முருகானந்தன் |
| 11.T.செல்வரத்தினம் | |

அன்பளிப்பு தொகை £1.00 /மைல்

| | | | |
|---|---|---|---|
| 05 மைல் | £05.00 | 10 மைல் | £10.00 |
| 20 மைல் | £20.00 | 26 மைல் | £26,00 |

அன்பளிப்பை Cheque மூலமோ Money order மூலமோ நேரடியாக எமக்கு அனுப்பலாம்.

பெயர்..............................................................

விலாசம்:..........................................................

....................................................................

நான் அன்பளிக்க விரும்பும் மைல்/அன்பளிப்பு

எதிர்வரும் April 13ம் திகதி இந்த ஓட்டப் போட்டி நடைபெறவுள்ளது. உங்கள் அன்பளிப்புக்களை April 5ம் திகதிக்கு முன் அனுப்பி வைத்து எமது வீரர்களை ஊக்குவிக்கவும்.

## அறிவித்தல்:

மரதன் ஓட்டத்தில் அன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உத்தியோகபூர்வமாகப் பங்குபற்றவுள்ளது. அதில் எம்முடன் இணைந்து செயல்படவோ அல்லது ஓட்டத்தில் பங்குபற்ற விரும்புபவர்களோ எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

Tamils Rehabilitation Organisation
79, Hoe Street, Walthamstow,
London E17 4SA
0181 520 5876
Registered Charity No: 1010029





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# போரும் பொருண்மியமும்

## தமிழீழ மீன்பிடித்துறை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பின்னர், வலையை இரவு 3-4 மணிபோல கடலிலிருந்து எடுத்து கரையை நோக்கி வரத்தொடங்குகிறார்கள். வரும் பொழுதே மீன்களை வலையிலிருந்து தெரிந்து தரம் பிரிக்கிறார்கள். 1980 களில் Trammel net எனப்படும் முப்புரி வலையை பாவிக்கத்தொடங்கினார்கள். இதனால் பிடிக்கப்படும் மீனின் தொகையும் அளவும் சாதாரண விடுவலையால் பிடிக்கப்படும் மீனின் தொகையை விட கூடுதலாகக் காணப்பட்டது. ஆனால், இம்முறையினால் சிறிய மீன்களே பெரும்பாலாகப் பிடிக்கப்படுவதனால் மீன்கள் தொகையில் ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்துமோ என்ற ஐயமும் ஏற்பட்டிருந்தது.



பின்னர் கண்ணாடியிழைப்படகுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்மூலம் 2 அல்லது 3 மீனவர்கள் மட்டும் இரவு நேரம் கழித்துக் கடலுக்குச் சென்று விரைவாகத் தொழிலை முடித்துக் கொண்டு கரை திரும்ப முடிந்தது.

1980 களின் பிற்பகுதியிலே சிறிய இழுவைப் படகுகள் (Trawllers) இக்கரையோரப் பிரதேசங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால் தமிழீழ மீனவர்கள் இரவுத் தொழிலை ஏறக்குறையக் கைவிட்டார்கள். இவ் இழுவைப்படகுகளில் தொழில் செய்வோர் பொதுவாகப் பகல் நேரத்திலேயே தொழில் செய்யத் தொடங்கினார்கள். இவ்வகையான படகுகள் மரத்தாலோ அல்லது (Ferro cement) இரும்புச் சீமெந்தாலோ அல்லது கண்ணாடியிழையினாலோ செய்யப்பட்டவையாக இருந்தன. இவற்றிற்கான படகு கட்டும் தொழிற்சாலைகளாக காரைநகர் சீநோரும் பரம்பரையான மரப்படகுகளை கட்டும் தனிப்பட்டவர்களின் படகு கட்டும் இடங்களும் அமைந்திருந்தன. இழுவைப்படகுகளின் துறைமுகமாக பிரதானமாக மயிலிட்டி, காரைநகர், பருத்தித்துறை என்பனவே விளங்கின.

**பரவைக் கடல் மீன்பிடித்தல்**

விடுவலை தொழிலில் இரவிரவாகப் பிடிக்கப்படும் மீன்களைப் பாதுகாப்பதற்குக் குளிரூட்டப்பட்ட அறையோ அல்லது பனிக் கட்டிகளைப் பத்திரப் படுத்தி மீன்களைப் பாதுகாக்க வசதிகளோ இருக்கவில்லை. கரைக்குக் கொண்டு வரப்படும் மீன்களில் சிறிய ரகங்கள் உள்ளூர் சந்தைக்கு விற்கப்பட்டு பெரிய ரக மீன்கள் கருவாடாகப் பதப்படுத்தப்படுகின்றன.

இழுவைப்படகுகளில் சிறிய குளிரறை ஒன்று ஐஸ் கட்டிகளைக் கொண்டு செல்லக் கூடியதாக அமைக்கப் பட்டிருந்தது. இதனால் பிடிக்கப்படும் மீன்கள் உடனடியாகவே குளிரறையில் பதப்படுத்தக்கூடியதாக விருக்கக் காணப்பட்டது. இழுவைப்படகுகளினால் செய்யப்படும் தொழிலில் பிடிக்கப்படும் நண்டு, சிங்க இறால், பெரிய சிறிய இறால் வகைகளின் தொகை மற்றவகை முறைகளினால் பிடிக்கப்படும் தொகையை விட மிகக் கூடுதலாகக் காணப்பட்டது.

இதனால் மீனவர்களின் வருமானம் கூடினாலும், எதிர்காலத்தில் வருமானத்திலும் பொருண்மியத்திலும் வீழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய சாத்தியங்கள் தோன்றின. ஏனெனில் ,இழுவைப் படகுகளால் சூழல் மிகமிகப் பாதிக்கப்படுவதால் மீன்வளம் அழிய ஒரு காரணமாக அமைகிறது. இதனால் மீன்பிடித்தலே ஒரு கேள்விக் குறியாகிவிடும். தமிழீழ மீனவர்களில் 75-80 வீதமானவர்கள் இத்தொழிலையே செய்வதால் இப்பிரதேசத்தில் செய்யக்கூடிய தொழிலின் மேம்பாட்டுக்கு மிகமிக முக்கியமாகத் தொழில்நுட்ப ஆலோசனைகள் பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அதாவது, மீனவர்களின் படகுகளில் தேவையான உபகர ணங்கள், மீன்பிடி வழிமுறைகள், அறிவுரைகள், மீன்கூட்டத்தை கண்டு பிடிக்கும் கருவிகள் (Fish finder), குளிரறைகள் மீனவர்கள் 4-5 மணித்தி யாலங்கள் உறங்கி ஓய்வெடுக்க வசதிகள், கரைக்கும் படகுக்குமான தொடர்புகள் (radio communication), கடல் நீரோட்டம் காலநிலைக் கணிப்பு என்பனவற்றை முற் கூட்டியே தெரிந்துகொள்ளக்கூடிய அறிவைப் பெறும் மையம் அமைக்கப்படுதல் அவசியமாகிறது.

இவ்வகையான முன்னேற்றங்களைச் செய்வதால் உற்பத்தி செய்யப்படும் மீன்களை உள்ளூர்ச் சந்தைக்கும் மற்றும் இடங்களுக்கும் விற்று மீனவர்களின் பொருண்மியத்தை மேம்படுத்தச் செய்யலாம்.

**ஆக்கம் - தேவராஜன் -**

**தமிழீழ மண்ணின் வளங்களை, நல்முறையில் எவ்வாறு பயன்படுத்தலாம்,பேணலாம் என்பது சம்பந்தமாகவும், எமது மண்ணின் பொருளாதார நல்வாழ்வை எவ்வாறு கட்டி எழுப்பலாம் என்பது சம்பந்தமாகவும் களத்தில் பத்திரிகையில் வெளியிடுவதற்கு கட்டுரைகள், ஆய்வுகள் வரவேற்கப்ப டுகின்றன. விரும்புவோர் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்புகட்கு: 0181 365 0249**

**கணனி மூலம் தமிழ் எழுதப் பயிற்சி**

**Computer Software**
**£20**

**தொடர்புகட்கு: 0181 365 0249**



# தமிழீழ தேசியப்பணியில் அனைத்துலகத் தமிழ் மக்கள்


## அன்னை பூபதியின் ஒன்பதாவது நினைவு எழுச்சி விழா



**அன்னை பூபதி!**

ஆக்கிரமிப்பாளனுக்கு எதிராக எழுச்சி கொண்ட பூகம்பப்புயல்!
தமிழ் மக்களுக்காவும், தாய் மண்ணுக்காகவும் சாகும் வரை
உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகச் சுடர்!!
அன்னை பூபதியின் நினைவுகளோடு எழுவோம். வாருங்கள்!!
தியாகி திலீபனைத் தொடர்ந்து காந்திதேசத்தின் முகத்திரையை
கிழித்தெறிந்த வீரத்தாயை மனதில் ஏற்றுவோம் வாருங்கள்!
தியாகத்தாயின் நினைவினைச் சுமந்து ....
தாயகச் சுமையை நாங்களும் சுமப்போம்!!!

**தமிழ் பெண்கள் அமைப்பினரால் நடாத்தப்படும்**

# "தியாக தீபம்"

**கலைநிகழ்ச்சி**

(பெண்கள் புனர்வாழ்வு நிதியை திரட்டும் முகமாக இந் நிகழ்ச்சி நடாத்தப்படுகின்றது)

காலம்:- 20.04.97 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- பிற்பகல் 4.00 மணி
இடம்:- Forum des Cholettes
6, Avenue 8 Mai 1945
95200 Sarcelles
[Les Flanades அருகாமையில்]

மேலதிக தொடர்புகட்கு:- 01 43 58 11 42


# இலண்டனில் அனைத்துலகப் பெண்கள் தினம்

அனைத்துலகப் பெண்கள் தினமான பங்குனி 8ஆம் திகதி அன்று, இலண்டனில் தமிழ்ப் பெண்களும் அத் தினத்தை நினைவு கூர்ந்தனர். இலண்டன் கிங்ஸ்பெரியில் தமிழர் அகதி




நடவடிக்கைக் குழுவின் பெண் உறுப்பினர்களால் இந் நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது. செல்வி ஜனனி ஜனநாயகம் தலைமை தாங்க நிகழ்ச்சி பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பமானது. இதில் சிறப்பு விருந்தினராக பிரித்தானியக் தொழிற்கட்சியைச் சேர்ந்த பிறெண்ற் வடக்கு தேர்தல் வேட்பாளர் திரு. பரி காடினர் அவர்களும் அவரது மனைவி திருமதி கரோலைன் காடினரும் கலந்து கொண்டனர். திருமதி கரோலைன் காடினர் மங்கள விளக்கிகேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். செல்வி ஜனனி அவர்கள் தனது வரவேற்புரையில், தமிழீழத்தின் தற்போதைய நிலையையும், அதில் பெண்கள் எப்படித் தம்மை மாற்றிக் கொண்டு வாழ்கிறார்கள் என்பதையும் புள்ளி விபரங்களுடன் விளக்கினார். தொடர்ந்து அவர் பேசுகையில், "40 வீதமான தமிழ்ப் பெண்கள் குடும்பங் களை தலைமை தாங்கி நடாத்திச் செல்கின்றனர். இனக்கலவரத்துடன் ஆரம் பமான இப்போர், தமிழ் பெண்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத் தியுள்ளது. அத்துடன் இன்று நடைபெறும் தமிழ்த் தேசிய விடுதலைப் போரிலும் தமிழ்ப் பெண்களின் பங்கு பெரியளவில் உள்ளது. நாளாந்த வாழ்வில் தமிழ்ப் பெண்கள் அதிகளவு அழுத் தத்தினை எதிர் நோக்கு கிறார்கள். அது பலதரப்பட்ட வகையில் உள்ளது. குறிப்பாக, சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிக் குள் சிக்கியுள்ள தமிழ்ப் பெண்கள் ஓர் பயங்கரமான சூழலில் உள்ளனர். தற்போதைய போர்ச் சூழ்நிலை தமிழ்ப் பெண்களின் வாழ்வியலிலும், நடைமுறையிலும் பல மாற்றங்களை ஏற்படுத் தியுள்ளது" எனத் தெரிவித்தார்.

அடுத்ததாக உரையாற்றிய செல்வி.ரதி சிவசோதி அவர்கள், தமிழீழத்தில் பெண்கள் எனும் தலைப்பில், தமிழீழத்தில் பெண் கள் வகிக்கும் மிகமுக்கியமான பங்கை பல உதாரணங்களுடன் விளக்கினார். குறிப்பாக, பெண் விடுதலைக்கு முரணாகவிருந்த சீதனமுறை சட்டரீதியாக தடை செய்யப்பட்டதையும் குறிப்பிட்டிருந்தார்.

சிறப்பு விருந்தினர் திருமதி கரோலைன் காடினர் உரையாற்றுகையில், "அமெரிக்கா – அகதிகளால் நிறையப்பட்டது. பெண்கள் அகதிகள் ஆகும் போது பல பக்கங்களுக்கு இழுக்கப்படுகின்றனர். புதிய இடம், புதிய சூழ்நிலை, பழக்கமில்லாத மனிதர்கள் இவ்வாறாகப் பல உள்ளன. இவற்றுடன் சேர்த்து, தமிழ்ப் பெண்களுக்கு தங்கள் கலாச் சாரத்தைக் காக்க வேண்டிய முக்கிய பொறுப்பும் உள்ளது. இது உண்மையிலேயே கடின மானது. இவ்வகையான பொறுப் புணர்ச்சிக்கு நான் தலை வணங்குகிறேன். எனது கணவர் தமிழ்ச் சமூகத்துடன் கலந்துரையாடி உங்கள் நிலை மைகளை எனக்கு நன்றாக விளக்கினார். நான் அரசியல்வாதி அல்ல. ஆனால் ஒரு பெண் என்பதால் உங்கள் நாட்டில் உள்ள பெண்களின் நிலையை நன்றாக விளங்குகிறேன். பல தமிழ்க் குடும்பங்கள் உலகில் பல நாடுகளிலும் சிதறி வாழ்வதற்கு இதுவும் ஓர் காரணமென நான் நினைக்கிறேன்" என அவர் கூறினார்.

நிகழ்ச்சியின் இறுதியில் "இன அடையாளமும் புலம்பெயர்ந்த ஈழப் பெண்களின் பங்களிப்பும்" எனும் தலைப்பில் குழு நிலைக் கலந்துரையாடல் நடைபெற்றது. செல்வி பா. ஆறுமுகம் இதனை ஆரம்பித்து வைக்க, திருமதி. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், திருமதி குணா வேலுப்பிள்ளை, திருமதி. கோமளா சுந்தரலிங்கம் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக வெளிநாடுகளில் தமிழ்ப் பெண்களின் இன அடையாளத்தை காப்பது பற்றியும், அவர்களின் கலை, கலாச்சாரம் குறித்த நிலைப்பாடு, பிரச்சினைகள் பற்றியும் விளக்கினர். இதனைத் தொடர்ந்து, கலை நிகழ்ச்சிகளாக – சிறீமதி சிவதாரனி சகாதேவன் அவர்களின் மாண வியரின் வீணை இசையும், சிறீமதி லக்சுமி ஜெயன் அவர்களின் மாணவியரின் வயலின் இசையும், விஜயநர்த்தனாலயா மாணவியரின் நடன நிகழ்வும் மிகவும் இனிமையாக நடந்தேறின. திருமதி. லோகா காங்கேயனின் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள்யாவும் நிறைவு பெற்றன. ✷


## முதன்முதலாக ஐரோப்பா தழுவிய மாவீரருக்கான குறும்படப் போட்டி

கலைஞர்களே ! உங்கள் 'கமரா' கண்களைத் திறவுங்கள். உங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சினைகளை படமாக்கிக் கொள்ளுங்கள் !

சமூகத் துடிப்புள்ள உங்கள் கலைப் பார்வை
உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும்.

- ✫ 15 இல் இருந்து 20 நிமிடங்கள் மாத்திரமே திரையில் ஓடக்கூடிய "குறும்படம்" மாத்திரமே உங்களிடமிருந்து போட்டிக்காக எதிர்பார்க்கப்படுகின்றது.
- ✫ இந்தப் போட்டியில் தமிழீழப் பிரஜைகள் எவரும் பங்குபற்றலாம்
- ✫ உங்களை வளர்ப்பதன் மூலம் தேசத்தை வளருங்கள்.

மேலதிக விபரங்கட்கு: -

தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ் ☎ 01 43 58 11 42

www.tamilarangam.net



# உள்ளிருந்து ஒரு கூவல்

கருமை மங்கிய கரிய வீதி
நீண்டு கிடக்கிறது,
இந்த வீதியின் அருகே......
எங்கோ தொலை தூரத்தில்.......
நீங்கள் இருப்பீர்கள்.
ஏனென்றால்,
தமிழீழத்தின் முதுகில்
கரிக் கோடிட்ட யாழ்சாலை இது
அன்று அவசரம் அவசரமாக
உங்களுடன் நானும் வந்தேன்
படகேற இடறியதால்
நான் இங்கால், நீங்கள் அங்கால்
உங்கள் முகவரி
எனக்குத் தெரியாது
என் முகவரியிலும்
நானின்று இல்லை?
கடிதங்கள் வந்தால்
சேர்ப்பார்களாம்
உள்ளதை எழுதினால்
எங்கே சேர்ப்பார்களோ....... என்னை!
பேரிரைச்சலுடன்
கனரக வாகனங்கள்.
போதையில் கண்கள் செருக
உதடுகள் கோணல் மாணலாய்
நெளிய........
முன் பார்த்தறியா முகங்கள்
ஆயுதங்களுடன் நம் வீதியில்
அமைதி போல் தோற்றம் காட்டுது
எம்மூர்....... துயின்று கொண்டிருக்கும்
எரிமலை போலென்பது
எனக்குத் தெரியும்
நேற்றுக்கூட
பெண்ணொருத்தி நாராய்க்
கிழிந்து கிடந்தாள் நடுவீதியில்
சீருடையணிந்தோர்
சீக்கிரம் வந்து விடை பகர்ந்தனர்
"அவர்கள் வேலையிது
பொல்லாதது கவனம்" என்று.
புரியாதா எங்களுக்கு!
இவை தேடும் நோக்கோடு தானே
திடீர்ப் பாய்ச்சல் பாய்ந்து
சுற்றி வளைத்தார்கள்
கோவிலிற்கு குண்டு போட்டவர்
'படத்"துக்காய் எம்மருகே
பக்திகாட்டுகிறார்........
கூப்பிடு தொலைக்கொரு
கூட்டு முகாம் போட்டு
சுற்றிச் சுற்றி வருகின்றனர்
மாலையானதும்
முடங்க வேண்டும் நம்மவர்.
நள்ளிரவு தேவையில்லை
முன்னிரவிலேயே
முற்றத்தில் நடமாட்டம்
மூச்சுக் கூட சத்தமின்றி நசியும்.
அரவம் அடங்கும் வரை
ஆயிரம் வேண்டுதல்.
நித்திரை அற்றுப் போக,
இதயப் படபடப்புடன்
இனியொரு பொழுது விடியும்.
இனியொரு பொழுது விடியும்.
தெரிந்தவரைப் பார்க்க
கண்கள் துளாவும்
அறிந்தவர் மாதிரி
அவரும் நிற்பர் அவர் கண்ணில் பீதி
தூரத்தில் வேலிக்குள் அசைவு
என்னையும் உள்ளிருக்கும்
என் இருப்பிடம்
இன்றோ நாளையோ
எதுவும் நடக்கலாம்
அது உலகுக்கு தெரியாமலும்
போகலாம்........!

- செல்வமணி




## உளவறி விமானங்கள் உழவுக்குச் சென்றனவோ ?

சிங்களக் குடியரசின் சனாதிபதியே!
இனவெறி ஊறிய பட்டத்தரசியே!
'இயலாது' எனும் சொல் - உன்
அகராதியிலும் இல்லையோ!
யாழ் குடா, கிளிநொச்சி, வன்னி......
எனப் புறப்பட்டு,
தேர்தலுக்கென்றே
ஒத்திகைகள் பார்க்கின்றாய்.

சர்வ வல்லமை கொண்ட
முப்படையின் தளபதியாம் நீ
ஆயின்,
உன் இச்சைவழி விமானங்கள்
தன் இச்சையிலே போவதேனோ?
'கிபீர' விமானத்திற்கு - இந்த
திடீர் மறைவெதற்கு?
வை-12 தன்
வழிதவறிப் போனதேனோ?
உந்தன் உளவறி விமானங்களும்
என்ன? உழவுக்குப் போயினவோ?
'புக்காரா' ஏன்
புகைத்துச் சிதறியது?

கரும்புலிகள் தொலைந்ததாக
கனவு வந்து விழிக்கின்றாய்
புலிப்படை அழிந்ததாக
நல்ல பகற்பொழுதில் சொப்பனங்கள்
விமானங்கள் தொலைவதனை
யார்தான் - எந்தத் தளபதிதான்
முன்கூறி உந்தன்
தூக்கம் கலைத்தார்கள்?
விமானத்தின் இயந்திரத்தில்
கோளாறு வந்ததுவோ?
இல்லை - சர்வ வல்லமையில்
'சறுக்கல்' வந்ததுவோ!

இன்று, எண்ணெய் ஊற்றும்
இனவாதத் தீயது
அன்று, உன் அப்பன்
பண்டா மூட்டியது.
அம்மையே!
அப்பனின் - ஒப்பிலாப் புத்திரியே!
தீப்பந்தம் ஏந்தி வந்த
வான்படை விமானங்கள் -
சிறுகுடில்களுக்குத் தீயிட வந்தவை -
காட்டு மரக்கிளையில்
ஏணைச் சிறைகளுக்குள்
கண்மலரும் பூக்களையும்
பொசுக்கிவிட்டுப் போவதற்கே
வான்வெளியில் வந்தன.

அன்றொரு நாள், தலைநகரில்
துறைமுகக் காவலுக்குள்
தண்ணீரில் கரைந்து வந்து
எங்களது வீரர்கள்
முன்னே அமர்ந்திருந்து
உன் கைரேகை பார்த்தார்கள்.
காற்றுடன் கலந்துவரும்
கரும்புலிக்கு அஞ்சித்தான்
நேற்றும் ஒரு 'புக்காரா'
போகுமிடம் சேராது
தலைசிதறிப் போனதுவோ?

செல்வந்தன் செய்த விமானங்கள் -
உனது முகாம் வளவுகளில்
ஊர்ந்தாலென்ன........?
யார் தேய்ந்து கட்டெறும்பாய்
போனாலுமென்ன.......?
உயிர் வதைகள் எங்கேதான்
நடந்தால்தான் உனக்கென்ன.......?
தேர்தல் தோறும் நீ
வெல்ல வேண்டும்
'வறுமைக்கோடு'
இதன் பொருள் மறைந்து
வெகுகாலம் இங்கே
மக்கள் எனும் வர்க்கத்தை
மறந்தே பல காலம்.

நின்பக்கம் வீசும் காற்று
எக்கணமோ........!
அல்ல,
இக்கணமே புயலாய்
மாறல் கூடும்
வாசல் தலத்துக் கூரை
வங்கக் கடலுள்
விழவும் கூடும்
எண்ணெய் ஊற்றும் கைகள்
எரிந்தே போதல் நேரும்
செல்வந்தன் வீட்டு விமானம்
திரும்பியே போதல் நேரும்!

❄

- வதனிலா

www.tamilarangam.net





# உங்கள் கருத்துக்கள்

## கடிதங்கள், ஆக்கங்கள் அனுப்பியோர்

சிவராஜா விஜயரூபன்– நோர்வே, அருள்குமார்–ஜேர்மனி, சி.சுமங்கலி–ஜேர்மனி, மேரி மணாளன்– அவுஸ்திரேலியா, சிறீஸ்கந்தராஜா–சவுதி, ஏகாம்பரம்–பிரித்தானியா, தவமணி மார்க்கண்டு– பிரித்தானியா, ராஜகோபால்– பிரான்ஸ், சுதன்ராஜா– பிரான்ஸ், கனகசபை, ஐ.மோகனதாசன்.

அன்புடன் களத்தில் ஆசிரியர் அவர்கட்கு,

உங்களது தாயகத்து உணர்வுப் பத்திரிகையில் வாசகர்க்கு "உங்கள் கருத்துக்கள்" என்ற பக்கத்தை அறிமுகப்படுத்தியதையிட்டு மனமிக மகிழ்கிறேன்.

– புஸ்பராணி ஜோர்ஜ், ஜேர்மனி

களத்தில் ஆசிரியர் குழுவினர்க்கு,

இனிய வணக்கம்.

பார்க்காதவர்க்கு இழப்பையும், படிக்காதவர்க்கு ஏமாற்றத்தையும் அளித்துவரும் களத்தில், படிப்பவர்க்கு மென்மேலும் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் ஊட்டும்பணி மேலும் சிறப்புடன் வளர களத்தில் பத்திரிகையை வாழ்த்துகிறேன்.

–சி.அருள்மோகன், ஜேர்மனி

### பெண்கள்... அன்றும், இன்றும்

உன்னைப்போல் பெண்ணே நானுமிருப்பதால்
இன்றுதான் கண்ணே வெட்கப்படுகிறேன்!
உங்களின் எண்ணம் அன்று வந்திருந்தால்
எங்களின் மண்ணை என்றோ மீட்டிருப்பேன்!
மண்ணை அன்று நான் எண்ணாத காரணத்தால்–என்
மன்னவனை இன்று நான் எண்ணித் தவிக்கிறேன்!
போராட்டப்பழுவை நீங்களும் சுமப்பதால்
பாராட்டுப் பெறுவது பெண்கள் இனமே!

–பாரதிதாசன், ஜேர்மனி

### விடைபெறும் நேரம்!

ஒட்டிப் பிறந்த உறவோ
ஓர் குழந்தையைச் சுமந்தபடி பின்னே!
வெட்டியெடுத்த தொப்புள் கொடியுறவோ
துயரத்தைச் சுமந்தபடி முன்னே!
தாய்நாட்டைக் காக்கப் புறப்பட்ட
தன்னிகரில்லா வீரமகளிர்!
தாய்வீட்டைப் பார்க்கவந்த
தனிக்காரணமென்ன?

–இ.சம்பந்தன், ஜேர்மனி

### முன்னால் நட நான் பின்னால்

கண்ணே பெண்ணே கருவியுடையாளே
ஒண்ணே ஒண்ணு ஒருதரம் கேளாய்!
பாட்டன் வரவைப் பார்த்து காலம்
ஓட்டிய நாளில் நான் ஈட்டிஎடுத்திருந்தால்
இன்று நீ சுகமாய் வாழ்ந்திருப்பாயே!
பின்னால் இருக்கும் பேத்திக்கும்
இப்பணிவேண்டாம்!
பெண்ணே...... முன்னால் நட நான் பின்னால்
வருவேன்!

–நாவல்அருண், ஜேர்மனி

## இப்படத்திற்கு, வாசகர்களால் எழுதி அனுப்பப்பட்ட கவிதைகளில் ஒரு சிலவற்றை இங்கே பிரசுரிக்கின்றோம்.



### ஒழியாத பெண்மைகள்

தமிழர்கள் வீரமரபில் பிறந்தாயாச்சி–அந்த
தமிழீழத் தாய்மண்ணில் பேய்களாட்சி!
பூவகை பெண்களுக்கு உதாரணம்–இன்று
பூவைக்குள் பெரியதொரு பூகம்பம்!

சுற்றிய சுவர்களுள் படிதாண்டாப்
பெண்மைகள்–இன்று
சுதந்திரப் பறவைகள் வீரவானத்தில்
உச்சங்கள்!
தைரியம் ஊட்டினாய் இரத்தத்தில்
உறுதுணை–எம்
தையலந் தடைகளைத் தாண்டிட
அதற்கேதிணை!

–புஸ்பராணி ஜோர்ஜ்
ஜேர்மனி

### வெள்ளைச் சேலைக் கிழவியின் விளம்பல்

வேண்டினேன் விடுதலை!
வீணர்கள் என்னை விதவையாக்கினர்!!
விடுதலைக்கு விலை விதைவைகளல்ல!
வீரம்தான்! என்பதை விளக்கும் விதமாய்
வெடிக்கும் துவக்குடன் வேடம் பூண்டு
விடுதலை விருப்புடன் வேலைகள் செய்வதால்
வீரத் தமிழர் விழும் நிலைமாறி
விரைவில் வெளிவரும் விடுதலைக் குழந்தை!!

–சி.வித்தகி, ஜேர்மனி

### தாய் சொல்கிறாள்

பெண்ணுக்கே விடுதலைகேட்டது என்காலம்
மண்ணுக்குப் பெண்ணே விடுதலைகேட்பது உன்காலம்
சுந்தரமாய் வளர்ந்த என்மகளே கேள் ஒருசெய்தி
வந்திடும்பார் உங்களால்தான் தமிழீழம்!

–நம்பியார், பிரான்ஸ்

## நல்வழிப்படுத்த வேண்டும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் இராசரத்தினம், சிறிலங்காவிற்கு நன்மை தரக்கூடியதும் வரவேற்கக் கூடியதுமானதொரு போதனை ஒன்றினைக் கூறியுள்ளார். இனப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர், சிறிலங்கா இனவாதிகளை நல்வழிப்படுத்தும் திட்டம் ஒன்றை நீதி அமைச்சர் பீரிஸ் நடைமுறைப்படுத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாது போனால், தீர்வுத்திட்டம் ஓர் ஏமாற்று நடவடிக்கையாக அமையும் என்பதே அவரது ஆலோபனமாகும்.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சந்திரிகா அரசு முன்வைத்த அதிகாரப்பரவலாக்கல் திட்டம், ஒரு போதும் தீர்வாக அமையமாட்டாதென்பது ஒரு புறம் இருக்க, இத் தீர்வுத் திட்டம் கூட சிங்களப் பேரினவாதிகளிடம் இருந்துவரும் தீவிரமான எதிர்ப்புக் காரணமாக நிறைவேற்றப்படுமா என்பதும் பலமான கேள்வியாக எழும்புகின்றது. ஏனெனில், சந்திரிகா அரசு முன்வைத்த தீர்வுத் திட்டத்திற்கு பௌத்த பேரினவாதிகளின் எதிர்ப்பு பலமானதாகவே உள்ளது. இவ் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் நிறைவேற்றப்படின் நாடு பிளவுபட்டுவிடும் எனக் கூச்சலிடும் சிங்கள பேரினவாதிகள், இன்று சிங்கள மக்களுக்கு அநீதி இழைக்கின்றனர். சிறுபான்மை இனங்களால் அச்சுறுத்தல் எழும்புகிறது எனக்கூறி, அதனை விசாரணை செய்வதற்கு பௌத்த சிங்கள விசாரணைக் கமிஷனையும் அமைத்துள்ளனர்.

இவ்விசாரணைக்கமிஷன் முன் பௌத்த சிங்களவர்கள் பலர், பல்வேறு மட்டத்தைச் சேர்ந்தவர்கள் சாட்சியம் அளித்துள்ளனர். இச்சாட்சியங்கள் யாவும், கடந்த கால ஆட்சியாளர்கள் சிங்கள இனத்துக்குத் துரோகம் இழைத்துவிட்டனர் என்ற ரீதியிலேயே அமைந்துள்ளன. ஆகையினால், சிங்களவர் உரிமைகளைப் பேண தொடர்ந்து போராட்டங்களை நடத்துவதோடு, தமிழரின் உரிமைப் போராட்டத்தை இராணுவ பலம் கொண்டு நசுக்கவேண்டுமெனவும் கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் இராசரத்தினம் கூறியிருப்பது போன்று, இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வைக் காண, சிங்களப் பேரினவாதிகளை நல்வழிப்படுத்த அமைச்சர் பீரிஸ் திட்டமொன்றைக் கொண்டு வரவேண்டும் என்பது சரியானதே. அவ்வாறு இல்லாதுவிடின், இனப்பிரச்சினைக்கு ஓர் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை அரசினால் அமுல்படுத்த முடியாது. ஏனெனில், பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் சிந்தனைக்கு மாறுபாடான ஒரு அம்சமும் கடந்த கால சிறிலங்கா அரசியல் வரலாற்றில் இடம் பெற்றதாக இல்லை. எடுத்துக்காட்டாக இனப்பிரச்சினைக்குக் கடந்த காலத்தில் முன்வைக்கப்பட்ட திட்டங்கள் யாவும் இப்பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் எதிர்ப்பினாலேயே கைவிடப்பட்டன என்பதைக் கூறமுடியும். ஆகையினால், முதலில் பௌத்த சிங்களப் பேரினவாதிகள் நல்வழிப் படுத்தப்படவேண்டும் என்பது, தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகவே இருக்கும். ஆனால் இது குறித்து, அமைச்சர் பீரிஸினால் எவ்வளவு தூரம் முன்னேற்றமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென்பது கேள்விக்குரிய ஒன்றே.

ஏனெனில் இவ்விடயம், அமைச்சர் பீரிஸ் எத்தனை தூரம் பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு எதிராகச் செயற்படத்தயாராக உள்ளர் அல்லது செயற்பட முடியும் என்பதுடன் சம்பந்தப்பட்டதாகும். அதாவது, இனப்பிரச்சினைத் தீர்வுக்காக பௌத்த சிங்களப் பேரினவாதத்துடன் மோதுவதற்குத் தயாராக உள்ளாரா? என்பதும், எத்தனை முடிவுகளைக் கொண்டாலும் சந்திரிகா குமாரணதுங்க உட்பட்ட ஏனைய ஆட்சியாளர்கள் இதற்கு ஒத்துழைக்கத்தயாராக உள்ளனரா? என்பதும் முக்கியமானதாகும். ஏனெனில் சந்திரிகா குமாரணதுங்க இன்னமும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளிடம் இருந்து மீண்டு வந்தவராக தன்னை நிரூபிக்கவில்லை. ஆகையினால் பௌத்த சிங்களப் பேரினவாதிகளை நல்வழிப்படுத்தும் திட்டம் என்பது சிறிலங்கா அரசைப் பொறுத்து சாத்தியமானதொன்றாக இருக்கப் போவதில்லை. இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் திட்டம் மூலம் தீர்வு என்பது சாத்தியமானதாக இருக்கப் போவதில்லை. இந்த ரீதியில் சந்திரிகா அரசின் தீர்வுத் திட்டம் என்பது இராசரத்தினம் கூறியிருப்பது போல் ஒரு ஏமாற்று நடவடிக்கையாகவே இருக்கும்.

- ஆசிரிய தலையங்கம், ஈழநாதம் (தமிழீழம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐ.நா. நோக்கி அணிதிரண்ட தமிழீழ மக்கள்

நமது சக்தியை நாளை சரித்திரம் சொல்லும்



ஐ.நா. முன்றலில் தமிழீழத் தேசியத்தின் சின்னமாக....

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்





மாநாட்டில் பங்கெடுத்த பேராளர்களும் பேரணியின் ஒரு பகுதியினரும்...



சுவிஸ் பேரணியைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில்...


T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-0463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 580 8224